The "BHARATI" Reg. No. M. 2456,

மே 1930.




JUN 1930

மாலை 2. மணி 5.

ஓர் தேசிய

# மாதப் பத்திரிகை.

ரா. நாராயணசுவாமி,
ஆசிரியர்.

பிரசுராலயம்:
உத்தமபாளையம்,
மதுரை ஜில்லா.

N30.2.5
198528

# ‘பாரதி’யின் போஷகர்கள்.

1. Messrs. மச்சா முனுஸ்வாமி செட்டியார் & பிரதர்ஸ்,
சென்னை.

2. ஸ்ரீமான் நாகையஸ்வாமி அவர்கள், மானேஜர்,
தேவாரம் ஜமீன், தேவாரம்.

3. ,, T. A. K. அழகர் ராஜா அவர்கள்,
சொந்தக்காரர், மஹேஸ்வரி விலாஸ் ராஜா
எஸ்டேட், தேவாரம்.

4. ,, C. சங்கரலிங்கம் அவர்கள்,
சொந்தக்காரர், ஆனந்த விலாஸ் எஸ்டேட்,
தேவாரம்.

5. ,, சி. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், தேவாரம்.


6. ,, S. ராமலிங்கம் செட்டியார் அவர்கள்,
மிராஸ்தார், கூடலூர்.

7. ,, ப. ச. வேலுச்சாமி அவர்கள்,
ஜவுளி வியாபாரம், கூடலூர்.

8. ,, V. S. சுப்ரமண்யம் அவர்கள்,
மிராஸ்தார், சித்தயங்கோட்டை.

9. ,, பெயர் தெரிவிக்க இஷ்டமில்லாதவர்.

10. ,, ஜான் அந்தோணி ஆஜூ அவர்கள்,
பைசன்வாலி, தேவிகுளம், திருவாங்கூர்.




10 JUN 1930

11. ஸ்ரீமான் T. V. K. காமராஜ பாண்டிய நாயக்கர் அவர்கள், ஜமீன்தார் & முனிசிபல் சேர்மன், போடிநாயக்கனூர்.

12. ,, உ. ம. சே. முகியித்தீன்பிள்ளை ராவுத்தர் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச்சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., கோம்பை.

13. ,, க. ராமராஜ் அவர்கள், மிராஸ்தார், தேவாரம்.

14. ,, K. பண்டார் அவர்கள், மானேஜர், T. C. P. A. ஏலச் சரக்கு விற்பனைக் கம்பெனி, Ltd., பிராஞ்ச், போடிநாயக்கனூர்.

15. ,, K. M. அகமது மீரா அவர்கள், மிராஸ்தார், உத்தமபாளையம்.

16. ,, ராவ்சாகிப் A. S. அழகணன் செட்டியார் அவர்கள், மிராஸ்தார் & மெம்பர், ராமேஸ்வரம் தேவஸ்தானக் கமிட்டி, போடிநாயக்கனூர்.

குறிப்பு:— போஷக சந்தா குறைந்தது ரூபாய் 100.


---

## விளம்பர விகிதம்.

| | | | |
|---|---|---|---|
| பக்கம் | 1-க்கு மாதம் 1-க்கு | ரூ. | 10—0—0 |
| ,, | ½-க்கு ,, | ,, | 5—8—0 |
| ,, | ¼-க்கு ,, | ,, | 3—0—0 |

¼-பக்கத்திற்குக் குறைந்த விளம்பரங்களுக்கு இடமில்லை. விளம்பரத்திற்கு எப்பொழுதும் முன் பணம் அனுப்ப வேண்டும். நீண்ட காலம் விளம்பரஞ் செய்வதற்கும் கலர் பக்க விளம்பர விகிதத்திற்கும் எழுதித் தெரிந்துகொள்ளவும்.

மானேஜர், "பாரதி."



பட‌ங்களுடன் வெளிவந்துலாவும் தேசீய மாலிகை.

மாலை 2. மணி 5.

## பொருள் அடக்கம்.


| தொடர் எண். | | பக்கம். |
|---|---|---|
| 1. | தமிழ் நாடு—ஜனாப் K. அப்துல் சுக்கூர் சாகிப் அவர்கள் | 321 |
| 2. | மாதர் எழுச்சி—ஆசிரியர், "பாரதி" ... ... | 328 |
| 3. | சந்திரனில் உயிர்களுண்டா?—திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.) ... | 328 |
| 4. | கரிபால்டி (இத்தாலி நாட்டு விடுதலை வீரர்)—திரு. சோம. சதாசிவன் அவர்கள் ... | 333 |
| 5. | இந்து முஸ்லீம் பிரிவினை—திரு. வி. எ. பெருமாள் அவர்கள் ... | 361 |
| 6. | ஜான்ஸி மஹாராணி லக்ஷ்மீ பாய்—திரு. N. வேங்கடரமணன் அவர்கள் ... | 372 |
| 7. | ஆசிரியர் குறிப்புகள்: ... ... | 385 |

1. எமது வேலை, 2. "பாரதி"யின் தாமதம், 3. புதிய யுகம், 4. மகாத்மா காந்தியவர்கள், 5. கனம். பட்டேலின் ராஜிணாமா, 6. மகாத்மாவிற்குப் பிறகு ஜனாப். அப்பாஸ் தயாப்ஜி, 7. ஸ்ரீமதி. சரோஜினி தேவியார், 8. அவசர அச்சுச் சட்டம், 9. வேதாரண்யப் போர்க் களம், 10. பண்டித மதன் மோகன மாளவியா.


### படங்கள்.


1. மகாத்மா காந்தியடிகள்.
2. ஸ்ரீமதி. சரோஜினி தேவி.






மகாத்மா காந்தியடிகள்.

ஓர் மாதப் பத்திரிகை.

எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓர்இனம்
எல்லாரும் இந்தியா மக்கள்

எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை
எல்லாரும் இந்நாட்டு மன்னர். (பாரதி.)

ஆசிரியர்: ரா. நாராயணசுவாமி.

| | | |
|---|---|---|
| மாலை 2 | உத்தமபாளையம் 1930-ஆு மேமீ | மணி 5 |

# தமிழ் நாடு.

## ஜனாப் K. அப்துல் சுகூர் சாகிப் அவர்கள்.

(இசைந்த சூலம் கரியுரி போர்வையும் எழில் நீறும்
எனும் ஓசை மலிந்தது.)

வயங்கு பொன்னும் வளரொளி முத்தும் வான்விசித்
தயங்கு மணிகள் தாரகை பேய்க்குந் தமிழ்நாடு.

கடகரி முத்துங் கழையுதிர் முத்துங் கமழ்பூகந்
தடமுதிர் முத்தும் நிலவொளி யுட்குந் தமிழ்நாடு.

தெங்குதிர் சோலைத் தும்பிகள் படையொடு சென்றுடித்
தங்கு மலர்த்தே னுண்டு களிக்குந் தமிழ்நாடு.

பூவுரை பனசச் சுளைசூல் மந்திபு சித்தாரத்
தாவுரை கடுவன் தாங்கியழைக்குந் தமிழ்நாடு.

கொண்டல் நிகர்த்திசை முழவொலி சாரக் கொங்காருந்
தண்டலை மயில்கள் தோகை விரிக்குந் தமிழ்நாடு.

பொங்கு மலர்த்தே னொடுமுக் கனிதேன் புடையோடித்
தங்கிய பண்ணைப் பயிர்கள் வளர்க்குந் தமிழ்நாடு.

சங்கமி லங்குமுச் சங்க மிலங்குஞ் சங்கோடுந்
தங்கமி லங்குமுத் தமிழு மிலங்குந் தமிழ்நாடு.

மருவளர் நிலமா மகளணி கலனென மகிழ்பூப்பத்
தருநிக ரைங்காப் பியநூல் தவழுந் தமிழ்நாடு.

கண்டினுஞ் சுவைமுப் பாலொடு கம்பன் கவியோடுந்
தண்டியி னூலுந் தரணி குலாவுந் தமிழ்நாடு.

விரைமலர் சூடுங் குழலிய ரெங்கும் விளையாற்றித்
தரைபுகழ் பன்னூற் றுறையினில் மூழ்குந் தமிழ்நாடு.

துலைபுகு மாயர்கள் நீதிமி குத்தவர் சொல்மாறுத்
தலைதரு வள்ளல்கள் தம்புக ழோங்குந் தமிழ்நாடு.

போரணி நிற்குங் குமரர்க ளைப்பெறு புகழ்வாகைத்
தாரணி மங்கையர் வீரமி லங்குந் தமிழ்நாடு.

உண்ணென வறியோர்க் குணவை யருத்தி யுபிரோம்புந்
தண்ணெனு முள்ளத் தவர்கள் தழைக்குந் தமிழ்நாடு.

நூலார் கலையும் நுண்மா ணுழையும் நுகர்கேள்வித்
தாலார் நிலையுந் தரு"பா ரதி"வாழ் தமிழ்நாடு.

198528



# இந்திய மாதர் எழுச்சி *

ரா. நாராயணசுவாமி, ஆசிரியர், "பாரதி."

கடவுள் அன்பின் வடிவம், அருள் மயம், ஞான ஜோதி. அவர் எல்லோருக்கும் எல்லாவற்றிற்கும் முதல்வர்; அவர் எவருக்கும் எவைகளுக்கும் ஆதித் தாய் தந்தை. அவர் குற்றங் குறையற்றவர். அவர் உலகத்திலுள்ள அனைத்தையும் நியதியின்படி சிருஷ்டித்திருக்கிறார். பாலும் வெண்ணெயும் போன்று நகமும் சதையும் போன்று ஒற்றுமையாயும், இரு கண்கள் போன்று சமத்துவமாயும் இருந்து வாழும்படி ஆண்களையும் பெண்களையும் ஆண்டவன் படைத்திருக்கிறார்.

ஆதி காலத்தில் ஆண்களும் பெண்களும் சமத்துவமாய் வாழ்ந்து, சந்தோஷமாய்க் குடும்ப வாழ்க்கையை நடத்தி வந்தார்கள். நாளா வட்டத்தில் எப்படியோ பெண்களை ஆண்கள் அடிமைப் படுத்திவிட்டார்கள். உலக சரித்திரமே இதற்கு இன்று சாட்சியாக நிற்கிறது. சில நாட்டினர்கள் கடவுள் பெயராலும், சில தேசத்தார்கள் மதத்தின் பெயராலும், சில சமூகத்தார்கள் தங்கள் சக்தியாலும் பெண்களை அடிமையாக்கி விட்டார்கள். எத்தனையோ ஆண்டுகளாகப் பெண்கள் ஆண்களுக்கு அடியிற் கிடந்து கஷ்டப்பட்டார்கள்; சில தேசங்களில் இன்னும் இன்னல்க ளடைந்துகொண் டிருக்கிறார்கள்.

காலச் சக்கிரத்தின் வேகத்தால் பெண்ணுலகத்திற்குச் சம தர்ம உணர்ச்சி உதயமா யிருக்கிறது. இதன் பயனைகச் சில தேசத்து

* திருக்கோணமலை மாதர் ஐக்கிய சங்கத்தின் 1930-ம் வருட வெளியீட்டில் வந்த கட்டுரையுடன் சிறிது சேர்த்து வெளியிடப்பட்டது.

ஆசிரியர்.

மாதர்கள் சுதந்திரம் பெற்று விட்டார்கள். சில நாட்டுப் பெண்கள் தங்கள் சமத்துவத்திற்காகப் போராடிக்கொண் டிருக்கிறார்கள். இன்னுஞ் சில பாகங்களில் வசிக்கும் ஸ்திரீகள் இப் பொழுதுதான் விழித்துக்கொண் டிருக்கிறார்கள். ஆகவே பெண்கள் இயக்கம் உலகமெங்கும் பரவிக்கொண் டிருக்கிறது. ஆண்களுக்குப் பெண்கள் அடிமையென்ற அநீத உணர்ச்சி யற்று, ஆண்களிடத்திலிருந்து அவர்கள் விடுதலையடையும் பரியந்தம் இந்த முழக்கம் இருந்தே தீரும்.

பெண்களுக்குச் சமத்துவங் கொடுத்து விட்டால் வானமே இடிந்து விழுவதுபோல், சாலவியலைச் சற்றுங் கவனிக்காது தங்கள் வீடுகளே உலகமென்று சில ரெண்ணுகிறார்கள். "கொடு, நீ கொடுக்கப்படுவாய்; மதி, நீ மதிக்கப்படுவாய்; நேசி, நீ நேசிக்கப்படுவாய்; அடக்கு, நீ அடக்கப்படுவாய்" என்ற முதுமொழிகள் போன்று: ஆண்கள் எக்காலத்தில் பெண்களை அடக்க ஆரம்பித்தார்களோ, அக்காலமுதல் ஆண்கள் பல வழிகளில் அடிமைப்பட ஆரம்பித்தார்களென்பது சரித்திரம் கண்ட உண்மை.

## மாதர் முன்னேற்றம்

உலக மெங்கும் பலவித பலமான கிளர்ச்சிகள் நடை பெற்றுக் கொண்டிருக்கிறபடியால், அநேக எழுச்சிக ளெழும்பி ஒவ்வொரு இயக்கமும் புத்துணர்ச்சியும் புத்துயிரும் பெற்றுக்கொண் டிருக்கிறது. ஐரோப்பா அமெரிக்கா நாடுகளில் மாதர்கள் மகா அபிவிருத்தியடைந்துகொண் டிருக்கிறார்கள். கீழை நாடுகளில் ஜப்பானியப் பெண்கள் கல்வி, கைத் தொழில், சமூகம் முதலிய வளர்ச்சிகளில் நாகரீக நாட்டாருடன் சமமாகவே யிருக்கிறார்கள். துருக்கி, எகிப்து, பெர்சியா, சைனா மாதர்களும் விழித் தெழுந்து வேகமாய் முன்னேறிக் கொண்டு போகிறார்கள்.

## இந்தியா

மண்ணையும், பெண்ணையும், பொன்னையும், கல்வியையும், கலைகளையும், சக்திகளையும் பெண் தெய்வங்களாகப் பாவித்து வணங்கும் பரத கண்டம் சந்திரவதி, சாவித்திரி, சீதை, தமையந்தி, பத்மாவதி, மீரா



பாய், தாரா பாய், சாந்த்பீபி, அகல்யா பாய் முதலிய கணக்கற்ற பெண் மணிகளால் சிறப்புற்ற இந்தியா பல தலை முறைகளுக்கு முன் எப்படியோ பெண்களின் சமத்துவத்தை யிழந்து விட்டது. மதத்தின் பெயராலும், சாஸ்திரங்களின் பெயராலும் இந்திய மாதர்கள் அடிமையாக்கப்பட் டிருக்கிறார்கள். சென்ற நூற்றாண்டின் கடைசிக் காலத்தில்தான் இந்திய வனிதா ரத்னங்களுக்கு ஏதோ சிறிது சீர்திருத்த உணர்ச்சி உண்டாயிருக்கிறது.

1906-ம் ஆகஸ்டில் கனம் ராஜப் பிரதிநிதி வங்காளத்தைப் பிரித்த பொழுது மாதர்களும் ஆண்களுடன் சேர்ந்து கிளர்ச்சி செய்தார்கள். வங்காளப் பிரிவினையைப் பற்றி ஒரு பத்திராதிபர் கடுமையாக எழுதியதால் தண்டிக்கப்பட்ட பொழுது, வங்காளப் பெண்கள் ஒன்று சேர்ந்து துயரத்தை வெளிக்குக் காட்டாது அப் பத்திராதிபருடைய தாயாரிடஞ் சென்று தேச விடுதலையின் பொருட்டுச் சிறைக்குச் செல்வது மகா புனிதமான தொண்டென்று புகழ்ந்து அவருக்கு வாழ்த்துக் கூறித் தங்களுடைய அனுதாபத்தை வெளியிட்ட தைரியத்தைப் பாருங்கள்! அயல் நாடுகளுக்குத் தொழிலாளர்களாகச் சென்றிருக்கும் இந்தியச் சகோதரர்களுக்கு ஏற்பட்டிருக்கும் கொடுமைகளைச் சில முக்கிய பெண்கள் அடங்கிய தூதுக் கூட்டத்தார் ராஜப் பிரதிநிதியினிடம் சென்று முறையிட்டார்கள். சுயாட்சி (ஹோம்ரூல்)ப் பிரசாரம் இந்திய நாடெங்கும் நடைபெற்றுக்கொண் டிருக்கையில் அன்னி பெசண்டு அம்மையார் பாதுகாப்பில் வைக்கப்பட்ட பொழுது, தேசத்தின் பல பாகங்களில் பெண்கள் பொதுக் கூட்டங்கள் கூட்டிச் சர்க்கார் செய்கையைக் கண்டனஞ் செய்தார்கள். சென்ற மகா ஐரோப்பிய யுத்தத்திற்குப் பிறகு இந்திய மாதர்களுக்கு ஒரு வித நூதன ஊக்கம் உண்டாகி யிருக்கிறது.

1917-ம் ஆண்டு இந்திய மந்திரி மாண்டேகு நற்றுரைமகனர் இந்தியாவிற்கு விஜயஞ் செய்திருந்த பொழுது, பெண்கள் தூதுவக் கூட்டமொன்று கூடி, கனம் இந்திய மந்திரியிடஞ் சென்று தங்களுக்கும் ஓட்டுரிமை வேண்டுமெனக் கேட்டார்கள். 1919-ம் ஆண்டில் வழங்கிய மாண்டேகு செம்ஸ் போர்டு சீர்திருத்தங்களில் அவர்களுக்கு வாக்குரிமை கிடைக்கவில்லை. அதனால் அவர்கள் அதைரிய

மடையாது கிளர்ச்சிகளை விடாது செய்து கொண்டிருந்ததால், நகர சபைகளுக்கும் சட்ட சபைகளுக்கும் வாக்குரிமை 1924-ம் ஆண்டில் கிடைத்தது. இந்திய சட்ட சபைக்கு வாக்குரிமை சென்ற வருடமே மாதர்களுக்குக் கிடைத்தது. இப் புதிய உரிமையின்படி சில மாகாணங்களில் பெண்களுக்குச் சட்ட சபையில் அங்கங்கள் கிடைத்திருக்கின்றன. சென்னைச் சட்ட சபையில் இப்பொழுது உப அக்கிராசனப் பதவி வகித்து வரும் ஸ்ரீமதி. முத்துலக்ஷ்மி செட்டியவர்களது பெயரை அவருடைய நல்ல வேலைக்காக இங்குக் குறிப்பிட வேண்டியிருக்கிறது. இந்தியாவில் மாதர் இயக்கத்திற்காக டாக்டர் அன்னி பெசண்டு அம்மையார், போபால் பேகம் அவர்கள், ஸ்ரீமதிகள் சரோஜினி தேவியார், வசந்தா தேவி, சாரலா தேவி, கமலா தேவி, ருக்மணி லட்சிமிபதி, ருக்மணி அம்மாள் முதலியவர்கள் பெரிதும் பாடுபட்டுக்கொண்டிருக்கிறார்கள். கொச்சி, திருவாங்கூர், மைசூர் முதலிய சுதேச சமஸ்தானங்களின் சட்ட சபைகளுக்குப் பெண்களும் செல்லக்கூடிய உரிமைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

ஒத்துழையாமை தீவிரமாக நாட்டிற் பரவிக் கொண்டிருந்த பொழுது, பல மாதர்களும் தேசீயத்திலீடுபட்டுக் கதர் கட்ட ஆரம்பித்தார்கள். இன்னும் சிலர் கதர் இயக்கம், பெண் கல்வி, தேச விடுதலை, மாதர் முன்னேற்றம் முதலியவற்றைப் பற்றிப் பிரசாரஞ் செய்தார்கள். சில பெண்கள் தேசத் தொண்டின் மூலமாகச் சிறைச்சாலைக்குச் சென்றார்கள். தேசீய மகா நாடுகளில் தொண்டர்களாக வேலை செய்தார்கள். இந்திய தேசீய மகா சபை ஆண்டு தோறும் நடைபெறும் பொழுது, அதையொட்டி மாதர் மகா நாடு சில வருடங்களாகக் கூட்டப்படுகிறது. "மாதர் இந்திய தேசீய சங்கம்" என்ற பெயருடன் ஒரு சங்கம் ஏற்பட்டு மெதுவாக ஆனால் ஆழ்ந்து வேலை செய்துகொண்டிருக்கிறது. பத்திரிகைகளும் மகா நாடுகளும் பிரசாரங்களும் பெண் கல்வியும் ஒரு விழிப்பை இந்தியப் பெண்களுக்கு உண்டாக்கியிருக்கின்றன. ஆண்கள் மட்டும் இதுவரைக்கும் செய்து வந்த தொழில்களில் சில படித்த பெண்களும் புதிதாகப் பிரவேசித்திருக்கிறார்கள். தேவதாசித் தொழிலை ஒழிக்கும் சட்டம், பால்ய மணத் தடைச் சட்டம், விதவா விவாஹ சங்கங்கள், காதற் கல்யாணங்



கள், கலப்பு மணங்கள் முதலியவைகள் இந்திய மாதர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்திருக்கின்றன. நாட்டின் பல பாகங்களில் ஆண்டு தோறும் மாதர் மகா நாடுகள் கூடுகின்றன. திருவாங்கூர் சமஸ்தானத்திலும் குடகு நாட்டிலும் பெண்கல்வி அதிகமாகப் பரவியிருக்கிறது. இந்தியா இப்பொழுதுதான் பெண் கல்வியின் நன்மைகளை அதிகமாக உணர ஆரம்பித்திருக்கிறது. அயல் நாடுகளில் நடைபெறும் சர்வ தேசப் பெண்கள் பேரவைக்கு வருஷா வருஷம் சில காலமாக இந்தியப் பிரதிநிதிகள் செல்லத் தொடங்கியிருக்கிறார்கள். சர்வ கலா சாலைப் பட்டதாரிகளும் பெண்களிற் பெருகிக்கொண்டு வருகிறார்கள். பெண்களுக்கெனப் பிரத்தியேகமாய்ப் பூனாவில் அறிஞர் கார்வி என்பவரால் ஒரு சர்வ கலாசாலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.


சென்னை நகரத்தில் சமீப காலத்தில் மாதர் மகா நாடும் கூடி நிறைவேற்றிய அனேக உயரிய தீர்மானங்களிலிருந்து இந்திய மாதர்களின் முன்னேற்றம் இத்தகையதென்பது நன்றாக விளங்கும். சமீபத்தில் பம்பாயில் கூடிய மாதர் மகா நாடும் நல்ல நல்ல தீர்மானங்களை நிறைவேற்றி, மாதர் சங்கத்தார் தீவிரமாக வேலை செய்கிறார்கள். இப்பொழுது தேசீய வேலையில் ஈடுபட்டு அநேக பெண்கள் அரிய தொண்டு ஆற்றிக்கொண்டிருக்கிறார்கள். இந்தியப் பெண்மணிகளில் ஒவ்வொருவரும் கல்வி கற்றாலன்றி, ஒவ்வொரு சகோதரியும் சமத்துவமடைந்தாலன்றி, இந்தியாவில் ஸ்திரீகள் எல்லா வழிகளிலும் மேன்மையடைந்துவிட முடியாது. இந்திய மாதர்களுக்குச் சமத்துவமும், சுதந்திரமுங் கிடைக்கும் வரையில் பாரத தேசம் அடிமைப்பட்டிருக்குமென்ற எண்ணம் இந்தியாவில் இப்பொழுது வளர ஆரம்பித்திருக்கிறது. பெண்களும் தங்களுடைய உரிமைகளுக்குப் போராடத் தொடங்கியிருக்கிறார்கள். சுதந்திரப் போர் எவர் எங்கு எப்பொழுது ஆரம்பித்தாலும் வெற்றியே கிடைக்கும்.

இந்திய சகோதரிகள் சமத்துவம் பெறட்டும், விடுதலை பெறட்டும், உரிமை ஓங்கட்டும். பெண்ணுலகு வாழ்க!

வந்தே மாதரம்

# சந்திரனில் உயிர்களுண்டா?

திரு. K. G. கிருஷ்ணன் அவர்கள், B. Sc. (Hons.)



கடவுளின் தந்திரோபாயமோவென யாவரும் வியப்புறும் வண்ணம் ஆகாயத்தில் அந்தரமாய் அசைந்து கொண்டிருக்கும் நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலியவைகளில் சந்திரனுமொன்று. ஆகாயத்திலுள்ள எல்லா உருவங்களிலும் சந்திரன் மிகச் சிறியது. ஆனால் இது நமது பார்வைக்கு எல்லாவற்றிலும் பெரியதாய்த் தோன்றுவது இதின் தூரத்தின் காரணமே. நமது கோளத்திற்கும் சந்திரனுக்கும் 239,000 மைல் தூரம். நமது பூமியையும், இப்பொழுது புதிதாய்க் கண்டுள்ள கிரகத்தையுந் தவிர்த்து ஆகாயத்தில் அந்தரமாய்த் தங்கி வரும் ஏழு கிரகங்களில் சுக்கிரன் (Venus) என்ற கிரகமே நமது பூமிக்கு அருகாமையி லிருந்து வருகிறது. சூரியன் உதயமாகு முன் எல்லா நட்சத்திரங்களையும்விடப் பெரியதாய்க் காலை நட்சத்திரம் போலவும், சூரியன் அஸ்தமிக்கும்போது மாலை நட்சத்திரம் போலவும் தோன்றுவது இக் கிரகமே. இக் கிரகம் பூமியைவிட உருவத்தில் சிறியது; ஆனால், சந்திரனைவிட எத்தனையோ பங்கு பெரியது. அப்படி யிருந்தும் இக் கிரகம் ஒரு சிறிய நட்சத்திரம் போலக் காண்பதும் அதின் தூரத்தின் காரணத்தாலேயேயாம். பூமிக்கும் சுக்கிரனுக்கும் (சூரியனுக்கு ஒரே பக்கத்தி லிருக்கும்போது) உள்ள தூரம் 26,000,000 மைல்.

சந்திரன் பூமியை $27\frac{1}{4}$ நாட்களில் ஒரு சுற்றுச் சுற்றி வருகிறது. அப்படிச் சுற்றி வரும்போது சந்திரன் சூரியனுக்கும் பூமிக்கும் நேர் மத்தியில் வர நேரிடும் போது நமக்கு சூரியனின் பார்வை மறைந்து சூரிய கிரகணம் ஏற்படுகிறது. சூரியனுக்கும் சந்திரனுக்கும் நேர் மத்தியில் பூமி யிருக்க நேரிட்ட காலத்தில் சூரியனின் வெளிச்சம் சந்திரனில் படாது மறைக்கப்பட்டு சந்திர கிரகணம் ஏற்படுகிறது சந்திரன் தானே பிரகாசிக்கும் தன்மை யற்று, சூரியன் வெட்ட வெளியில் அனுப்பும் வெளிச்சக் கதிர்களில் ஓர் சிறு பாகத்தைத் தடுத்து நமக்குப் பிரதிவிம்பிப்பதால் சந்திரன் பிரகாசமாய்த் தோன்றுகிறது பகலில் சந்திரன் ஆகாயத்தில் தோன்றும்போது பார்த்தால் சந்திரனும் மேகங்களும் ஒரே தன்மையை யுடையனவாய் (சாம்பல் நிறமாய்)க் காண்போம் சந்திரன் தானே வெளிச்சம் கொடுக்கக் கூடியதா யிருந்தால், மேகங்களைவிட அதிகப் பிரகாசமாய்த் தோன்றுமல்லவா? சூரியன், மேகங்களை வெளிச்சப் படுத்துவது போலவே சந்திரனையும் வெளிச்சப் படுத்துகிறது. இரவில் சந்திரன் ஒரு கண்ணாடியைப்போ லிருந்து சூரிய வெளிச்சத்தில் சிறிது பாகத்தை நமக்குப் பிரதிவிம்பித்துக் கொடுக்கிறது 600,000 பூரண சந்திரன்கள் ஒன்று சேர்ந்து பிரகாசித்தால், சூரிய வெளிச்சத்திற்குச் சமானமாகும். சந்திரன் பூமிக்கு அருகாமையி லிருந்து தன் இழுக்கும் சக்தியால் சமுத்திரத்தில் வடிவு பெருக்குகளை உண்டாக்குகிறது. சந்திரன், மாலுமிகளுக்கும் நற்றுணையா யிருக்கிறது. சந்திரனுடைய உபயோகங்களோ அநேகம்.

சந்திரனின் நிலவளமானது பாறையுடையதாய் கரடுமுரடாய் யாதொரு புற்பூண்டுகளின்றி வனாந்தரத்திற் கொப்பாயிருக்கிறது. பூமியைப் போலவே சந்திரனுக்கும் இரவும் பகலும் உண்டு. ஆனால் சந்திரனில் நமது 29 பகல் கொண்டது ஓர் பகலாகவும் அப்படியே 29 இரவு கொண்டது ஓர் இரவாகவு மிருக்கிறது. நம்மை சூரியன் உஷ்ணப் படுத்துவது போலவே சந்திரனையும் உஷ்ணப் படுத்துகிறது. சந்திரன் சுமார் இரண்டு வாரமாக இடைவிடாது சூரிய உஷ்ணத்தால் தகிக்கப்பட்டாலும் அங்குள்ள நிலம் கிரகிக்கும் உஷ்ணம் அதிகமென்று கூறமுடியாது. பூமியைப் போல் சந்திரனைச் சுற்றி வாயு மண்டலமில்லாத காரணத்தால் சந்திரன் கிரகிக்கும் உஷ்ணத்தைச் சேர்த்துத் தன்னுள்ளேயே அடக்கிக் கொள்ள முடியாமல் போகிறது.

சந்திரனில் ஏதாவது உயிர்களிருந்தாலும் அவைகள் நன்கு நோக்கப் பெரிய தூரதிருஷ்டி கண்ணாடியால் சக்தியில்லாமலிருக்கிறது.

பெரிய யானைகள் சதுப்பு நிலங்களில் தாண்டவமாடலாம், மலைகளில் உயர்ந்த மரங்கள் வளர்ந்திருக்கலாம். ஆனால் இவைகளைக்கூடத் தூரதிருஷ்டி கண்ணாடி காண்பிக்க முடியவில்லை. சந்திரனில் சிறியதாய் தூரதிருஷ்டி கண்ணாடிக்குக் காணப்படும் வஸ்துக்கள் இங்குள்ள பெரிய கோபுரங்களை ஒத்திருக்க வேண்டும். அவ்வாறிக்கும் போது நாமறிந்துள்ள யானை, மனிதன் முதலிய சிறிய உருவமுள்ள உயிர்கள் சந்திரனில் வசித்து வந்தாலும் நமது தூரதிருஷ்டி கண்ணாடி அச் சிறு உருவங்களை நமக்கு நேரே காட்டமுடியாமலிருக்கிறது. ஆதலால் "சந்திரனில் நாமறிந்த உயிர்களுண்டா?" என்று தெரிவதற்கு நமக்குக் கிடைக்கும் சாட்சிகளைக் கொண்டு ஆராய்ந்தறிய வேண்டியதாகவேயிருக்கிறது. ஞான சாஸ்திரிகள், நாமறிந்த உயிர்கள் அதாவது பூமியில் வசிக்கக்கூடிய உயிர்கள் சந்திரனில் இல்லை என்று நம்புகின்றனர்.

இவண் வாழும் எல்லா உயிர்களுக்கும் தண்ணீர் ஓர் அத்யாவசியமான பொருள். கல், மலையில் ஓங்கி வளரும் மரங்கள், மற்றும் எல்லா மிருக ஜாதிகளுக்கும் தண்ணீர் இல்லாவிட்டால் அவைகள் உயிர் நீக்குமன்றோ? ஆதலால் சந்திரனில் தண்ணீர் இல்லாவிட்டால் அங்கு இவண் காணும் உயிர்கள் இருக்கமாட்டாதென்று துணிந்து கூறலாமல்லவா? சந்திரனில் ஒருவர் நின்று கொண்டு ஓர் தூரதிருஷ்டி கண்ணாடியால் நமது பூமியை நோக்குவாரேயாயின் பூமியில் தண்ணீர் இருக்கிறதா வென்று அறியமுடியுமா? சந்தேகமின்றி அறியலாம். எப்படி? சந்திரனில் நிற்கும் மனிதனுக்கு பூமியைச் சுற்றியிருக்கும் மேகங்களையும், அவைகள் அங்கு மிங்கும் அசைந்தோடுவதையும் காண்பான். எவ்விடத்தில் மேகங்களுண்டோ அங்கே தண்ணீர் ஏற்பட்டிருக்கும் என்று சந்தேகமின்றிக் கூறலாம். இரண்டாவதாக, இங்குள்ள வித்தியாசத்தை யறிந்து சமுத்திரத்தின் நிறவித்தியாசத்தைக் கொண்டும், சூரியன், நட்சத்திரங்கள் சமுத்திர பாகத்தில் பிரதிபிம்பிப்பதையும் சந்திரனிலுள்ள மனிதன் தன் தூரதிருஷ்டி கண்ணாடியால் நன்கறிந்து பூமியில் ஜலம் உண்டென்று நம்பிக்கொள்ளுவான். இப்பொழுது நாம் இங்கிருந்து சந்திரனைத் தூரதிருஷ்டி கண்ணாடி கொண்டு பார்த்தால் அங்குத் தண்ணீர் இருக்கும் எவ்விதக் குறியையும் காணமுடியாது. சந்திரனில் இருட்டான



பாகங்களைக் கவனமாய் நோக்கினால், அவைகள் சிற்சிறு பள்ளங்களையும் பாறைகளையுமுடைய வனாந்தரங்களாயிருக்கின்றன. அங்கே சமுத்திரங்களாவது, ஏரிகளாவது, ஆறுகளாவது, மேகங்களாவது இல்லையென்று தூரதிருஷ்டி கண்ணாடி சந்தேகமின்றித் தெரிவிக்கிறது. ஆகலால் சந்திரன் தண்ணீரற்ற பாலை வனமென்று நம்புதற்கிடமுண்டு.

பூமியில் வாழும் உயிர்களுக்குக் காற்றும் இன்றியமையாததாயிருக்கிறது. காற்றும் சந்திரனில் இல்லை யென்று புலனாகிறது. வாயு மண்டலம் 200 அல்லது 300 மைல் உயரம் வரை பூமியைச் சுற்றிப் பரவி யிருக்கிறது. 300 மைல்களுக்கப்பால் காற்றில்லை. ஒரு மனிதன் பூமியிலிருந்து சந்திரனுக்குப் பறந்து போகிறானென்று வைத்துக் கொள்ளுவோம். இவன் மேலே சந்திரனை நோக்கிச் செல்லச் செல்ல காற்றும் இலேசாகிக் கடைசியாக 300 மைலுக்கப்பால் காற்றே இல்லாமல் போய்விடும். இம் மூன்னூறு மைல் சந்திரனுக்கும் பூமிக்குமுள்ள தூரமாகிய 239,000 மைலில் ஓர் சிறிய பாகமே! இதற்கப்பால் அம் மனிதன் காற்றில்லாமல் வெகு தூரம் வருந்துவான். சந்திரனும் பூமியைப் போல வாயு மண்டலத்தை யுடைத்தா யிருந்தால் மேலே குறித்த மனிதன் சந்திரனுக்கருகில் (சில நூறு மைல் தூரத்தில்) வரும்போதே, தான் முன் சுவாசித்த காற்றைக் காண்பான். ஆனால் உண்மையில் ஒரு மனிதன் சந்திரனுக்கருகில் யாதொரு காற்றையும் காணாமல் தயங்கி மூச்சுப்பறியாமல் இறக்க வேண்டியதுதான். பூமியைப்போல, சந்திரன் தன்னைச் சுற்றி வாயு மண்டலத்தை யுடையதாயில்லை.

காற்றும் தண்ணீரும் இல்லாததின் காரணமாய், சந்திரன் கரடுமுரடான வனாந்தரமாகத் தோன்றுகிறது. பூமியில் காற்று, மழை, பனி முதலியவைகள், கரடு முரடாய் ஆகாயம் அளாவி நிற்கும் இடங்களின் உக்கிரத்தைக் குறைத்துக் கொண்டே வருகின்றன வென்பது கண்கூடு. அப்படியான செய்கைகள் யாதொன்றும் சந்திரனில் காணப்படுவதில்லை. அங்குள்ள எரிமலைச் சிகரங்கள் வெகுகாலமாகக் கொந்தளிப்படங்கி யிருந்தும் அவைகள் இப்பொழுதுதான் உண்டான சிகரங்கள் போலப் புதிதாகக் காணப்படுகின்றன. ஏன்? அவைகளின் உக்கிரத்தைக் குறைத்துப் பழையாக்கும் மழை, காற்று, பனி

முதலியவைகள் அங்கு உண்டாகாமையே. சந்திரனில் கட்டிடங்க ளிருந்தால், அவைகள் காற்று மழையில்லாமையால் எத்தனையோ வருடங்களுக்குக் கெடாம லிருக்கலாம். அவைகளுக்கு ஜன்னல்களும் தேவையில்லை. காற்றில்லாததால் நெருப்பு எரிக்க அடுப்பும் தேவையில்லை அங்கு தூசிகள், வாசனைகள், சப்தங்கள் முதலியவையு முண்டாகா. ஆதலால் நாமறிந்த உயிர்கள் சந்திரனில் வாழ முடியா தென்று நாம் துணிந்து கூறலாம்.

இப் பூ மண்டலத்திலும் கற் பாறைகள், வெளிச்சமே கிடையாத மலைச் சுரங்கங்கள், சதா பனிக் கட்டிகள் நிறைந்த நாடுகள், அழகான சமுத்திரங்கள் முதலிய இடங்களில் ஆங்காங்கு அமைப்புக்குத் தகுந்தவாறு உயிர்கள் விபரீதமாக இசைவாக்கப் பெற்று வாழ்ந்து வருவதை நாம் அறிகிறோம் நாம் சமுத்திரத்திலும், மீன்கள் நிலத்திலும் வசிக்க முடியாது இப்படியாகவே உயிரினங்கள் இடமாறி வசிப்பது கூடாததா யிருப்பதை நாம் காண்கிறோம். இது இப்படி இருக்க, ஏன் அவ்விதமாகவே சந்திரன் முதலிய வேறு கிரகங்களிலும் உயிர்கள் அங்குள்ள அமைப்புக்குத் தகுந்தவாறு உண்டாக்கப்பட் டிருக்கக் கூடாது? ஆதலால் அங்கு உயிர்கள் இல்லை யென்று நாம் சொல்லி விடமுடியாது. ஆனால், இப் பூமியில் வாழும் உயிர்களைப் போல அவ் விடங்களில் இல்லை யென்று கூசாமல் கூறலாம்.

இப்பொழுது ஜுபிட்டர் (வியாழம்) என்ற கிரகம் சூரியனி லிருந்து 483,000,000 மைல் தூரத்திலும், பூமி 93,000,000 மைல் தூரத்திலு மிருக்கின்றன பூமி சூரியனை 12 தடவைச் சுற்றிய பின் ஜுபிட்டர் சூரியனை ஒரு தடவைச் சுற்றுகிறது. ஆதலால் நமக்கு 12 வருடங்கள் முடிந்தால் ஜுபிட்டரில் ஒரு வருடம் முடிகிறது. இப்படியே நெப்ட்யூன் (Neptune) என்ற கிரகம் சூரியனிலிருந்து 2,792,000,000 மைல் தூரத்திலிருக்கிறது. பூமி சூரியனை 165 சுற்றுகள் சுற்றிய பின் நெப்ட்யூன் சூரியனை ஒரு சுற்றுச் சுற்றுகிறது. ஆகவே நமது 165 வருடங்கள் கொண்டது அதின் ஒரு வருடமாகிறது. ஆதலால் இந்தக் கிரகங்களில் நாம் காணாத விபரீதமான உயிர்கள் இருந்தால் அவைகளுக்கு ஆயுள் நம்மைவிட நீண்டகால மென்று கூற வேண்டியதா யிருக்கிறது.

---



# கரிபால்டி
# (இத்தாலி நாட்டு விடுதலை வீரர்.)

திரு. சோம. சதாசிவன் அவர்கள்.

(உரிமையுடையது)

உலகில் மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவனும் சுயேட்சை யுடையானாய் இருத்தல் வேண்டும் என்பதை யாவரும் ஆதரிப்பர். அவ்வாறு மனிதன் சுதந்திரமாய் வாழ்வதற்குற்ற வழிகள் பலவுண்டு. ஈண்டு மனிதன் என்பது ஒரு குடும்பத்தில் உள்ள தலைவனைக் குறிக்கின்றது. அவ்வாறே ஒரு நாட்டில் குடும்பங்கள் பலவுண்டு. ஒரு குடும்பத்தில் ஜனங்கள்:—அக்காள், தம்பி, மாமன், மைத்துனன், தந்தை, தாய். மனைவி—பலரிருப்பதைப் போன்று இப் பெருங் குடும்பங்களெல்லாம் ஒன்று சேர்ந்து ஓர் தனிப் பெருங் குடும்பமாகின்றது. அத் தனிப் பெருங் குடும்பம் யாது? அதுதான் ஒரு நாடாகும். குடும்பத் தலைவனுக்குப் பதிலாக ஒரு நாட்டின் அரசனோ அன்றி குடியரசா யிருப்பின் குடியரசின் தலைவனோ அத் தனிப் பெருங் குடும்பத்திற்குத் தலையாகின்றான். அன்னவன் சுயேட்சை யுறின் அவன் கீழிருக்கும் அனைவரும் விடுதலை அடைவர். ஆனால் அது கஷ்டம். அவ்வாறு அவன் விடுதலை யடைய வேண்டுமாயின் பலர் உயிர் துறக்கின்றனர்; துறந்து மிருக்கின்றனர். ஆகையால் ஈண்டு அதற்கோர் உதாரணமாகத் துலங்கும் கரிபால்டி என்பார் இத்தாலி நாட்டிற் குழைத்த விவரத்தைக் காண்போம்.

## பிறப்பும் வளர்ப்பும்

கரிபால்டி என்பவர் 1807-ம் ஆண்டு ஜூலை மாதம் 4உ நைஸ் என்னு மிடத்தில் பிறந்தார். அவர் தகப்பனாரான டாமினிகோ

கரிபால்டி என்பார் இத்தாலி நாட்டு வர்த்தகரும் படகுத் தலைவருமாவர். அவரிடத்தில் அரசியல் விடயங்களில் தலையிடும் வழக்கம் இல்லை. ஞைஸ் 1792ல் பிரஞ்சுக்காரர்களால் பிடிக்கப்பட்டும், பிரஞ்சு இராஜ்யத்துடன் சேர்க்கப் பட்டது. ஆனால் 1814-ம் ஆண்டில் உலகம் புகழ் நெப்போலியனின் வீழ்ச்சிக்குப் பிறகு சார்டினியா அரசாங்கம், தான் இழந்த பெய்டமாண்ட் நாட்டையும், சேவாய் நாட்டையும் திருப்பப் பெற்றுத் தன் இராஜ்யத்துடன் சேர்த்துக்கொண்டது. இந் நிகழ்ச்சி நடந்தபொழுது சைஸப்பிக்கு (இஃது கரிபால்டியின் இடுகுறிப் பெயர். கரிபால்டி என்பது குடிப் பெயர்.) வயது ஏழு. நீணிலம்புகழ் நெப்போலியன் ஆதிக்கத்திலிருப்பதற்கு முன்னும் பின்னும் இந் நாடு பற்பல அரசர்களால் கொடுங்கோலுடன் ஆளப்பட்டு வந்தது. அதனை நெப்போலியன் பிடித்துச் செங்கோல் செலுத்தி வந்தான். அக் காலத்தே இத்தாலி நாட்டிற்கு வடக்கில் ஆஸ்திரியர்கள் லம்பார்டி, வெனிஷ்யா நாட்டை ஆண்டு வந்தனர். தெற்கில் ஸ்பானியர்கள் நேபிள்ஸ், சிசிலி முதலிய இராஜ்யங்களை ஆட்சி புரிந்து வந்தனர். மற்றிரு புறங்களிலும் ஆழமான சமுத்திரம் ஆழ்ந்திருக்க இவைகளின் நடுவில் போப்பும் அவருடைய சீடரும் நடாத்தும் கொடுங்கோலின் கீழ் அந் நாட்டு மாந்தர் அல்லல் உறுவதற்கோர் அளவில்லை. எம் மனிதனாவது விடுதலை வேண்டும் என்று வாய் திறந்தால் உடனே மரண தண்டனை விதிக்கப் பெறுவான். சந்நியாசிகளின் மனதிற்கு விரோதமான எண்ணம் உடையவனாயின் அவனுந் தலையிழக்க வேண்டி நேரிடும். இவைகளை யாவும் அவர்களின் ஒற்றர்களால் கண்டு பிடிக்கப்பெற்று வந்தது.

## வாலிப சேஷ்டையும் தேசப் பிரஷ்டமும்

சைஸப்பியின் தாய் தந்தையர்கள் தங்கள் வாழ் நாள்களைக் கொஞ்சம் கஷ்டத்துடன் கழித்து வந்ததால் அவர்கள் தங்கள் சகோதர இத்தாலியர்களைப் போப்பினிடமிருந்தும் லம்பார்டி, நேப்பிள்ஸ் அரசாங்கத்தாரிடமிருந்தும் விடுவிக்க முற்படவில்லை. அவர்கள் தினந்தோறும் நெற்றி வேர்வை நிலத்தில் விழ வேலை செய்யவேண்டியிருந்தது. மற்றைய நேரங்களில் தங்களது அருமைப் புதல்வனுக்கு நற் புத்தி புகட்டி வந்தனர். செல்வப் புதல்வனோ அவர்களுக்கு அடங்காதவனாய்ப் பள்ளியில் துஷ்டன் என்று பெயர் பெற்றும், தனது நேயர்களிடம் துப்பாக்கி இரவலாகப் பெற்று மலைகளிலும் வனாந்தரங்களிலும் சுற்றித் திரிந்து வேட்டையாடியும், மற்றைய நேரங்களில் மாலுமிகளுடன் சம்பாஷித்தும் விளையாடியும் தன் காலத்தைக் கடத்தி வந்தான். இவன் தாய் தந்தையர் இவனை ஒரு உழுது பயிரிடும் குடியானவனாக்க முயன்றனர். ஆனால் அது விழலுக்கு இறைத்த நீராயிற்று. கரிபால்டிக்குக் கடற் பிரயாணஞ் செய்வதில் மிக்க விருப்பு உண்டு; கூப்பிடு தூரத்தில் உள்ள கடலின் அலைகள் தன்னை அழைப்பதாக அவர் நினைப்பதுண்டு. இவ் வாசையினால் அவர் தன் பதினைந்தாம் பிராயத்தில் தந்தையுடன் சச்சரவிட்டார். "பள்ளியில் வெறுப்புற்றும் வீட்டிலுள்ள சச்சரவின் பயனாலும் நான் ஒரு நாள், என்னை யொத்த சிறுவர்களைப் பார்த்து, நாம் ஜினோவாவிற்குச் செல்லலாமா? என்று கேட்டேன். அவர்கள் சம்மதித்தார்கள். நாங்கள் ஓர் படகைப் பிடித்து அதில் ஆகாரத்திற்கு வேண்டியவைகளும், மீன் பிடிக்கதற்குத் தூண்டியும் எடுத்துக்கொண்டு கிழக்கு நோக்கிச் சென்றோம். நாங்கள் மொனாகோ தாண்டினவுடன் எங்களை எனது தகப்பனார் அனுப்பிய படகு வந்து பிடித்துக் கொண்டது. அதனால் நாங்கள் திரும்பியும் எங்களது ஊருக்கு வரவேண்டியதாயிற்று. நாங்கள் ஓடிப்போவதைப் பார்த்த பாதிரி ஒருவர் எனது தந்தையிடஞ் சொன்னார்." அதிலிருந்து தான் கரிபால்டிக்குப் பாதிரிகளிடம் வெறுப்புண்டாயிற்று.

இவ் விஷயம் நடந்த பின் சைஸப்பியின் தந்தை அவரை ஒரு குடியானவனாக்கும் எண்ணத்தை விட்டுவிட்டு அவரை 1822-ல் ஒரு கப்பல் வேலையாளனாக அமர்த்தினார்.

அவரைப் பற்றி அவருடைய பழைய சிநேகிதர் ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்: "பெப்பினோ (கரிபால்டி) தைரியமும் புத்திசாலித் தனமும் உடையவர். அவருக்குச் சுயேட்சையாகப் பற்பல இடங்களுக்குச் சென்று பல்வேறு விநோதங்களைக் காண அவாவுண்டு. அவர் பள்ளியிலிருக்கும் பொழுது துஷ்டன் எனப்

பெயர் பெற்றார். அவர் அடிக்கடி செம்படவர்களுடன் கடலில் சென்று வருவார். அக்கம் பக்கங்களில் திருவிழாக்கள் நடந்தால் அதற்குத் தவறாமற் செல்வார். அவர் ஒலிவை மரத்தடியில் உட்கார்ந்து அவருக்குப் பிரியந் தரும் புத்தகத்தை வைத்து வாசித்துக் கொண்டிருக்கும் பொழுது, நாங்கள் அவரை எங்களுடன் விளையாடுதற் கழைப்போமாயின், அவர் வருவதில்லை. அவருக்கு நன்றாகப் பாடத் தெரியும். அவருக்குக் கப்பற் பாட்டு, குடியானவர்கள் வேலை செய்யும்பொழுது பாடும் பாட்டு, இன்னும் பிரஞ்சு பாஷையில் அநேகம் பாட்டுகளும் தெரியும். நாங்கள் அவரை எங்களது தலைவராகத் தெரிந்தெடுத்திருந்தோம். அவர் சிறு பிள்ளைகளுக்குப் பிறர் தீங்கிழைக்கா வண்ணம் பாது காப்பார். அவருக்கு மீனைப்போல் நன்றாக நீந்தத் தெரியும்."

அவர் கப்பலில் வேலையாளாக விருக்கும்பொழுது ஒடிஸா, ஜிப்ரால்டர், கானடா, கான்ஸ்டாண்டிநோபிள் முதலிய அநேகம் ஊர்களைக் கண்ணுற்றிருக்கின்றார். அவர் தன் தகப்பனாரின் சிறு படகில் உரோமாபுரிக்குச் சென்றார். அதனழகிய காட்சி அவர் மனதில் என்றும் பசுமரத்தாணிபோன்று பதிந்திருந்தது என்பது, "அமெரிக்காவில் நடுக் காட்டில் நாடு கடத்தப்பெற்று வசிக்கு மின்னாளிலும், இளமையில் கண்ணுற்ற உரோமாபுரியும் அதனது ஜனங்களும் என் கண் முன்னே நிற்கின்றனர். நான் அதனைக் கண்ணுற்றதி லிருந்து எனக்கு அதன்மேல் ஓர் வித பற்று உண்டாயிற்று. எனக்கு அதனிடம் உள்ள அன்பு வேறு பூமியிலுள்ள ஒன்றின் மேலுங் கிடையாது. இத்தாலிதான் உரோம்" என்று அவர் சொல்லி யிருப்பதினின்று நன்கு விளங்குகிறது. அவர் 1833-ம் ஆண்டு வியாபாரியாகவும் கப்பற் றலைவனாகவும் ஆனார். அக் காலத்தே டாகன்ராக் நகரில் ஜினோவா தேசத்தவரான க்யூனோ என்பவரைச் சந்தித்தார். க்யூனோ அவரைப் பார்த்து: இத்தாலியர் விடுதலைக்காக 'இத்தாலிய இளைஞர்' என்னும் ஓர் சங்கம் உழைப்பதாகவும் அவரை அதில் சேரும்படியாயும் தூண்டினார். "கொலம்பஸ், தான் புதிய உலகம் கண்டு பிடித்ததற்காக மகிழ்கின்றார். நான் இத்தாலியர் விடுதலைக்காகப் போராடி வெற்றி யுறுபவர்களைப் பார்க்க மகிழ்கின்றேன்" என்றுரைத்தார்.



அவர் தனது பிரயாணத்தி னின்றும் திரும்பி வந்த உடனே மார்சேல்ஸை நோக்கிப் புறப்பட்டுச் சென்றார். அங்குதான் இத்தாலிய இளைஞர்களுள் மனத் தூய்மையுடைய (ஜோஸப்) மாஸினி நாடுகடத்தப் பெற்றிருந்தார். இவர் 'நான் இளைஞனாயிருக்குங்கால் நற்குணங்களைப் பெரிதும் பேணினேன். ஆகையினால் என் குணம் மாறுதலடையவும், எனக்குப் புத்திமதி கூறவும் நண்பருமாகவும் இருக்கக் கூடிய ஒருவரை நாடி நின்றேன். அப்பொழுது தாகித்து நிற்பவன் தண்ணீரை யடைய விரும்புவதைப் போன்றும், பசித்திருப்பவன் உணவு வேண்டி யிருப்பதைப் போன்றும் நான் இருந்தேன். ஜோஸப் மாஸினியை எனக்குக் குருவாகவும் நண்பராகவும் அடைந்தேன். அவரே என்னை வளர்த்தவர்; அவரே என்னைக் காப்பாற்றினவர்; நான் அவரை அடைந்தது எனது அதிர்ஷ்டவசமே' என்று 30 வருடங்களுக்குப் பின்னர் கூறியிருக்கின்றார். அக் காலத்தில் ஐரோப்பா முழுதும் விடுதலை உணர்ச்சி பரவி யிருந்தது. இதனைக் கண்ணுற்ற மன்னரெல்லாம் நடுங்கினர். இத்தாலிய இளைஞர்கள் செவாய் நாட்டைப் பிடிக்கப் போகுந் தருணத்தில் கரிபால்டி அங்குச் சென்றார். அவர்கள் ஆஸ்திரியர்களிட மிருந்தும், போப்பினிட மிருந்தும், நோப்பிள்ஸ், பூர்போனியரிட மிருந்தும் விடுதலை அடைவதற்குப் பதிலாக இத்தாலிக்கு ஒரு மன்னனை முடிசூட்ட முயன்றது ஆச்சரியமே. செவாய், சாட்டினியா, பெய்டமாண்ட் நாட்டரசனை சார்லஸ் ஆல்பர்ட்டை அவர்கள் நம்பிக்கொண்டிருந்தனர். ஆனால் அவன் நம்பிக்கைத் துரோகஞ் செய்தனன். அவன் ஆஸ்திரியர்களை வெறுத்த போதிலும் பாதிரி மார்களின் சொற்களில் மயங்கி இத்தாலியர்களுக்கு அநேக தீங்குகளிழைத்தான். பாதிரிகளினால் ஆளப்படும் பெய்டமாண்டில் அஞ்சா நெஞ்சுடைய மனிதனொருவன் ஆல்பர்ட் அரசன் உயிரைக் கொள்ளை கொள்ள நினைத்தான். ஆனால் பாதிரிகளின் ஒற்றர் எங்கு மிருக்கின்றனர் என்பதை அவன் அறியான். இம்மாதிரிக் குற்றந்தான் மாஸினிமே லேற்பட்டது. ஜினோவா நாட்டு அரசப்

பிரதிநிதி, இவரைப் பற்றிப் பேசுங்கால், "நாம் இளைஞர்களின் எண்ணத்தை யறிந்த பின்னரே தலையிடல் வேண்டும்" என்று இயம்பினார். நீணிலம்புகழ் நெப்போலியன் காட்டிய நெறிப்படியே இவ் வாலிபர்கள் தங்களுள் ஒருவரை அரசராக்க முயன்றனர்.

கரிபால்டிக்கு ஜினோவாவுக்குச் சென்று அங்கு மனத் தாங்கலடைந் திருப்பவர்களுடைய மனதைக் கவர வேண்டும் என, மாஸினி உத்தரவிட்டார். ஆனால் அவர்கள் கலகஞ் செய்ய மறுத்தனர். மாஸினியினுடைய படையெடுப்புப் பிரயோஜன மற்றதாய்ப் போனதோடு அதை நடத்துவதற்குப் போதிய திறமை யில்லாமையால் கரிபால்டி சேனைகளால் சூழ்ந்துகொள்ளப்பட்டார். அவர் நிதானமாகத் தெருக்களின் வழியாகச் சென்று ஓர் பழ வியாபாரக்காரியிடம் குடியானவனுடைய உடை ஒன்று வாங்கிக்கொண்டு ஜினோவாவிலிருந்து நைஸுக்கும், நைஸிலிருந்து பிரான்சையுமடைந்தார். மார்சேல்சை யடைந்த பொழுது சமாச்சாரப் பத்திரிகைகளில் நாடு கடத்தப்பட் டிருப்பதாகவும், சுட்டுக் கொன்றுவிடவும் உத்தரவாகி யிருப்பதைப் பார்த்தார். ஆனால் அவர் தன் பெயர் முதற் றடவையாக அச்சில் வெளிவந் திருப்பதைக் கண்டு மகிழ்வுற்றார். அவரைப் பிடித்துத் தருவோருக்கு வெகுமதி யளிப்பதாகப் பிரசுரித்திருந்தனர். அவர் இரண்டு வருஷகாலம் ஒருவர் கண்ணிலுமகப்படாமல் கைஸப்பிபேன் என்ற மாறு பெயருடன் கப்பல் மாலுமியாகக் காலம் போக்கினார். ஆனால் சார்லஸ் ஆல்பர்ட்டின் துப்பறிவோர் அயர்ந்திருக்கவில்லை. கடைசியில் 1836-ம் ஆண்டு துறைமுகங்களில் கறைந்துறைவதில் கைப்புற்று நாண்டஸ் என்னும் துறைமுகத்திலிருந்து ரியோடெ ஜனைரோ என்னுமிடத்திற்குச் சென்றார்.

அவர் தென் அமெரிக்காவையடைந்த சின்னாட்களுக்கெல்லாம் ரியோ–கிராண்டி—செல் என்னும் மாகாணத்துள்ள ஜனங்கள் பிரேஸில் பட்டணத்திலுள்ள போர்ச்சுகீசிய அரசாங்கத்திற்கு எதிரிடையாகக் கிளம்பி சுயேச்சை யடைந்தனர். கரிபால்டி அம் மாகாணத்தின் துறைமுகத்தில் இருந்தபொழுது, நாடுகடத்தப் பட்



டிருந்த இத்தாலியர்கள் கைகளிலே விலங்கிட்டுக் கொண்டுவந்துவிடப்பெற்றனர். தன் சகோதர இத்தாலியர்கள் கைவிலங்குடன் வருவதைக் கண்ணுற்ற கரிபால்டி மனத்துயர் எய்தினார். அவர்கள் பன்னிருவர்; அவர்களுடன் சேர்ந்து கொண்டு கரிபால்டி ஒரு சிறு மீன் பிடிக்கும் படகில் ஆயுதங்களுடன் கடற்கொள்ளைத் தொழிலை மேற்கொண்டார்.

## துன்பமும் இன்பமும்

அவர் அப் படகுக்கு 'மாஸினி' என்று பெயர் சூட்டி சுயராஜ்யக் கொடியைப் பறக்கவிட்டார். இப் படகே முதன் முதல் பிரேசிலியன் கரைகளில் சுயராஜ்யக் கொடியுடன் சென்ற படகாகும். கரிபால்டி சின்னாள் சென்ற பின் ஒரு பெரிய படகைப் பிடித்துத் தன் ஆயுதங்களுடனும் அதிற் பிரயாணஞ் செய்தார். அந்நாளில் இவரின் பெயரைக் கேட்ட உடனே பிரேசிலியர்களுக்கு ஒருவித பயம் தோன்றிற்று. அவரின் ஒவ்வொரு செயல்களும் அச்சத்தையும் ஆச்சர்யத்தையும் விளைவித்தது. அவர் ஒரு தடவை குண்டினால் காயமடைந்து பன்னாள் படுக்கையினி லிருந்தார். மற்றொரு சமயம் குவால்குவே நாட்டரசப் பிரதிநிதியால் சிறை செய்யப்பட்டு அவரால் பல துன்பங்கள் அடைந்தார். பின்னர் நடந்த ஓர் சண்டையில், லியோ-நார்டோமிலான் என்னும் அந்தப் பிரதிநிதி இவர் கையில் சிக்கவே அவரை,

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்துவிடல்"

என்னும் வாக்கியத்திற் கிணங்க நல்லவை செய்து விட்டுவிட்டார். இவர் கடலில் தன் சகோதர இத்தாலியர்களுடன் செல்கையில் சாண்டா கடாரினா என்னும் இடத்திற் கருகாமையில் ஒரு கற்பாறையில் மோதிக் கப்பலுடைந்து போயிற்று. கரிபால்டி நீந்திக் கரையேறினார். தன் கண் முன்னே தன் சகோதரர்கள் முழுகுவதைக் கண்டு மன வருத்தமுற்றுத் தனது இடையறாச் சாமர்த்தியத்தினாலும் அஞ்சா நெஞ்சுடனும் களைத்துப் போயிருக்கும் அச்சமயத்திலும் மிக்க தைர்யத்துடன் தனது விடா முயற்சியினால்

ஒரு சிலரைக் கரை கொணர்ந்தார். எஞ்சின அவர்களை அழைத்துக் கொண்டு லாகுனா என்னும் துறைமுகம் நோக்கிச் சென்றார். அங்கு பிரேசிலியக் கப்பல் ஒன்று அந் நகரத்தாரிடம் சரண் புகுந்திருந்தது. அங்குச் சென்றவுடன் 'இடாப்ரிகா' என்னும் யுத்தக் கப்பலுக்குத் தலைவராக நியமிக்கப் பட்டாராயினும் அவரது மனம் கடலில் ஆழ்ந்த இத்தாலியரிடமே இருந்தது என்பது, கீழ் வருபவனவற்றால் நன்கு விளங்குகின்றது.

"என்னுடைய கப்பல் உடைந்ததும் எனது தேயத்தார் கடலில் மூழ்கியதும் எனக்கு மிக்க துக்கத்தை விளைவித்தது. நான் அக் காலத்தில் உலகில் தனியனாக விருப்பதாகத் தோன்றிற்று. அதனால் என் பக்கத்தில் எப்பொழுதும் இருக்கவும் என்னைத் தேற்றவும் ஆற்றலுடைய ஓர் கன்னிகையை அக் காலத்தில் விரும்பினேன். என் பக்கலில் அப்படிப்பட்ட ஒருவர் இல்லாது போனால் என்னுயிர் நிலைத்திருக்காது போன்றிருந்தது. அதிர்ஷ்டவசமாக நான் கப்பலின் மேல் தளத்தில் நின்று கரையைத் தூரதிருஷ்டி கண்ணாடி கொண்டு நோக்கின பொழுது தென்புறத்தில் ஒரு குன்று தென்பட்டது. சற்று உற்று நோக்கின பொழுது அங்கு சில குடிசைக ளிருக்கக் கண்டேன். அக் குடிசைகளுக் கிடையில் ஓரிள நங்கை நிற்பதைப் பார்த்தேன். எனக்கு அங்குச் செல்ல வேண்டுமென்ற ஆசை உண்டாயிற்று. உடனே எனதாட்களைப் பார்த்துக் கரைக்குச் செல்வதற்கு ஒரு சிறு படகைத் தண்ணீரிவிடச் சொல்லிக் கரையை அடைந்தேன். வேகமாகக் குன்றை நோக்கிச் சென்றேன்.

அங்கு நான் முதன் முதலாக ஓர் மனிதனைக் கண்ணுற்றேன். அவன் என்னை யாரெனத் தெரிந்து கொண்டு காப்பி யருந்த வீட்டினுள் அழைத்தான். நான் வீட்டினுள் சென்றதும் முதலில் கண்ணுற்ற அம் மடந்தை அங்கு நிற்கக் கண்டேன்..........சிறிது பொழுது நாங்கள் ஏதோ ஆலோசனையி லிருப்பவர் போன்று மௌனமா யிருந்தோம். பிறகு நான் அம் மாதை நோக்கி, 'நான் உன்னைக் காதலிக்கின்றேன்' என்று சொன்னேன். எனக்கு அப்பொழுது போர்ச்சுகீசிய பாஷை நன்றாகப் பேசத் தெரியாது



என்றாலும் நான் அநேகமாக இத்தாலிய பாஷையிலேயே பேசினேன்."

அனிடாரிபேரஸ் என்ற அம்மாதின் தகப்பன் அவள் விரும்பாத ஓர் புருடனுக்கு அவளை மணஞ் செய்து கொடுக்க நிச்சயம் செய்து இருந்தான். மிகவும் பெருந்தன்மை வாய்ந்தவளும் பலவந்தமாகச் செய்யப்போகும் மணத்தினால் பயமடைந்தவளுமாகிய அனிடா, தன் எதிரில் கம்பீரமான பார்வையுடனும் அந்நாளில் அந்நாட்டில் பிரக்யாதி அடைந்தவரும் தன்னை மீட்க வந்தவருமாகிய கரிபால்டியை உற்றுநோக்கிக் கொண்டிருந்தாள். அவரிடம் அவளுக்கு மிகுந்த நம்பிக்கையிருந்தது. தனக்குத் தேடின கணவனிடம் வாழ்வதைவிட உயிர்விடச் சித்தமாயிருந்தாள். அக்குறிப்பை அறிந்த கரிபால்டி அவளைத் தன் கப்பலுக்குத் தூக்கிச் சென்றார். அவர் அனிடாவை மாண்டிவிடோ என்னுமிடத்தில் விவாகம் புரிந்து கொண்டார். பிறகு அவர் வழக்கம்போல் தண்ணீரிலும் கரையிலும் பிரயாணஞ்செய்ய ஆரம்பித்தார். அனிடா கப்பலுக்கு வந்த சின்னாட்களுக்கெல்லாம் ஒரு கப்பற் சண்டை நடந்தது. அதில் அனிடாவும் கைத் துப்பாக்கிகொண்டு யுத்தம் செய்தாள். மூவர் ஒரே குண்டில் இறந்து படவே அவள் அதைக் கண்ணுற்று நிதானமாகத் தன் கைத் துப்பாக்கியில் குண்டுகளை வைத்துச் சுட ஆரம்பித்தாள். அனிடாவுக்கு நன்றாகக் குதிரைச் சவாரி செய்யத் தெரியும். அனிடாவும் கரிபால்டியும் அன்றிற் பறவை போன்று இணைபிரியாதிருந்தனர். ஒரு சமயம் கரிபால்டி தென்பிரேசிலும் உராகுவே நாட்டிலும் சண்டை செய்யக் கொரில்லா சேனைகளுடன் செல்கையில் இருவருமாகவே சேர்ந்து சென்றார்கள். அவ்வாறு செல்கையில் நல்லுணவு இல்லாமலும் கரடுமுரடான தரைகளிலும் குளிரிலும் படுத்துறங்கி யிருக்கின்றனர். அவர்கள் சில சமயங்களில் ஆயிரக்கணக்கான சேனைகளுடனும் பதினாயிரக்கணக்கான சேனைகளுடனும் மிகச் சிறிய சேனைகளைக்கொண்டு வெற்றியடைந்திருக்கின்றனர். அதனால் கரிபால்டியின் புகழ் எங்கும் ஓங்கலாயிற்று. ஒரு தடவை நடந்த சண்டையில் அனிடாவின் குதிரை இறந்த

தினால், அவளுஞ் சிறை செய்யப்பட்டாள். உயுத்தத்தின் முடிவில் தன் கணவன் இறந்ததாகக் கேள்வியுற்றாள். ஆயினும் மனந் தளராது தன்னைக் காத்து நிற்போரிடம் தன் காதலனுடலைத் தேடியெடுக்க அனுமதி பெற்றாள். போர்க் களத்தில் புருஷனுடலைக் காணாது நிற்கையில் அவர் ஆடை அவள் கண்ணிலகப் பட்டது. அதனால் மனந்தேறினவளாய் தன் கணவன் இதில் சாகவில்லை யென்னும் உறுதி கொண்டாள். கரிபால்டியோ முதுகு காட்டியோடும் தன் சேனைகளுடன் சென்றுகொண்டிருந்தார். அனிடா இருளாயிருந்ததினாலும் காவற்காரர் குடித்து மயங்கி இருந்ததினாலும், அவர்கள் கண்ணிலகப்படாது எதிரில் தற்செயலாய் நின்ற ஓர் குதிரையின் மீதேறிக் காற்றினும் கடிதாகச் சென்றாள். நான்கு நாள் வேகமாக இரவும் பகலும், நல்லுணவு இன்றியும், காடென்றும் மலையென்றும் பாராமல் காய் கனி கிழங்குகளை யுண்டு எதிரில் எதிர்ப்பட்ட ஆறுகளில் நீந்திக் கரையேறியும் இறந்து பட்டதாகக் கேள்வியுற்ற தன் கணவனைக் கண்ணுற்றாள். மறுபடியும், பன்னிருநாட் சென்று பிறந்த மினோடி என்னுங் குழந்தையுடனும் தன் கணவனுடனே மலைகளிலும், அடர்ந்த காடுகளிலும், பள்ளத் தாக்குகளிலும், பாலை வனங்களிலும், சதுப்பு நிலங்களிலும், (மலை) சரிவு நிலங்களிலும், கந்த மூலாதிகளை யுண்டு கஷ்டத்துடன் கடும் பிரயாணஞ் செய்தாள். அவ்வாறு பிரயாணஞ் செய்தபொழுது தன் குழந்தையைக் கணவன் கரிபால்டியிடம் ஆறுகளைக் கடக்க நேரிடும்பொழுது கொடுத்தும், மற்றைய மற்றைய நேரங்களில் குதிரையின் சேணத்தில் கட்டிய தொட்டிலில் இட்டும் காப்பாற்றினாள். 'ஒரு சிறு துணியை என் மூச்சுக் குழந்தை மினோட்டி மேற் பொத்தி, அதனால் குளிர் அதனை நெருங்காதபடி மார்போடணைத்து எடுத்துச் செல்வேன்' என்று அவர்கள் பிரயாணஞ் செய்த வரலாற்றைக் கூறியிருக்கின்றார்.

## ஐரோப்பா பிரயாணமும் புகழின் பெருக்கும்

கடைசியில் யுத்தத்தின் மீது வெறுப்புற்றுத் தன் சேனாதிபத்யத் தொழிலைத் துறந்தார். தன் காலத்தைச் சுகமாகக் கழிக்க வெண்ணி உராகுவே நாட்டுத் தலை நகரான மாண்டிவைடோவை



அடைந்தார். ஆனால் அவர் எண்ணியபடி நடக்கவில்லை. அக்காலத்தில் உராகுவே நாடு ஆர்ஜென்டினா கலகக்காரர்களால் பிடிக்கப்படுவதாகப் பயமுறுத்தப் பெற்றது. அதனால் அவர் மறுபடியும் சேனைத் தலைவர் பதவியை மேற்கொள்ள வற்புறுத்தப் பட்டதினால், வேறு வழி காணாது ஏற்றுக்கொண்டார். பிறகு அவர் பெரும் புகழ் படைத்த "இத்தாலியப் படை" என்ற ஒரு சேனையை உண்டாக்கினார். மாண்டிவைடோ நகரம் முழுவதும் இத்தாலியிலிருந்து நாடு கடத்தப்பட்டவர்கள் நிறைந்திருந்தனர். அவர் மாண்டிவைடோவிலுள்ள ஜனங்களையும் மற்றும் சுற்றுப்புறமுள்ள ஜனங்களையும் சேர்த்துத்தான் இத்தாலியப் படையை ஆரம்பித்தார். எரிமலை அடையாளம் நடுவிலுள்ள கருப்புத் துணியைக் கொடியாகக் கொண்டார். அது இத்தாலியர் துக்கக் குறியாகும். படைகளினுடைகள் சிகப்பு. தன் சேனைகளை மிக்கத் திறமையுடன் யுத்தஞ் செய்வதற்குப் பழக்கினார். அவர் தன் படையின் சாமர்த்தியத்தைப் பற்றி "இவ் வுலகிலுள்ள எல்லாப் பொருள்களைக் கொடுக்கினும் என் படையின் பெயரை மாற்றச் சம்மதியேன்" என்று புகழ்ந்திருக்கின்றார். மாண்டிவைடோவைப் பல யுத்தங்கள் புரிந்து காப்பாற்றினார். செயின் அந்தோனி என்னுமிடத்தில் நடந்த யுத்தத்தில் வெற்றி பெற்றதும், அவரது புகழ் தென் அமெரிக்காவினின்று கிளம்பி ஐரோப்பாவை யடைந்தது. இத்தாலியிலுள்ள ஜனங்களும் தேசத் தொண்டர்களும் இவரது வரவை எதிர்பார்த்து நின்றனர்.

பன்னிரு ஆண்டுகட்குப் பின்னர் (1848) தான் ஐரோப்பாவில் "விடுதலை முழக்கம்" முழங்க ஆரம்பித்தது. அவ்வமயம் பிரஞ்சு சுயராஜ்யமடைந்தது. வெர்டினண்ட் அரசருக்கு எதிரிடையாக சிசிலி அரசாங்கம் கிளம்பி சுயேச்சை யடைந்தது. மிலானியர் ஆஸ்திரியர்களை நாட்டை விட்டுத் துரத்தினர். வேனிஸ் விடுதலை யடைந்தது. ஆஸ்திரிய சேனாதிபதி ராட்ஸ்கி என்பவர் மான்சுவா, வெக்னாரோ, பெஸ்சிரா, வெரோனா என்னும் பெரிய கோட்டைகளின் பக்கத்தில் எதிரிகளை எதிர்க்க முடியாது வடக்கிலுள்ள பெரன்னர் கணவாயைக் காத்து நின்றார். அவ் வழியாகத்தான்

ஆஸ்திரியர் சேனைகள் ஆல்ப்ஸ் மலைக்குத் தெற்கிலுள்ள லம்பார்டியை யடைய வேண்டும். ஆனால் அவர்களுக்கு வடக்கிலுள்ள ஆஸ்திரிய ஹங்கேரி இராஜ்யத்தின் உள் நாட்டில் பல கலகங்கள் ஏற்பட்டு அதனால் பற்பல பாகங்களாகப் பிரிந்து விடும்போலிருந்தது. சார்லஸ் ஆல்பர்ட் அரசர் தேசப் பற்றால் இத்தாலியர் படையெடுத்து வராதபடி தடுத்து நின்றார். மக்களிடம் கருணையுள்ள மேற்றிராணியாகிய பியாநாநோ என்பவர் செயின்ட் பீடர் சிம்மாசனம் ஏறி ஜனங்களுக்கு நன்மைகள் பல செய்து அவர்களது மதிப்பை யடைய முயன்றார்.

இங்கு இவ்வாறு நடந்துகொண் டிருக்கையில்தான் கரிபால்டி ஐரோப்பா நோக்கிப் புறப்பட்டது. ஸ்பொன்ஸா என்ற கப்பலில் எண்பது போர் வீரருடனும் நண்பரோடும் அட்லாண்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து வந்து கொண்டிருக்கும் கரிபால்டிக்கு இங்கு நடப்பன வொன்றும் தெரியவரா. பன்னிரு ஆண்டுகட்கு முன் தனக்கு மரண தண்டனை விதித்த சார்லஸ் ஆல்பர்ட் அரசனே தன்னுடைய வரவை எதிர்பார்த் திருப்பதாக மாத்திரம் அறிவார். அவர், தன் மனைவி அனிடாவையும் குழந்தையையும் முன்னதாகவே தன் னில்லத்திற்கு அனுப்பி வைத்தார். நாடு கடத்தப் பெற்ற இத் தேசத் தொண்டர்கள் தங்கள் நாடு நெருங்க நெருங்க கடவுளைத் தொழுதும் தேச கீர்த்தனைகளைப் பாடிக்கொண்டும் வந்தனர். 'கப்பலை வேகமாகச் செலுத்துங்கள்' என்று எல்லோரும் ஏகோபித்துக் கூறவே கப்பல் முழு வேகத்துடன் நைஸ் நகர் நோக்கிச் சென்றது. கரிபால்டி மாண்டிவைடோவின் கொடியை எடுத்துவிட்டு மூன்று நிறமுள்ள ஒரு படுக்கை விரிதுணியும், ஒரு சிறு சிகப்புத் துண்டும், ஒரு போர்க் கோலமுள்ள பச்சைத் துணியும் சேர்த்துக் கட்டி பறக்க விட்டார். இக் கொடியின் கீழ் கரிபால்டி 1848-ம் வருடம் ஜூன் மீ 21உ தனது சொந்த ஊரில் பலத்த கரகோஷத்தினிடையே சென்றடைந்தார். அனிடா தன் சிறார்களுடன் துறைமுகத்திற்குச் சென்றிருந்தாள். கரிபால்டி நைஸில் அதிக நாள் தங்கியிருக்க முடியவில்லை. அவர் ஜூலை மீ 3உ இராஜதானி நகருக்குச் சென்று சார்லஸ் ஆல்பர்ட் அரசரிடம் இராஜ



விசுவாசப் பிரமாணம் செய்து கொடுத்தார். அரசரும் அவரை எவ்வளவு குளிர்ந்த மனதுடன் வரவேற்ற போதிலும், ரிஸி என்னும் யுத்த மந்திரியினால் கரிபால்டியின் மனம் புண்படலாயிற்று. இதனால் மனமுடைந்த கரிபால்டி மிலானுக்குச் சென்றார். அங்கு தற்காலிகமாக அரசாளும் அரசாங்கம் அவரை அன்புடன் வரவேற்று பெர்காமோ என்னுமிடத்திற்கு நல்ல உடையின்றியும், போதிய ஆயுதமின்றியும் சொற்ப சேனைகளுடனும் அனுப்பினது. சின்னாட்களுக்குள் 300 தொண்டர்கள் அவரை வந்தடைந்தனது. ஜெயலக்ஷ்மி இன்னும் அவரை யடையவில்லை. ஏனெனில் ஜூலை மீ 25உ கஸ்டுசா என்னுமிடத்தில் சார்லஸ் ஆல்பர்ட் அரசரின் சேனாதிபதியின் திறமையின்மையால் தோற்கடிக்கப்பட்டு அதனால் அந் நகரம் ஆஸ்திரியர்களிடம் சரணமடையவிட வேண்டியதாயிற்று. ஐந்து மாதங்கட்கு முன்னர் ஐந்து நாளிரவும் பகலும் ஓயாது சண்டையிட்டு ஆஸ்திரியர்களைத் துரத்தினவர்கள் இப்பொழுது அவர்களிடமே சரணமடைய நேரிட்டதினால் ஜனங்கள் அவரைத் தூற்றினர். போப்பும் ஆஸ்திரியர்கள் மேல் போர் தொடுக்க எண்ணமில்லை என அறிக்கை யிட்டு விட்டார். ஆதலால் பொது ஜனங்கள் ஆல்பர்ட் அரசருக்கும் போப் பியா நாநோவிற்கும் இட்ட சாபத்திற்கோர் அளவில்லை. கரிபால்டி 5000 மைலுக்கப்பாலிருந்து கடலைத்தாண்டி விடுதலைக்காகப் போரிட வந்து இங்கு நடப்பதைக் கண்ணுற்று மிக்க மனத்துய செய்தினர். மிகுந்த கோபத்தினால், ஆஸ்திரியர்களின் யுத்த உடன்படிக்கையை ஒப்புக்கொள்ள மறுத்து 'கடவுளும் மக்களும்' என்னும் வாக்கியம் எழுதிய கொடியைத் தாங்கிச் சில வீரர்களோடு ஆல்ப்ஸ் மலை அடிவாரத்தில் ஆஸ்தியர்களுடன் மூன்று வாரம் கடும் போர் புரிந்தார். ஆஸ்திரியர்கள் தங்களைத் துரத்திவிடுமுன் தாங்கள் சண்டையிடுவது ஜனங்களின் சுதந்திரத்திற்காகவே யன்றி, போப் அல்லது ஆல்பர்ட் அரசருக்காகவாவது சண்டை செய்யவில்லை யென்று ஒவ்வொரு இத்தாலியர் மனதிலும் வேரூன்றும்படி செய்ததோடல்லாமல், அவர்களுக்குத் தன் இணையிலாச் சாமர்த்தியத்தினால் காலத்திற்கேற்றவாறு யுத்தஞ் செய்வதற்கும் பழக்கினார்.

## வீரச் செயல்கள்.

பிறகு ஜுரத்தினால் பீடிக்கப்பெற்று தன் சேனைகளைக் கலைத்துவிட்டு நைஸ் நகருக்குத் திரும்பினார். ஆனால் அவர்களுக்கு ஓய்வு எடுத்துக்கொள்ள இஷ்டமில்லை. அவர் மறுபடியும் ஜனங்களுக்காகச் சண்டையிட ஆரம்பித்தபொழுது ஜுரம் அவரைவிட்டு நீங்கிற்று. அவர் முதலில் சிசிலி இராஜ்யத்திற்காகவும் பிறகு ரோமக்னாவை நோக்கிச் செல்வதற்காகவும் லாகார்ன் நகரையடைந்தார். ஆனால் அவர் எல்லைப்புறத்தை யடைந்ததும் மிக்கத் திறமையுள்ள ரிசி என்னும் போப்பின் மந்திரியால், அரசாங்கத்துக் கெதிரிடையாக ஜனங்களைக் கிளப்பக்கூடாதென்னும் காரணத்திற்காக அங்கு போக விடாது தடுக்கப்பட்டார். அதனால் அவர் ரோமக்னா செல்வதற்குப்பதிலாக ரேவன்னுக்குச் செல்ல வேனிஸை யடைந்தார். ஆனால் அவர் அப்பொழுது ரிசி என்னும் அந்த மந்திரி கொல்லப்பட்டதாக அறிந்தார். போப் பியாநோநா தன்னுயிருக்குப் பயந்து கெய்டா என்னுமிடத்திற்குக் குடியானவன் வேடம் பூண்டு மறைந்தோடிவிட்டார். தக்க தலைவர் இன்மையால் ஒருவரைத் தேர்ந்தெடுக்கக் குடியாட்சித் தலைவர்களெல்லாம் ரோமை நோக்கி வந்தனர். கரிபால்டி 500 வீரர்களுடன் அபிநயின்ஸ் தாண்டி அம்பெரியாவின் வழியாகத் தலைநகரை நோக்கிச் செல்லும்பொழுதே வழியிலிருந்த நகரங்கட்கும் கிராமங்கட்கும் சுதந்திரமளித்துக் கொண்டே சென்றார். போப்பும் குடிகளிடம் கொடுமையா யிருந்ததினாலும், தற்காலீகமாகத் தலைவர் ஒருவரின்மையாலும் ஒரு தலைவரைத் தெரிந்தெடுக்க 1849ம் ஆண்டு பிப்ரவரி மீ அவர்களடங்கிய ஒரு சபை கூட்டினார்கள். பிப்ரவரி மீ 8-ம் தேதியில் உரோம் குடியேற்ற நாட்டுப் பதவியை யடைந்துவிட்டதாகவும், மாஸினியை அதற்குத் தலைவராக ஏற்படுத்தியதாகவும் தீர்மானிக்கப் பெற்றது. உரோம் அவ்வளவு சீக்கிரத்தில் எதிரிகளிடமிருந்து விடுதலை பெற்றுவிடும் என்று அவர் எண்ணவேயில்லை. "நாம் எப்பொழுதும் பகைவர் முன்னிலையி லிருப்பதாகவே நினைத்துக் காரியங்களைச் செய்தல் வேண்டும்" என்பது மாஸினியினுடைய வாக்கியம். அவரின் ஆட்சி உறுதியானதும், எல்லோ



ருக்கும் நன்மை புரிவதாயும், எல்லோராலும் புகழப்படுவனதாயும் இருந்தது. அவர் லஞ்சம் பெறுவதை யறவே யொழித்தார். அவருக்குப் பழைய விரோதிகளின்மேல் துரோக சிந்தனையே கிடையாது. அவர் பாரபக்ஷம் இல்லாமலும் யாவரிடத்திலும் ஒரே நீதியுடனு மிருந்தார். மார்ச்சு மீ 23உ சார்லஸ் ஆல்பர்ட் அரசரை நோவாஸ்கா என்னுமிடத்தில் ராட்ஸ்கி தோற்கடித்தது, அவசரச் செய்கையே. சாகுந் தருணத்தில்தான் அரசர், தான் செய்த செய்கைகள் பிசகென்று உணர்ந்தார். அவர் மிலானிய சாபத்துக் கிடையே போருக்குப் புறப்பட்டுச் சென்றார். போர் புரிந்தார்; தோல்வியடைந்தார். என் செய்வார்? மனமுடைந்த மன்னன், தன் புதல்வன் விக்டர் இமான்யுவேலுக்காக அரசைத் துறந்து போர்ச்சுகீசை அடைந்தார். சென்றும் பயன் என்ன? மனமுடைந்ததால் மரண மடைந்தார். இளவரசன் பிரஞ்சு அரசாங்கத்தை, ஆஸ்திரியர்களின் படையெடுப்பைத் தடுக்க மன்றாடிக் கேட்டு பெய்டமாண்ட் நகரைக் காப்பாற்றினான். ஐரோப்பாவிலுள்ள எல்லா கத்தோலிக்கர்களும் உரோமையும் மேற்றிராணியையும் மீட்க முன் வந்ததினால் பெய்டமாண்ட் காப்பாற்றப்பட்டது. ஆஸ்திரியர்கள் வடக்கிலிருந்தும் நேப்பிள்ஸ் அரசாங்கத்தார் தெற்கிலிருந்தும் வந்து எதிர்த்தனர். ஸ்பானிய அரசாங்கத்தார் குடியாட்சியாளர்களைத் துரத்த முயன்றனர். பிரஞ்சு ராஜ்யம் லூயி நெப்போலியனின் கொடிய சொற்கேட்டு உரோமையம்பதியை அன்னியரிடமிருந்து மீட்க முற்பட்டு நின்று நிறைவேற்றியது. சுதந்திரத்திற்காகப் பாடுபடுவது பிரஞ்சு அரசாங்கம். அன்னியர் யார்? கரிபால்டியும் மாஸினியும் அன்னியர்களா? அந்தோ! பிரஞ்சு அரசாங்கம் பிற்காலத்தில் இத்தாலிய விடுதலைக்குப் பெரிதும் உதவி புரிந்த போதிலும் தற்காலத்தில் போப்பைப் பழையபடியும் ஏற்படுத்தி அவர்களுடைய நாடுகளை மீண்டும் கொடூர குணமுடையதாகக் குருமாரைக் கொண்டு ஆளும்படி செய்ய முற்பட்டது. அதனால் செட்ரன் அழிந்ததும் கொடுமையினுங் கொடுமையே! ஆடிநாட் தளகர்த்தர் 10,000 சேனைகளுடன் உரோமுக் காரத் தலை நகரிலிருந்து 40 மைல் தூரத்திலுள்ள சிவிடாவெக்யா என்னுமிடத்தில் தங்கினர். கரிபால்டி தென்றிசை நோக்கிச் நேப்

பிள்ஸ் அரசரான இரண்டாவது வெர்டினண்டைச் சந்திக்கச் சென்றவர் இப்படையைச் சந்திப்பதற்காகத் திரும்ப அழைக்கப் பெற்றார்.

மாஸினி இத்தடவை கட்டாயம் அழிந்து விடுவோம் என்று தெரிந்தும் அவ்வாறு தன் உயிரைக் கொடுப்பதிலிருந்தாவது ஜனங்களுக்கு என்றும் மறக்கமுடியாத ஓர் உணர்ச்சி ஏற்படக்கூடும் என்று எண்ணினார்.

கரிபால்டி தனது சிகப்பு உடை தரித்த வீரர்களைக் கொண்டும் கருப்பு உடை தரித்த இத்தாலிய அரசாங்க வீரர்களைக் கொண்டும் மிக தைர்யத்துடன் சலிப்புறாது போர் புரிந்தார். கடைசியில் தங்களுக்கு வெற்றியில்லை யென்று தெரிந்த பிறகாவது கரிபால்டியைச் சேனாதிபதியாக நியமித்திருக்கலாம். ஆனால் அவரை நியமித்திருந்தால் வெற்றியாருக்கேற்படும் என்று விவாதிப்பது நமது வேலையல்ல வாகையினால், அதை விட்டு மற்ற விஷயங்களைக் கூறுதலே சாலச் சிறந்ததாகும். அவர் மாஸினிக்குத், தான் சேனாதிபத்தியத் தொழிலை மேற்கொள்வதா இல்லையா என்று எழுதிய கடிதம் பின்வருமாறு:—

“மாஸினி! நீ என் விருப்பத்தை அறிய வேண்டுமென்று விரும்புவதால், இதைப் படித்து அறிந்துகொள். நான் ஜனங்களுக்காக இரண்டில் சர்வ அதிகாரம் படைத்தவனாக அல்லது சாதாரண சிப்பாய் போன்று—ஒன்றைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்; இவற்றில் ஒன்றைச் செய்.”

முதல் முதல் நடந்த சண்டையில் பிரஞ்சுக்காரர்களுக்கு அதிக நஷ்டம் உண்டாயிற்று. கரிபால்டி அவர்களைத் திருப்பி முறியடித்துத் துரத்தினார். பிரஞ்சுக்காரர்களுக்கு மென்மேலும் படைகள் வந்து சேர்ந்து கொண்டே யிருந்ததால், கரிபால்டி நாளுக்கு நாள் மிகத் தந்திரத்துடன் போர் புரிய ஆரம்பித்தார். நேரில் பார்த்த ஒருவர் அவரின் உடலமைப்பைப் பற்றியும் அவர் திறமையைப் பற்றியும் கீழ்க்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்.



“அவரின் பெயர் எல்லோருக்குந் தெரியும். அவரிடமே ரோமிலுள்ள ஜனங்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்.

நடுத்தர உயரமும், அகன்ற தோளும் வீரனுடையுடன் விளங்கும் விரிந்த மார்பை யுடையவருமாகிய அவர் எங்கள் கண்முன் நின்றார். அவருடைய நீலநிறக் கண்கள் பார்ப்போர் மனதைக் கொள்ளை கொண்டது. கண்களின் தோற்றம் என்றும் மறவாத ஓர்வித உணர்ச்சியை உண்டாக்கிற்று. அவருடைய முகம் கோபத்தினால் சிவந்திருந்தது. பரந்த முகத்தில் உள்ள அடர்ந்த மீசை இரு பிளவு பட்டதாயும் பார்ப்போர் மனதில் பயங்கரத்தை விளைவித்தது. எல்லாவற்றையும் விட மூக்கு அடியில் பெருத்தும் சிங்கம் போன்று விளங்கிற்று. அவர், பலம் பொருந்திய சேனா வீரருடன் யுத்தஞ் செய்யுங்காலையில் அவர் கண்களில் தீப்பொறி பறந்தது. அவருடைய தலைமயிர் ஓடுங் குதிரையின் பிடரிமயிர் எவ்வாறு ஆடுமோ அவ்வாறே இருந்தது. அவர் சிகப்பு ஆடையணிந்திருந்தார். அவர் தலைப்பாகையில் நெருப்புக் கோழியின் இறகுகளில் இரண்டு இருந்தன. அவரது வலது கையில் ஓர் வாளும் இடது தோளில் சேனா வீரருக்குறிய ஒரு பையும் தொங்கிற்று.”

அவரின் பக்கத்தில் அந் நாளில் ஆகுயர் என்னும் பருத்த தேகமுடைய நீக்ரோ ஒருவன் எப்பொழுதும் இருந்துகொண்டேயிருந்தான். பிரஞ்சுக்காரர்களுடன் கடைசியாக நடந்த ஓர் யுத்தத்தில் அவன் கொல்லப்பட்டான். கரிபால்டி வீராவேசத்தோடு போர்க்கள முழுவதும் சுற்றித் திரிந்தார். இந் நாட்களில் கரிபால்டி தன் வீரர்களில் பலரும் நண்பரில் பலரும் இறந்து பட்டத்தைக் கண்ணுற்று ஆற்றொணாத் துயரடைந்தார். அவர் அதனால் தன்னுயிரை மாய்த்துக் கொள்ள விரும்பினார். அவர் தன் மேல்தளத்தின் மேல் பிரஞ்சுக்காரர்கள் தன்னைக் குறிவைத்துச் சுடுவதற்குத் தகுதியான இடத்தில் இரவில் படுத்து நித்திரை செய்வார். அவரை எதிரிகளினுடைய குண்டுகளிலிருந்து ஒருவித சக்தி காப்பாற்றிற்று என்றே சொல்லல் வேண்டும். ஏனெனில் அவர் மூன்று நாட்கள் தனது உடன் உத்தியோகஸ்தர்களை விருந்திற்கழைத்து விருந்துண்ணும் பொழுது, மூன்று நாளும் கரிபால்டி தவிர ஏனையோர் கொல்லப் பட்டனரான நிலையேயாம்.

"கடவுளே என்னைத் தன் நிழலினால் காப்பாற்றினார்" என்று அவர் இயம்பி இருக்கின்றார்.

முடிவில் அவர் இரண்டு கூட்டங்களின் தலைமையில் இத்தாலிய கீதங்களைப் பாடிக்கொண்டு சென்றார். "எனக்கு அக் காலத்தில் ஒரே ஒரு ஆசைதானிருந்தது; கொல்லப்படுவதுதான். நான் பிரஞ்சுக்காரர்களுக் கிடையில் என்னுடைய ஆட்களுடன் சென்றேன். பிறகு என்ன நடந்தது என்று ஒன்றுமே தெரியாது. இரண்டு மணி நேரம் வரை இடைவிடாது போரிட்டேன். பொழுது புலர்ந்ததும் என் தேக முழுவதும் இரத்த மயமாக விருக்கக் கண்டேன். ஆனால் என் மேல் ஒரு காயமாவது கிடையாது."

காலையில் அவர் யுத்தஞ் செய்து கொண்டிருக்கும் பொழுது ஒருவன் அவரிடம் ஓடி வந்து ஒரு சபையைக் கூட்டி யிருப்பதாகவும் அவரை அவசரமாக விரும்புவதாகவும் தெரிவித்தான். அவர் மிக்க வேகத்துடன் சென்று அக் கூட்டத்தினுள் நுழைந்தார். அவருடைய முகத்தில் வேர்வை முத்துக்கள் போன்று அரும்பி யிருந்தது. அவருடைய வாள் உறையினுட் செல்ல முடியாதபடி வளைந்திருந்தது. சபைக்கு மூன்று விடயங்கள் ஆலோசனைக்குக் கொண்டு வரப்பட்டது: (1) சரணமடைவதா (2) அல்லது சண்டையிட்டு இறப்பதா (3) அல்லது மலை—காடுகளில் ஓடி ஒளிந்து கொள்வதா என்பதே. கரிபால்டி மூன்றாவதை விரும்பினார். சரணமடைதல் என்றால் அவர் வாது புரியார்; சாதல் மூடச் செய்கை என்பது அவரது எண்ணம். 'நாம் எங்கு செல்லினும் அங்கும் உரோமைக் காண்போம்' என்றவர்களுக் கறிவுறுத்தி பிறகு, ஜானி-குழுக்குச் சென்றார். அவர் சென்றதும் சபை சரணமடையத் தீர்மானித்தது. மாஸினி அதற்கு ஒத்துழைக்கவும் ரோமையம்பதியின் பெருமையைக் குறைவடையச் செய்யவும் உடன்படவில்லை. மெய்காப்பாளர் இன்றி அழிவுற்ற அந் நகரத்தின் வழியாக சிவிடாவெக்யாவிற்குச் சென்று அங்கிருந்து ஸ்விட்சர்லாண்டு தேசத்தை யடைந்து அங்கு உரோமைத் தலை நகராகவுடைய இத்தாலி மீண்டும் சுயேச்சை பெறுதற்குரிய காரியங்களைச் செய்து கொண்டிருந்தார். இது இங்ஙனமிருக்கக் கரிபால்டி தன்



படைகளைக் கூவி உரோமைத் துறந்து காடுகளிற் செல்லக் கட்டளையிட்டார். "நான் உங்களுக்குப் புதிய சண்டையும் புகழும் உண்டாகும்படி செய்கின்றேன். என்றால் உங்களுக்குச் சம்பளம், ஓய்வு, உணவு முதலியவைகளைக் கொடுக்கமுடியாது. நீங்கள் உணவு கிடைத்த விடத்தில் உண்ணல் வேண்டும். இவைகளுக்குச் சம்மதியாதவர் இங்குத் தங்கிச் சரணமடையலாம்" எனக் கூறவே, 5000 வீரர்கள் அவரைப் பின் தொடர முன் வந்தனர்.

## அனிடா ஆவி துறத்தல்

ஜூலை மீ 2உ பிரஞ்சுக்காரர்கள் தலை நகரில் நுழைவதற்கு ஏற்பாடு செய்துகொண் டிருக்கையில் அஞ்சா நெஞ்சுபடைத்த நம் வீரர்கள் டைவோலிவாசலின் வழியாக் எங்கு போவதென்ற நோக்கமின்றிச் சென்றனர். அவர்களுக்குப் பின்னால் கரிபால்டியும், ஆண் உடை யணிந்த அனிடாவும், யூகோ பாசி என்னும் பாதிரியும் சென்றனர். இரவு வந்ததும், அவர்களைப் பிரஞ்சு நெப்போலிய ஆஸ்திரியப் படைகள் தொடர்ந்தது. தேசத் தொண்டர்கள் நிசப்தமாகவும் வேகமாகவும் காம்பக்னாவைத் தாண்டிச் சென்றனர். அவர்கள் காலை 7 மணிக்கு டைவோலியை யடைந்தனர். அங்கு ஒரு சிறு சண்டை நடந்தது. சேனைகள் எல்லாப் பக்கங்களிலும் சூழ்ந்திருந்ததினால் மலையிலுள்ள ஒற்றையடிப் பாதை வழியாகத் தங்கள் தலைவர் முன் செல்லப் பின்னே சென்றனர். டேஸ்கானியிலும், போப் ஆளுகைக் குட்பட்ட நாடுகளில் மாத்திரம் 30,000 பிரஞ்சுக்காரர்களும், 12,000 நெப்போலியப் படையினரும், 6000 ஆஸ்திரியர்களும், 2000 டேஸ்கானியர்களும் கரிபால்டியை அடக்குவதற்காக இருந்தனர். பசி தாகம் முதலியவைகளைக் கவனிக்காது அபிநயின்ஸ் வழியாகக் கிழக்கு நோக்கிச் சென்று சென்மாரினோ என்னும் சுய ஆட்சி பெற்ற நகரை அடைந்தனர். ஆஸ்திரிய தளகர்த்தர் கோர்ஜ் கௌஸ்கி அந் நகரை முற்றுகை யிட்டு கரிபால்டியர்களைத் தன்னிடம் ஒப்படைத்தால் முற்றுகையிடுவதை விட்டுவிடுவதாகக் கூறினர். அவர் தன்னிடம் சரணமடைந்தால் அமெரிக்காச் செல்வதற்குக் கரிபால்டியை அனுமதிப்பதாகக் கூறவே, அவர் உடனே "நான் இத்தாலியிலிருக்கும் வரை

198598

என்னுயிரைக் காப்பாற்ற ஒரு ஒப்பந்தமுஞ் செய்யேன்" எனக் கூறினார். 900 பேர்கள் ஆஸ்திரிய தளகர்த்தன் வார்த்தையில் மயங்கிச் சரணமடைய அவர்கள் அப்பொழுதே சிறைப்படுத்தப் பட்டனர். 200 பேர்கள் கரிபால்டியைப் பின் தொடர்ந்தனர். அவர்கள் செஸ்னாடிகோ கடற்கரையை யடைந்து பதின்மூன்று மீன் பிடிக்கும் படகுகளை யபர்த்திக் கொண்டு அவைகளில் வேனிசை நோக்கிச் சென்றனர். அன்றைய மறுநாளிரவு ஆகாயம் மாசு மறுவற்று நிம்மதியுடன் விளங்கிற்று. அவர்கள் தலை விதியும் அவ்வாறே யிருந்தது போலும். ஏனெனின் அவர்கள் மிக்கக் களிப்புடன் செல்கையில் ஆஸ்திரியக் கப்பல் அவர்களைக் கண்ணுற்றது. உடனே அது அவர்களைத் தொடர்ந்து 162 கரிபால்டியர்கள் நிறம்பிய ஒன்பது படகுகள் பிடிக்கப்பட்டு கடலில் ஆழ்த்தப்பெற்றன. மிகுந்த நான்கு படகுகளி லிருந்தவர்களுடனும் கரிபால்டி அனிடாவைக் கையி லேந்தியபடியே கரையடைந்தார். இக்காலத்தே அனிடா வியாதி வாய்ப்பட்டிருந்தாள். அவள் உயிர் இப்பொழுதோ இன்னும் சற்று நேரத்திலோ பிரிந்துவிடும் போன்று இருந்தது. கரிபால்டி தன்னுட னிருந்தவர்களைக் கலைந்து போய் மறைந்து கொள்ளும்படி கட்டளை யிட்டார். பிறகு தனதுயிர்த் தோழன் லெகைரோ என்ற தளகர்த்தனுடன் தனது உயிருக்குயிரான அனிடாவின் உடலைத் தூக்கிக்கொண்டு கரையோரத்திலுள்ள சதுப்பு நிலங்கள் வழியாகவும், மணல் வழியாகவும் சென்றார். அவர்கள் இறங்கின இடம் மூன்று மைல் நீளமும், மூன்று மைல் அகலமும் உள்ளதொரு நிலப் பரப்பு. ஆஸ்திரியர்களும் அதி சீக்கிரத்தில் அங்குற்றுத் தங்களது இரையை யடைதற்குப் பிரயாசைப் பட்டனர். அவர்கள் கையில் சிக்கியவர்கள் ஒன்பது கரிபால்டியர்களே. ஒரு தகப்பனும், இரு புத்திரர்களும், ஒரு பதின்மூன்று வயதுப் பாலகனும், ஒரு ஜினோவா நாட்டுப் பாதிரியும், மற்று மைவருமாவர். "ஒன்பது குழிகள் தோண்டுங்கள்" என்று தளகர்த்தன் வாயினின்றும் ஓர் குரல் எழுந்தது. மணலில் குழி தோண்டுவது கஷ்டமா? விரைவினில் குழி தோண்டப்பட அக்கணமே அவர்களைச் சுட்டுப் புதைத்தனர். யூகோ பாசியும் பின்னர் பிடிக்கப்பட்டுச் சித்திரவதை செய்து கொல்லப்பெற்றார்.



கரிபால்டி தனது சுமையாம் அனிடாவுடனும் லெகைரோவுடனும் செல்கையில் தற்செயலாய் எதிர்ப்பட்ட ஒரு அன்புள்ள குடியானவனால் இரவு தங்க இடமளிக்கப்பட்டனர். அவர்கள் செல்கையில் லெகைரோவின் காலில் ஓர் குண்டுபட அவர் அதனால் படுகாயமடைந்தார். அப்போது அனிடா தாகித்திருப்பதாகக் கூறினாள். சதுப்பு நிலத்தில் நன்னீரேது? அவள் தன் கணவன் கையில் படுத்தபடியே திணரித் திணரி மூச்சு விட்டுக் கொண்டிருந்தாள். அவள் தன் கணவன் பக்கலில் தான் இருப்பதாக அறிந்தாளே ஒழிய அங்கு நடந்தனவொன்றும் அவளுக்குத் தெரியாது. அவர்கள் அவளை அங்கிருந்து மற்றொரு இல்லிற்குக் கொண்டு செல்லும் பொழுதே அனிடா ஆருயிர் துறந்தனள். இக்காலத்தே கரிபால்டியின் மனம் என்ன பாடுபட்டிருக்கும்? அவர் இது போது நவின்றது,

"நான் அவளுடனிறப்பதாக நினைத்தேன். அவள் திணரித் திணரி மூச்சு விடுவதைக் கண்டு அடங்காத் துயர் கொண்டேன். எனது காதலியின் மேல் உள்ள ஆசைமேலீட்டால் அவளது இறந்த முகத்தில் மிக்க துக்கத்துடன் முத்தம் பல கொடுத்தேன்."

அங்கு ஒரு கூட்டம் உடனே கூடிவிட்டது. அவர்கள் உள்ளே யிருப்பவர்தான் கரிபால்டி போலும் என்று பேசிக்கொண்டனர். ஆனால் அவர்களில் ஒருவராவது இத்தாலியை இகழ்ந்து பேசினார்களில்லை. அவர் அங்கிருப்பது அவர்களுக்கு ஆபத்தாகையால் அனிடா அந்தியச் சடங்கிற்கு அவர் அங்கிருக்கவில்லை. அவர்கள் அனிடாவினுடலைப் புதைப்பதற்கு எடுத்துச் செல்கையில் கரிபால்டியும் லெகைரோவும் வெகு தூரம் சென்று விட்டனர். என்னே அவர்களின் பிரயாணம்! அவர்களின் பிரயாணம் மறுபடியும் டேஸ்கன் மெர்மா என்னுமிடத்திற்குக் கொண்டு வந்து விட்டது. அவர்கள் நாற்பது நாட்களுக்கு மேல் மாறு வேடம் பூண்டு அபினையின்ஸ் மலையில் சுற்றித் திரிந்தனர். கடைசியில் மொம்மாவிற்குத் தைரியமாக வந்து சேர்ந்தனர். இதற்குள் டேஸ்கானியிலுள்ள தேசத் தொண்டர்கள் கரிபால்டியின் வரவை இரகசியமாக அறியவே எல்லாத் தீவின் எதிரிலுள்ள

காலமார்டினு என்னும் துறை முகத்தில் ஒரு சிறு படகைத் தயாராக வைத்திருந்தனர். கரிபால்டி தன் தோழன் லெகைரோவுடன் செப்டம்பர் 2வ சரியாகப் பத்து மணிக்கு அங்குச் சென்று உடனே அப் படகுகளிலேறி "நீடூழி வாழ்க இத்தாலி" என்று கூறித் தனது பிரயாணத்தைத் துவக்கினர்.

## பின்னர் நிகழ்ச்சிகள்

அனிடா இறந்த பின்னர் அவரது முயற்சி யெல்லாம் பயனற்றுப் போயின. அவரை ஜனங்கள் வெறுப்பதற்கு ஆரம்பித்தனர். அவர் தன் குழந்தைகளைப் பார்க்க நைஸுக்கு வந்த பொழுது விக்டர் இமான்யுவேல் அவரை நாட்டைவிட் டகலும்படி ஆணையிட்டார் அங்கிருந்து டூனிஸுக்குச் செல்ல பிரஞ்சு அரசாங்கத்தின் சொற் கேட்டு அவ் வரசாங்கமும் அங்கு அவரை அனுமதிக்க மறுத்தது. அங்கிருந்து ஜிப்ரால்டரை அணுக ஆங்கில அரசப் பிரதிநிதி அதை விட்டகலும்படி கூறினர். ஆகவே அவர் அமெரிக்காவை யடைய அமெரிக்கர்கள் அவரை அன்புடன் ஆதரித்தார்கள். அவர் அங்கு தன் வாழ் நாளை மெழுகு வர்த்தி செய்யும் தொழிலில் கழித்தார்.

1851ல் நியூயார்க்கிலிருந்து நிராக்வாவை யடைந்து, அங்கிருந்து லிமா என்னும் நகரை யடைந்தார். அவர் அங்கு ஓர் பழைய கப்பலுக்குக் கப்பித்தானுகி சேனுவிற்குச்சென்று அங்கிருந்து திரும்பி ஆஸ்திரேலியாவின் வழியாக வந்து 1853ல் நியூயார்க்கை யடைந்தார். 1854ல் நியூசெஸிலுக்குச் சொந்தமான 'காமன் வெல்த்' என்ற கப்பலுக்குத் தலைவராகி நிலக்கரி யேற்றி ஜினோவா வந்தடைந்தார். அங்கிருந்து அவசரமாகப் புறப்பட்டு நைஸை யடைந்து ஐந்தாண்டுகளுக்குப் பிறகுத் தன் குழந்தைகளைக் கண்ணுற்றார். பிறகு அவர் தன் பிரயாணங்களினுல் சேமித்த பொருளைக் கொண்டு சின்னுள் நைஸில் காலம் கடத்தினர். கொஞ்ச நாளில் அவர் சார்டினியாக் கரையோரமாகச் சிறிது நிலம் வாங்கி அங்குத் தன் குழந்தைகளுடன் குடியேறி நிலங்களை யுழுதும், தன் சிறார்களுக்கு எழுதப் படிக்கக் கற்றுக் கொடுத்துக் கொண்டுமிருந்தார்.



1859-ம் ஆண்டு காவூர் என்னும் பெயரிய தேசத் தொண்டர் விக்டர் இமான்யுவேலுக்கு மந்திரியானர். அவர் பிரஞ்சு அரசாங்கத்துடன் நேசஞ் செய்து கொண்டு அப்பொழுது அரசராயிருந்த லூயி நெப்போலிய னிடமிருந்து யுத்தத்தில் உதவி புரிய வருவதாக வாக்கு வாங்கிக் கொண்டார். பிறகு மிக்க தைர்யத்துடன் ஆஸ்திரியாவுடன் சண்டை செய்வதற்கான காரியங்களைச் செய்தார். கரிபால்டி டூரினுக்கு வரவழைக்கப்பட்டு யுத்தத்தில் உதவி புரியக் கோரப்பட்டது. ஆனல் காவூருக்கு கரிபால்டி மீது அன்பு இல்லை. ஆயினும் இத்தாலிக்கு அவரது உதவி அவசியமா யிருந்தது. அவர் 5000 போர்களடங்கிய "ஆல்ப்ஸ் மலை வேடர்" என்னும் சேனைக்குத் தலைவரானர். அவர் இத் தடவை நிச்சயமாக வெற்றியுறப் போவதாக நினைத்தார். ஏனெனில் அவரின் மேல் மற்றவர்களுக்கு நம்பிக்கை யுண்டாயிருந்தது.

பெய்டமாண்ட் சேனை 75,000 போர்கள் அடங்கியது. ஆனல் ஆஸ்திரியாவோ 200,000 பேர் அடங்கிய படையை வைத்துக் கொண்டு போர்க் களத்தில் காத்திருந்தது. பிரஞ்சு சேனை 160 000 போர்களடங்கியது. அது வரும் வழியில் மெஜண்டா சால்வெரினோ என்னு மிரண்டிடங்களில் வெற்றியை நிலை நாட்டியது. இவ் வெற்றியினுல் எல்லாரும் குதூகலமடைந் திருக்கையில் லூயி நெப்போலியன் 'இத்தாலியை ஒன்றுபடுத்த இஷ்டமில்லை' என ஓர் அறிக்கையிட்டான். பிரஞ்சு அரசருக்குத் லூயிநெப்போலியன் தனது எல்லைப்புறத்தில் ஓர் வலுவுள்ள அரசாங்கத்தை ஏற்படுத்த மனமில்லை தோற்கடிக்கப்பட்ட ஆஸ்திரியர்களுடன் வில்லாவ்ராங்கா என்னுமிடத்தில் ஒரு உடன்படிக்கை செய்து கொண்டான். அதில் பெய்டமாண்ட் புறக்கணிக்கப்பட்டது. காவூரும் சரிபால்டியும் பெரிதும் ஏமாற்றமடைந்தனர். தான் செய்த உதவிக்காக பிரஞ்சு அரசன் நைஸ் நகரை—கரிபால்டியின் சொந்த ஊரை அடைந்தனன். கரிபால்டி தன்னுயுள் உள்ளளவும் இத்துரோகத்தை மறக்கவில்லை எவ்வாறு மறத்தல் முடியும்? இமான்யுவேல் காவூரின் பேச்சைக் கேட்டு பெரிய ஏமாற்றமும் நட்டமும் அடைந்தான்.

## வெற்றிமேல் வெற்றி.

வில்லாவ்ராங்காவிற்குப் பிறகு சிசிலியிலுள்ள தேசத்தொண்டர்கள் வெர்டினண்டுக்கு எதிரிடையாகக் கிளம்பினர். "எங்களுக்குதவி செய்ய வாரும்" எனச் செய்தி யனுப்பினர். கரிபால்டியும் அங்கு சென்றார். கவூர் அவரை அங்கு செல்வதினின்று தடுத்தார். ஆயினும் புத்திசாலித்தனமாக விக்டர் இமான்யுவேல் தடுக்காது, "அவர் போகட்டும்; ஆனால் நாம் உதவி புரிய வேண்டுவதில்லை; அதனால் நமக்கு நன்மை யேற்பட்டாலும் ஏற்படலாம்" என இயம்பினான். கரிபால்டி சென்ற பொழுது அவருடன் ஆயிரம் பேர்கள் சென்றனர்.

1860-ம் ஆண்டு மே மாதம் 5௳ இரவு யுத்த தளவாடங்களை ஒரு சிறு படகில் வைத்துக்கொண்டு வில்லாஸ்பினேலா என்னுமிடத்திற்குச் சென்றார். அங்கே இரு பெரிய நீராவிக் கப்பலை இரவில் மாலுமிகள் தூங்கும் பொழுது சந்தடி செய்யாது பிடித்துக் கொண்டு அவர்களையும் தன்னுடன் சேரும்படி தூண்டினார். அப்பொழுது நள்ளிருளாயிருந்த போதிலும் கரையில் ஜனங்கள் கூட்டமாகக் குழுமி யிருந்தனர். கரிபால்டி அன்று காலில் ஒரு தளர்ந்த சட்டையும், ஒரு சிவப்பு மேலங்கியும் கழுத்தில் பளபளப்பான பட்டுக் கைக் குட்டையும் கட்டியிருந்தார். அவர் கையில் அப்பொழுது ஒரு பெரிய வாளிருந்தது. அவர் பெய்டமாண்டுக்கு அன்று இரவு புறப்பட்டுச் சென்றார். அன்றிரவின் வர்ணனையைப் பின்வருமாறு கூறியிருக்கின்றார். "வ ான்ளிரவே! இன்று [மேமீ 5௳] நீ இருக்கும் கோலத்தைக் காணக்காண எனக் கெவ்வளவு ஆனந்தம் பொங்குகின்றது. என்னே நின் அமைதி! நிம்மதியாய் விளங்குகின்றனையே! களங்கமின்றிப் பிரகாசிக்கின்றனையே! உன் களங்கமற்று விளங்கும் தன்மை என்போன்ற தேசத்தொண்டர் மனதில் களிப்பைக் களிப்புடன் ஊட்டுகின்றது. என் வீரர் கள்ளங் கபடின்றி அடிமை வாழ்வினின்றும் அகற்றப் பாடுபடப் போகின்றனர். நான் அவ்வாறு செய்வதில் பெருமை கொள்கின்றேன்."

கரிபால்டி இரவின் கோலத்தைப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கையில் கப்பலில் உணவுப் பொருள்களும் ஆயுதங்களும் ஏற்றி



முடிந்தது. மாலுமிகள் நீராவியுண்டாக்கிக் கப்பலைத் துறைமுகத்தை விட்டுப் புறப்படச் செய்வதற்குள் விடியற்காலம் அவர்களை நெருங்கிற்று. அவ்வமயம் பெண்கள் சந்தைக்குச் சென்று கொண்டிருந்தனர். கப்பல் துறைமுகத்தைத் தாண்டுவதற்கு முன் கரிபால்டி விக்டர் இமான்யுவேலுக்குக் கீழ்க்கண்ட கடிதம் ஒன்றை யனுப்பினார்:

"நான் இப்பொழுது ஒரு கஷ்டமான வேலையி லிறங்கியிருக்கின்றேன். என் துணைவர்களின் வெற்றிக்கும் அன்பிற்கும் கடவுளையே பூரணமாக நம்பியிருக்கின்றேன். நான் இக் காரியத்தில் தோல்வியுறின் இத்தாலியும் இளகிய மனதுள்ள ஐரோப்பாவும், நான் இவ்வேலையிலிறங்கியது தேசபக்தியால் அன்றி வேறு எக் காரணமுங் கொண்டல்ல என்று எண்ணி இதைப் பூர்த்தி செய்ய வேண்டும். நாங்கள் வெற்றியடைந்தால் தாங்கள் இப்பொழுது அணிந்திருக்கும் கிரீடம் முன்னிலும் பதின்மடங்கு பிரகாசிப்பதைப் பார்த்து மகிழ்ச்சியடைவேன். மகாராஜா எப்பொழுதும் கெடுதல் செய்கிறவர்களை-நாடுகளை அன்னியரிடம் கொடுப்பவர்களை [காவூரை] நம்பாம லிருக்கக் கேட்டுக் கொள்கிறேன்."

என்றிவ்வாறு கடிதம் எழுதியனுப்பிவிட்டு புறப்பட்டுச் சென்று சிசிலியின் கரையோரமாக இருந்த ஒரு நெப்போலியன் யுத்தக் கப்பலை அங்குமிங்கும் அலைக்கழித்த பின்னர் மார்சேல்சை யடைந்தார். அத் துறைமுகத்திலிருந்த இரண்டு ஆங்கில யுத்தக் கப்பல்கள் இவ்விரு கப்பல்கள் மீதும் பூர்போன் கவர்னர் யுத்தம் தொடங்காது பாதுகாத்தன. அதனால் நம் வீரர்கள் கரையில் சுலபமாக இறங்கலாயினர். அவ்வூர் ஜனங்கள் கரிபால்டியை மிகுந்த குதூகலத்துடன் வரவேற்றனர். முனிசிபல் கௌன்சில் அவரைத் தங்கள் மதிநெறி அமைச்சராய் ஏற்றுக் கொண்டதாக அறிவித்தனர். கரிபால்டி விக்டர் இமான்யுவேலுக்காக ஏற்றுக் கொள்வதாகக் கூறி ஏற்றுக் கொண்டார். அவரது ஆயிரம் போரங்கிய சேனை பன்னீராயிரமாயிற்று. அச் சேனை மறுநாள் பால்ர்மோ என்னும் நகரை நோக்கிப் புறப்பட்டுச் சென்றது. செல்லும் வழியில் 15௳ இப் படையினருக்கும் நெப்போலியன் படையினருக்கும் உண்டான சண்டை

யில் வெற்றி பெற்றனர். 26-ந் தேதி நடு ராத்திரியில் பால்ர்மோவுக் கருகில் எதிரிகளைத் தோற்கடித்து ஜிபில்-ரோஸா என்னுங் கோட்டை வாயிலின் வழியாக நகரில் நுழைந்து விட்டனர். அங்கு மூன்று நாளிரவும் பகலும் தெருக்களிலும் சந்துகளிலும் சண்டையிட்டு அக்நகரைக் கைப்பற்றினர். இதில் எதிரிகள் சேனாதிபதியான லான்சா என்பவனுடன் 20,000 பேர்கள் சிறைப் படுத்தப்பட்டனர். இதன் பின்னர் ஒன்றின்பின் ஒன்றாக மற்றைய ஊர்கள் கைப்பற்றப் பட்டன. கடைசியில் அந்தத் தீவின் கீழ் கோடியிலிருந்து மேல் கோடி வரையிலும் அவர்கள் வசமாயிற்று. பிறகு கரிபால்டி மெர்சினாவைத் தாண்டுவதற்கு முன் தன் படையுடன் சற்று தங்கினர்.

## பூரண விடுதலையும் கரிபால்டியின் முடிவும்.

காவூரும் விக்டர்—இமான்யுவேலும் அவர் இத்தாலி வருவதைத் தடுக்க முயன்றனராயினும் அது முடியவில்லை. கரிபால்டி மெலிடோ என்னுமிடத்தில் இறங்கினர் அங்கே கோட்டையின் பின்னர் கோட்டையாக ஒவ்வொரு கோட்டையும் அவர் வயப்பட்டது. அவர் யுத்த தளவாடங்களைச் சேகரித்துக் கொண்டு தலை நகரை சமீபித்ததும் வெர்டினண்ட் அரசரும் அவரது தோழர்களும் ஓடிந் தோடி மறைந்தனர். சிசிலியையடைந்து சரியாக நான்கு மாதத்திற்குப் பின்னர் செப்டம்பர் 7-ந் தேதி வெற்றியுடன் நேப்பிள்ஸ் நகரில் நுழைந்தார். அன்று மத்தியானம் மூன்று மணிக்குச் சரியாகக் கரிபால்டி தான் கொடுத்த வாக்குறுதியின்படி கப்பற் படை தளகர்த்தர் பெர்சானு என்பவரிடம் நேப்பிள்ஸ் நகரம், சேனை முதலியவைகளை ஒப்படைத்தார். பெர்சானு விக்டர் இமான்யுவேலுக்குப் பதிலாக விருந்து ஏற்றுக் கொண்டார்.

அப்பொழுதுங்கூட விக்டர்-இமான்யுவேல், தேசத் துரோகி காவூரின் பேச்சைக் கேட்டுத் தன்னை அரசராக ஏற்படுத்தியவருக்கு நன்றி கூறாது, தான் அமைதியை நிலைநிறுத்தப் போவதாக ஓர் அறிக்கை வெளியிட்டு நேப்பிள்ஸ் நோக்கிச் சென்றார்.



“எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வுஇல்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு.”

என்னே அரசனின் மதி! வழியில் கரிபால்டி அரசனைப் போய்ச் சந்தித்தார். போகையில் அவருடன் தொண்டர்கள் “இத்தாலி அரசன் நீடூழி வாழ்க” என கத்திக் கொண்டு சென்றனர். அரசன் குளிர்ந்த மனதுடன் கரிபால்டியை வரவேற்று அவரின் தொண்டர் படையினை நோக்கி, “நீங்கள் களைத்துப்போய் விட்டீர்கள்; எமது படை களைக்காது நிற்கின்றது” எனக்கூறிச் சென்றான் இதைக் கேட்டதும் கரிபால்டியர்களுக்குக் கோபம் பொங்கிக் கலகஞ் செய்யத் தொடங்கினர். கரிபால்டி அவர்களை நோக்கி “அன்பர்களே! அமைதியுறுங்கள் நான் உங்களுக்கு நல்லவையே செய்வேன்” எனக் கூறி அவர்களைச் சாந்தப்படுத்தினர். பின்னர் அரசர் அவரைத் தன் பக்கத்திலழைத்துக் கொண்டு நேபிள்ஸ் நகரில் நுழைந்தார். அப்பொழுது பேரிகைகள் முழங்கின; கொடிகள் பறந்தன; பல்வகை வாத்தியங்கள் ஒலித்தன; இப்பெருங் கோஷ்டத்தினிடையே அரசர் நுழைந்தார், நேப்பிள்ஸ் நகரில்.

இக் குதூகலம் ஒருவாறு அடங்கின பின்னர், கரிபால்டி தன் வாழ்நாளைச் சுகமாகக் கழிக்க வெண்ணித் தன்னுடைய சொந்த நாடாகிய கேப்ரிராவை யடைந்தார். அவருக்கு அக் காலத்தே அரசன் ‘கெடல்ராவ்மி இளவரசர்’ ‘தளகர்த்தர்’ என்னும் பட்டமும், அனன்சியேடா என்னும் வீரப் பதக்கமும், 500,000 பிராங்குகளும் (பிரஞ்சு நாணயம்) கொடுத்தார். இவைகளுடன் கரிபால்டி தன் ஆயிரவர்களைத் தரித்திரம் அணுகாதபடி பாதுகாத்தல் வேண்டும் என அரசரிடம் ஒரு உறுதி மொழி வாங்கிக் கொண்டார். பின்னர் அவர் தன் சேனை வீரர்களிடம் விடை பெற்றுச் செல்லும் பொழுது அவர்கள் கண்ணீர் விட்டுக் கதறினர். கரிபால்டி “சகோதரர்களே! குறைந்த நீங்கள் யுத்த தளவாடங்களைக் கொண்டு குறைந்த நேரத்தில் பெருங் காரியத்தை முடித்தீர்களாயினும், நீங்கள் செய்ய வேண்டியது இன்ன மிருக்கின்றது. அதைச் செய்யுங்கள்,, எனக்கூறி விடைபெற்றுச் சென்றார்.

பின்னர் போப்பின் அரசாட்சியிலிருந்து பூரணமாக விடுதலையடைவதற்காக வேண்டி விக்டர், கரிபால்டியர்களுடனும் தன் சேனையுடனும் எதிரியிடம் சண்டையிட்டு வெற்றி பெற்றார். அவர்கள், கரிபால்டி விதைத்த விதையின் பழத்தை நிறைய அடைந்தனர். கரிபால்டி, விக்டர் இமான்புவேல் இத்தாலி அரசராகத் தலை நகராகிய ரோமில் நுழைவதைக் கண்ணுற்றுத் திருப்தி யடைந்தார். இதுவே அவர் விரும்பியது.

கரிபால்டி தனது எழுபத்தைந்தாம் வயதில் கேப்ரிராவில் தனது அறையில் ஜன்னலின் வழியாகச் சமுத்திரத்தை நோக்கிய வண்ணமே விண்ணுலகடைந்தார். அவரைப்போல் இன்றுவரை ஒருவரும் ஜனங்களுக்காகப் பாடுபடவில்லை. அவரது உடல் இத்தாலியினர் கண்ணை விட்டு மறைபினும் புகழ் மட்டும் நிலைத்திருக்கின்றது. இப்பேர்க் கொத்த தியாகியைப் போன்று, சுதந்தரமடைய வேலை செய்து விடுதலை பெறும் நாளை யெதிர் பார்த்தல் இந்தியர் கடமை, ஆனையால்:

'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று'

என்பதை இவ் வீர தீர சிகாமணியைப் போல் யறிந்து நேயர் அனைவரும், அனிடாவின் ஆற்றலைப் போல் ஆரணங்குகளும் தங்கள் தாய் நாடாம் இந்திய நந் நாட்டிற்கு விடுதலை பெறுவிக்க முயலுதலோடு, இந்தியராய்ப் பிறந்ததின் பலனும் 'நான் இந்தியன்-இந்திய மாது' என்று சொல்லுவதா லுண்டாகும் பெருமையையும் அடைதற்குற்ற வழியை (இனிது யோசித்து) கடைபிடித் தொழுக வேண்டுவது அவர்களது கடமையாம்.



# இந்து முஸ்லீம் பிரிவினை.

ஸ்ரீமான். ஸி. எ. பெருமாள் அவர்கள்.

இந்திய நாடு 21 கோடி 70 லக்ஷம் இந்துக்களையும், 6 கோடி 90 லக்ஷம் முஸ்லீம்களையும், 3 கோடி இதர வகுப்பார்களையும் தன்னகத்தே கொண்டு இலங்குகின்றது. இவர்களில் இந்துக்களும் முஸ்லீம்களும் ஒருவரோடொருவர் சதா காலமும் சண்டையிட்டுப் பிரிந்து வாழ்கின்றன ரென்று பிரிட்டிஷ் அரசாங்கம் கூறிவரக் கேட்கிறோம்.

எனவே பிரிந்து கிடக்கும் இவர்களைச் சமரசப்படுத்தி நாடெங்கும் சமாதானத்தை நிலை நாட்டுவதற்காகப் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் இருந்து தீரவேண்டு மென்பது அரசாங்கத்தார்களின் தீவிர வாதமாகும். இதன் உண்மையை நாம் சிறிது ஆராய்வோம்.

இந்தியாவில் இந்துக்களும் முஸ்லீம்களுமே பெருந்தொகை கொண்ட வகுப்பார்கள். இவர்களுள் பழக்க வழக்கங்களையிட்டு சிற்சில கருத்து வேற்றுமைகள் உண்டாவது இயற்கையே. மதத்தின் பேரால் இரு வகுப்பாருள்ளும் பல மாறுபாடுகள் இருந்து வருவதை நாமும் அறிவோம். சுவாமி விவேகானந்தரும் ஒரு காலத்தில் இந்தியாவிலுள்ள இந்துக்களை மதப் பயித்தியம் பிடித்தவர்க ளென்றும் முஸ்லீம்களை மத வெறி கொண்டவர்க ளென்றும் கூறிப் போந்தார். இத்தகைய இவர்கள் ஒருவரோ டொருவர் முரண்பட்டு பலாத்கார முயற்சியில் சமாதான மின்மைக்கும் இரத்தப் பெருக்குக்கும் இடங் கொடுத்து வருவார்களாகில் இவ் விரு

திறத்தார்களையும் சமரசப் படுத்தவோ அல்லது அவர்களது பிருகிய மார்க்கத்தைத் தடை படுத்தவோ ஓர் மத்திய கூட்டத்தார் இவர்களிடையி லிருக்கவேண்டியது மிகவும் அவசியமே. ஆனால் சமாதான மென்ற பெயரைச் சொல்லி இரு கூட்டத்தார்களையும் சமரசத்திற்குட்பட வொட்டாது, சமயா சமயத்தில் ஏவி விட்டு, பெருந் தீ மூட்டி எண்ணெய் வார்த்து விட ஓர் கூட்டத்தார் எப்பொழுதும் இருந்து வருவார்களாகில் அவர்களை நாம் என்னென்று அழைப்பது? அல்லது என் செய்வது? அந்தோ! இந்து முஸ்லீம் பிரிவினைக்கு, இந்திய மக்களின் ஒற்றுமை யின்மைக்கு இத்தகைய தோர் கீழ் மக்கள் கூட்டமே காரணம்; காரணம்.

## எல்லோரும் இந்தியர்கள்

இந்தியாவிலுள்ள முஸ்லீம்கள் யாவரும் அந்நிய நாட்டார்களன்று. இடைக் காலத்தில் முஸ்லீம் மதத்தைத் தழுவிய இந்திய சகோதரர்களே இன்று இந்திய முஸ்லீம்களாய் விளங்குகிறவர்கள். முஸ்லீம் மதம் அந்நிய நாட்டைச் சேர்ந்ததாயினும் அதனைப் பின்பற்றிய இந்திய முஸ்லீம்கள் எழெட்டு நூற்றாண்டுகளாக இந்துக்களோடு ஒன்றி வாழ்ந்து வந்ததின் பயனால், இதர முஸ்லீம் நாடுகளில் காணப் படுவதுபோலன்றி, இந்தியாவில் முஸ்லீம் கொள்கைகளும், பழக்க வழக்கங்களும் இந்துக்களது கொள்கைகளுக்குச் சிறிது பொருத்த முடனும் ஆதாரவுடனுமே காணப்படுகின்றன.* எனவே மதம் மாறுபட்டதின் காரணமாக இந்துக்களிடம் முஸ்லீம்கள் தீவிர வெறுப்புக் காண்பிக்கவும் வழியில்லை. தவிரவும் இந்திய முஸ்லீம்கள் பெரும்பாலும் ஒரு காலத்தில் இந்துக்களாயிருந்தவர்களாதலால், தமது மூதாதைகளின் வழித் தோன்றிய இந்துச் சகோதரர்களை முற்றிலும் அந்நியர்களென்று நினைக்கவும் நியாயம் கிடையாது. இவற்றினை அரசாங்க அறிக்கையில் (Ibid Page 384) கூறியிருப்பதைக் கீழே தருகிறோம். "வங்காளத்தில்

* இதனையிட்டு "இந்து முஸ்லீம் ஒற்றுமை" என்ற ஓர் தனிக் கட்டுரை வரைய எண்ணி யிருப்பதால், இதனை விரித் தெழுதாது இத்துடன் நிறுத்தப்பட்டது.



விவசாயிகளாயிருக்கும் எல்லா முஸ்லீம்களும் இந்துக்களாயிருந்தவர்களே. தென்னிந்தியா, மலையாளம் ஆகிய விடங்களில் வசிக்கும் முஸ்லீம்கள் 8-வது நூற்றாண்டில் அரபியர்களின் குடியேற்றத்தினால் மதம் மாற்றப் பட்டவர்களே யாவர். கூர்ஜரத்தில் போராக்கள், கோஜாக்கள், மீமான்கள் என்று சொல்லப்படும் முஸ்லீம்கள் யாவரும் இந்துக்களே யாவார்கள். ராஜபுதனத்திலுள்ள முஸ்லீம்களும் முகலாய அரசர்கள் காலத்தில் இராஜபுத்திரர்களாயிருந்த இந்துக்கள்தான். பஞ்சாபிலுள்ள ஒன்றரைக் கோடி முஸ்லீம்களிலும் 100-க்கு 84 பேர்கள் இந்துக்களும் மீதியுள்ள 16 பேர்கள் மட்டுமே சுத்தமான முஸ்லீம்கள். அதாவது பட்டாணி பலோக், ஷியாத், ஷேயக், முகல் என்று சொல்லப் படுவோர்களே அந்நிய நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தொகை 11,14,250 மட்டுமே. வடமேற்கு எல்லைப்புறங்களிலுள்ள முஸ்லீம்களிலும் தற்காலம் அந்நிய நாட்டார்களின் இரத்தம் கலந்திருப்பதாகத் தெரியவில்லை." இத்தகைய நிலைமையிலுள்ள இந்திய முஸ்லீம்கள் இந்துக்களைப் புறம்பான மக்களென்று எண்ணுவதற்கு இடமேது? இவர்களிடை ஒற்றுமை உண்டாகாதென்று கூறுவது குறும்புத்தனமே யன்றி வேறென்ன? வஞ்சகமான தூண்டுதல்கள் இவர்கள் மத்தியில் இல்லாவிடின், போட்டியை வளர்த்து விடுவதற்கென்ச் சில துஷ்டர்கள் இடையி லில்லாவிடின் இவர்கள் நிச்சயமாகக் கூடியே வாழ்வார்கள். பல விடங்களில் வாழ்ந்தும் வருகின்றனர்.

## காரணம் யாவர்?

ஆகவே ஒரு தாய் வயிற்றுப் புதல்வர்கள் போன்று ஒன்றுபட்டு வாழக்கூடிய இந்துக்களும் முஸ்லீம்களும் வட இந்தியாவில் மட்டும் பிணக்குற்றுப் பெருங் கலவரங்களுக் குள்ளாவானேன் என்ற கேள்வி நம்மிடைப் பல தடவைகளிலும் எழுப்புகின்றது. இக் கேள்விக்கு இந்தியப் பேரறிஞர்கள் தகுந்தவாறு பதிலிறுத்தே யிருக்கின்றனர். அஹிம்சா தர்மத்தை நாட்டிடைப் பரப்பி வரும் அருந்தலைவர்கள் இதுபற்றிச் செவ்வனே கூறிவருகின்றார்கள். இந்து முஸ்லீம் கலவரங்களுக்கு அரசாங்கமே பொறுப்பாகுமன்றி இவ் வகுப்பார்களிடைத் தோன்றும் முரட்டுத்தனமான

அல்லது மிருகத்தனமான உணர்ச்சிகள் காரணமாகாதென அவ்வப்போது அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கீழிலேயே இந்து முஸ்லீம் பிரிவினை மிக ஆழமாக வேரூன்றி நிற்கிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் ஏற்படுவதற்கு முன்னால் இந்துக்களும் முஸ்லீம்களும் மிக அந்நியோந்நியமாக வாழ்ந்தார்களென்பதற்குப் பல சான்றுகள் கிடைத்திருக்கின்றன. தற்போதும் பிரிட்டிஷ் அரசாங்கம் நேரில் குறுக்கிட முடியாத சுதேச ராஜியங்களிலும் இம்மக்களின் பிரிவினையுணர்வு பலமாகப் பேசப் படுவதில்லை. சுதேச அரசர்கள் இந்துவாயினும் முஸ்லீம் ஆயினும் தமது இரு வகுப்பார்களுக்கும் அரசாங்கத்தில் உயரிய பதவிகள் வழங்கி மக்கள் யாவரையும் ஒன்றுபோல் சிநேகித்து வருவதால், குடிமக்கள் அவ்வதிகாரிகளின் கீழ் குறைவற வாழ்ந்து வருகிறார்கள். அவ்விதமிருக்கையில் பிரிட்டிஷ் இந்தியாவிலிருக்கும் மக்கள் மட்டும் ஏன் இவ்விதப் பிரிவினையுணர்ச்சியுற்று வருந்த வேண்டும்.

சுதேச ராஜியங்களைத் தவிர்த்த தென்னிந்தியாவின் பல பாகங்களிலுங்கூட இந்துக்களும் முஸ்லீம்களும் பரஸ்பர அன்புடன் வாழ்ந்து வருவதை நாம் சாதாரணமாகக் காண்கிறோம். தென்னிந்தியாவில் முஸ்லீம்கள் இந்துக்களை உற்றார் உறவினர்கள் போன்று, உயிருக்குயிரான உத்தம நண்பர்கள் போன்று உறவாடி வாழ்கின்றனர். வட இந்தியாவிலும் ஒரு காலத்தில் இவ்விதமே வாழ்ந்திருந்தனர். சமீப காலத்திற்றான் இவர்களது பிரிவினையுணர்வு வளர்க்கப் பட்டுள்ளது. ஆங்கு வெளியாரிடமிருந்து அல்லது இவர்களை விட்ட அந்நியர்களிடமிருந்து ஏவல்கள் தோன்றாமலிருப்பின், மதக் கொள்கைகளின் காரணமாக ஏற்படும் இவர்களது சிற்சில கருத்து வேற்றுமைகள் இலகுவில் சரிப்பட்டு விடுமென்றே சொல்லக்கூடும். அதற்கில்லாது அற்பக் காரணங்களிலிருந்து தேசம் நடுக்குறும்படியான இரத்தக் களங்களுக்கும் உயிர்ச் சேதங்களுக்கும் இடந்தரும் மகா ஆபத்தான கலவரங்கள் திடீர் திடீரென உண்டாகி அடக்க முடியாத நிலைமை ஏற்படுவதென்பது ஆச்சரியப் படக்கூடியதே. இடது புறமும் வலது



புறமுமாக நாடெங்கும் வாழ்ந்து வரும் ஒரு தாய் வயிற்று இந்திய சகோதரர்கள் இத்தகைய தீச் செயல்களுக்கு எப்பொழுதும் இடம் கொடுப்பார்களாகில்—அதிலும் அஹிம்சா தர்மத்தை உபதேசித்து வரும் ஒப்பற்ற தலைவர்கள் இரு சமூகத்திலுமிருந்து மக்களைச் சமரசப் படுத்தும் வேளையில் இத்தகைய கோர சம்பவங்களுக்கு உட்படுவார்களாகில், இதில் விசேஷ உள் மர்மம் இல்லையென்று சொல்லாமலிருக்க முடியாது.

## ஏகாதிபத்திய சலுகை

உலகிடை ஏகாதிபத்தியத்திற்கு ஆசைப்பட்டு மக்களையும் சிற்றரசர்களையும் அடிமைப்படுத்திய ஒவ்வொரு அதிகார வர்க்கத்தினரும் ஆதிகாலமுதலே மக்களைப் பிரித்துப் பொல்லாங்கு விளைவித்து, அப்பால் தனது ஆதீனத்திற்குட் படுத்தியதேயன்றி, உண்மையான வீரத்தாலோ அல்லது சைனிய பலத்தாலோ அந்நிய நாடுகளை அடக்கி ஆண்டு வந்ததென்பதற்குச் சரித்திரங்களிலேயே தகுந்த ஆதாரங்கள் காணப்படவில்லை. ஐரோப்பாவில் ரோமர்களது நாகரிகம் பரவியிருந்த பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னால்கூட மக்களைப் பிரித்தாளும் முறையே வலுப்படுத்தப் பட்டு வந்தது. அக்காலத்திய மகுடாதிபதிகள் இக்கொள்கையையே மிகப் பிரதானமாகக் கொண்டிருந்தனர். பாபிலோனியா, அசிரியா, பெர்ஷியா, எகிப்து ஆகிய தேசங்களின் பண்டைக் காலங்களிலும் பிரித்தாளும் அரசியல் முறையைக் கையாளப்பட்டதென்று அறிகிறோம். நெப்போலியனது காலத்திலும் இந்தியாவில் கிளைவ் அதிகாரம் செய்தபோதும் பிரித்தாளும் முறையே மிகப் பிரதானமாகக் கருதப்பட்டிருந்தது. இப்பொழுதும், உலகமெங்கும் ஜனநாயகத்துவம் பரவி வரும் இவ்விருபதாம் நூற்றாண்டிலும் பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தைச் சதா காலமும் ஸ்தாபித்து விடுமாறு பிரித்தாளும் முறையாகிய அப்பண்டைப் பேய் முறையையே, ஆயுதமாகக் கொண்டிருக்கின்றதென்பதற்குப் பல சான்றுகள் பட்டப் பகல் போல் வெளிக் காட்டுகின்றன. பிரிட்டிஷ் அரசாங்கம் தனது ஆரம்ப காலத்தில் முஸ்லீம்களது செல்வாக்கைக் குறைப்பதிலும் அவர்களை

அடக்கி ஒடுக்குவதிலுமே தனது முழு கவனத்தையும் செலுத்தி வந்தது, தற்போதோ இந்துக்களுக்கு விரோதமான பல வழிகளையும் திறந்து விட கண்ணுங் கருத்துமாயிருந்து வந்திருக்கிறது. இவ்வுண்மையை 1857-ம் வருடம் ஆரம்பித்த சிப்பாய் கலகத்தின் போது மூர்த்தபாட் என்னுமிடத்தில் சேனைத் தலைவராயிருந்த ஜாண் கோக் (Lt. Col. John Coke) என்பார் அரசாங்கத்திற்கு எழுதிய ஓர் கடிதத்தில் மிகத் தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அவர் கூறியிருப்பதாவது:— "பல வகுப்பாரிடையும் மதஸ்தினர்களிடையும் ஏற்கெனவே இருந்து வரும் பிரிவினையைச் சரியானபடி நிலை நாட்டுவதிலேயே நமது ஊக்கம் யாவுமிருக்க வேண்டுமேயல்லாது அவர்களை ஒன்று சேர்க்க ஒருபோதும் முயற்சி செய்யக்கூடாது. பிரித்தாளும் முறையே இந்திய அரசாங்க தத்துவமாயிருக்க வேண்டும்." இவருமன்றி, 1850-ம் வருடத்தில் பம்பாயில் கவர்னராயிருந்த லார்டு எல்பின்ஸ்டோன் என்பாரும் "பிரித்தாளும் முறை பழைய ரோமர்கள் தத்துவமாகும்; அதுவே நம்முடையதாகவுமிருக்க வேண்டும்" என எழுதியுள்ளார். இவற்றிலிருந்து பிரிட்டிஷ் அரசாங்கத்தின் அந்தரங்கக் கருத்துக்கள் செவ்வனே புலனாவது கவனிக்கத் தக்கதன்றோ!

## பிரித்தாளும் பேதையர் முறை

இவ்விதம் பிரித்தாளுகின்ற கொள்கையைப் பலமாக ஓர் அதிகார அரசாங்கம் கைக்கொள்ளாவிடின் ஒன்றுபட்ட மக்களை தனது இஷ்டம்போல் ஆளவோ அல்லது அடிமைப்படுத்தவோ முடியாதுதான். பிரிட்டிஷ் அரசாங்கமும் இதனாலேயே இந்தியா விஷயத்தில் இப் பேதையர் கொள்கையை விடாப் பிடியாகக் கடைப் பிடித்து வந்திருப்பதாகத் தெரிகிறது. பிரிட்டிஷ் அரசாங்கம் மக்களை அரசியல் விஷயத்தில் பிரித்து பல அரசியல் கொள்கைகளை அவர்களிடம் நிலை நாட்ட முற்பட்டிருப்பார்களேயாகில் இந்தியர்களை ஆளும் கஷ்டம் இதைவிடப் பெரிதாக முடிந்திருக்கும். அதற்கில்லாது இரு சமூகத்தினர்களிடத்துள்ள மத உணர்ச்சியை மட்டும் வலுப்படுத்தி பிரித்து வைக்கக் கங்கணம்



கட்டிக் கொண்டது அவர்களது நாட்டில் ஒவ்வோர் காலத்தில் ஏற்பட்டிருந்த கிறிஸ்து மதப் பிரிவினைக் காரர்களின்படி, அந் நாட்டு அரசாங்கத்தை எவ்விதம் நடாத்த இயன்றதோ அதே போல் இந்திய மக்களிடமுள்ள மத வேற்றுமையை மட்டும் பலப்படுத்தி ஒருவரையொருவர் நெருங்க வொட்டாது செய்து, அரசாங்கத் தொடர்புகளை 150 வருட காலங்களாக பூராவும் தன் கைவசப் படுத்திக் கொண்டது பிரிட்டிஷ் ராஜ தந்திரங்களில் மிகவும் பேர் பெற்றதோர் உள் மர்மமாகும்.

உரிமையின் நிமித்தம் இந்தியர்கள் போராடத் துணிந்து பிரிட்டிஷ் ஏதேச்சாதிகாரத்தை எதிர்க்க ஆரம்பிப்பார்களாகில் ஒன்றுபட்டு வாழும் குணமுடைய இந்தியர்களை அடக்கி விடுவதென்பது எழுதில் சாத்தியப் படாதென பிரிட்டிஷ் அரசாங்கம் நன்கு அறியும். அத்தகைய நெருக்கடியான நிலைமை ஏற்படுமானால், அரசாங்கம் ஏற்கனவே இந்திய மக்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வாக்குறுதியை நிறைவேற்றி வைக்க வேண்டி வரும். எனவே காலத்தை நீட்டிக் கொண்டு போவதற்கும், தகுதியில்லை என்ற சமாதானத்தை உலகிடைப் பரப்புவதற்குமே பிரிட்டிஷ் அரசாங்கம் இக் கருத்துக் கொண்டு சமூகப் பிரிவினை விஷயத்தில் சிறிதும் கவலையில்லாதது போல், வளரு மட்டும் வளர விட்டு அப்பால் சில சாக்குப் போக்குகளுடன் மௌனம் சாதித்து வருகின்றது. இதனைச் செவ்வனே விளக்கிக் கூறுவதற்குப் பிரிட்டிஷ் அதிகாரிகளிற் சிலர் அவ்வப்போது தன்னை மறந்து வெளியிட்ட அரசியல் ரகசியங்கள் வெள்ளிடை மலையென வெளிப் படுத்துகின்றன.

## ஒருதலைச் சார்பு

மொகலாய அரசு வீழ்ந்த காலத்தில் முஸ்லீம்களை அடக்குவதில் பிரிட்டிஷ் அரசாங்கம் விசேஷ கவனம் செலுத்தி வந்ததென்பதை இந்திய சரித்திரத்தை நன்கு வாசிப்பவர்கள் எளிதில் உணர்வார்கள். அப்பால் இந்துக்கள் அரசியல் விஷயத்தில் செல்வாக்கு அடைந்ததும், முஸ்லீம்களுக்கு தனித் துணைகாட்டி அவர்களை உற்சாகப் படுத்துவதில் மிக ஊக்கம் காட்டி வந்தது.

இத்தகைய முறையில் மக்களை வேற்றுமைப் படுத்தி ஒருவரையொருவர் பொறாமை கொள்ளத்தக்க விதம் அரசாங்கம் ஒவ்வோர் காலத்திலும் ஒருதலைச் சார்பு காண்பிக்கவே மதம் வேறுபட்ட இவ்விரு வகுப்பாருள் வேற்றுமையுணர்வு வலுப்பட ஏதுவாயிற்று. இத்துடன் அரசாங்கத்தில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வத்தையும் மிக இலகுவாக நுழைத்து விட்டனர். பிரிவினையுணர்வு பலமாகப் பற்றிக் கொண்டது.

பிரிட்டிஷ் அரசாங்கம் இந்துக்களுக்கு விரோதத்தை உண்டு பண்ணத்தக்க விதம் முஸ்லீம்கள் விஷயத்தில் அவ்வப்போது காட்டி வந்த தனி ஆதரவுகள் மிக இரகசியமாகப் பாதுகாக்கப்பட்டாலும் தற்போது பிரிட்டிஷ் பிரதம மந்திரியாகியிருக்கும் ஸ்ரீ ராம்ஸே மாக்டொனல்ட் என்பார் தாம் எழுதிய "அவேக்கனிங் ஆப் இந்தியா," என்ற புத்தகத்தில் இதனை மிகத் தெளிவாக விளக்கிக் கூறியிருக்கிறார். அதனைக் காலம் சென்ற நமது லாலா லஜபதிராய் அவர்கள் தமது "அன் ஹாப்பி இந்தியா," என்ற புத்தகத்தில் (Unhappy India Page 408) எடுத்தாண்டிருப்பதை இங்குத் தருகிறோம். அரசாங்கத்தில் பிரதம அதிகாரத்தை வகித்து வரும் ஸ்ரீ மாக்டொனல்ட் இதனைக் கண்டித்துக் கூறுவதாவது:—"கள்ளத்தனமான வேலைகள் அரசாங்கத்தில் நடந்து வந்திருக்கின்றன; நடந்தும் வருகின்றன. முஸ்லீம் தலைவர்கள் சில பிரிட்டிஸ் சர்வாதிகாரிகளால் தூண்டப்பட்டு வருகின்றனர். இவ்விதம் ஸிம்லாவிலும் லண்டனிலும் இவர்கள் ஓயாது தூண்டியும் முஸ்லீம்களிடத்தில் மட்டும் தனிப்பட்ட அன்பு பாராட்டியும் வருவதால் இந்து முஸ்லீம் ஆகிய இருவகுப்பாருள், வெறுக்கத் தக்கதான பிரிவினையை வளரச் செய்திருக்கின்றனர்." இவ்வுரைகளைவிட வேறு சான்றுகள் நமக்கு எற்றுக்கு? இதுமட்டுமன்றி, வங்காள கவர்னராயிருந்த சர். பாம்பிள்டி புல்லர் (Sir. Bampfylde Fuller) என்பவரும் இந்திய அரசாங்கத்திற்கு இந்து முஸ்லீம் ஆகிய இரண்டு மனைவிகள் இருக்கின்றனவென்றும் அவர்களில் முஸ்லீம் மனைவியிடத்திலேயே அரசாங்கத்திற்கு அதிகப் பிரியமென்றும் வேடிக்கையாகப் பேசினது



இவ்விஷயத்தின் இரகசியத்தை இதைவிடத் தெளிவு படுத்தும் என நம்புகிறோம். சில வருடங்களுக்கு முன்னால்கூட இந்தியா மந்திரியாகியிருந்த லார்டு ஆலிவர் என்பாரும் அரசாங்கம் முஸ்லீம்களிடத்தில் தனி ஆதரவு காண்பிப்பதை மிக விளக்கமாகக் கூறினார். அவர் மொழிந்ததாவது:— "இந்தியா விஷயத்தை மிக நுட்பமாகக் கவனித்து வருகிறவர்கள் யாவரும், பிரிட்டிஷ் அரசாங்கம் முஸ்லீம்களிடத்தில் காண்பித்து வரும் விசேஷ ஆதரவைப் பகிரங்கமாகக் காணலாம். இவ்வாதரவு சிறுபான்மை அவர்கள்பால் இரக்கங்கொண்டு காண்பிக்கப்பட்ட போதிலும் பெரும்பான்மை இந்துக்களுக்கு எதிரிகளாக எப்பொழுதும் முஸ்லீம்களை நிலை நிறுத்துவதற்கே யாகும்." லார்டு ஆலிவர் இவ்வுரையை வெளியிட்டதும் இங்கிலாந்திலுள்ள யாவரும் அவரைப் பலமாகத் தாக்கினர். இரகசியம் வெளியாகி விட்டதே என ஆங்கில மக்கள் தங்கள் மண்டையிலடித்துக் கொண்டனர். அந்தோ! அதிதத்தின் போல் மறைத்து வைக்கப்பட்டிருக்கும் இரகசியங்களை எத்தனை நாட்களுக்குத்தான் பாதுகாக்க முடியும்?

## வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம்

இந்திய மக்களுள் பிரிவினையை வளர்க்கும் பொருட்டு தேடிய பலவித உபாயங்களில் வகுப்புவாரிப் பிரதிநிதித்வமும் ஒன்றாகும். வகுப்புவாரியாகப் பிரதிநிதிகள் எடுப்பது தாழ்த்தப்பட்ட வகுப்பார்களுக்குப் பெருந்துணை செய்யுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் எண்ணற்ற ஆயிரம் வகுப்பார்களாய்ப் பிரிந்து கிடக்கும் இந்திய மக்களை அரசியல் விஷயத்திலும் ஒன்று சேரவொட்டாது மதம் நிறம் வகுப்பு ஆகிய பேர்களில் ஸ்தானங்கள் ஒதுக்கி ஜனத்தொகைக்குத் தகுந்தவிதம் பிரிக்கப்பட்டிருப்பதால், அரசியல் மன்றங்களில் தற்காலம் வருகின்ற ஜனப் பிரதிநிதிகள் இந்திய மக்களின் உண்மைப் பிரதிநிதிகளாயிருந்து வாதப் பிரதிவாதங்கள் செய்யாது தமது சொந்த வகுப்பிற்காகவும் தனிப்பட்ட கொள்கைகளுக்காகவுமே வாதாடுகின்

றனர். எனவே அரசியலிலும் ஒவ்வொரு வகுப்பார்களும் தமது சுய நலத்தை மட்டும் நிலை நிறுத்தி இந்திய மக்களின் ஒன்றிய தன்மையை, இந்திய மக்களின் பொதுநல உணர்ச்சியைக் கெடுத்துவிடவே உள்ளாகிவிட்டார்கள். இதர நாடுகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் என்பது மதம் கொள்கை இவைகளை அனுசரித்து சில இடங்கள் மட்டும் ஒதுக்கப்படுவதேயன்றி, ஜனத்தொகையை ஆதாரமாகக் கொண்டு ஜாதிவாரியாக நாட்டிலுள்ள மக்கள் யாவரையும் பிரித்து அரசாங்கத்தை பிரிவினையுணர்வில் வைத்தாளப் படுவதில்லை. அவ்விதமிருக்கையில் எங்குமே காண முடியாத ஓர் புதிய முறையை இந்தியாவில் உள் நுழைத்து, மக்களை வித்தியாசப்படுத்தி அரசு நடாத்துவது பிரிட்டிஷ் அரசாங்கம் ஒன்றேயாகும். வங்காளச் சட்ட சபையிலுள்ள 114 தேர்தல் ஸ்தானங்களுக்கு 46 இந்துக்களும் 39 முஸ்லீம்களும், பஞ்சாப் சட்ட சபையிலுள்ள 71, ஸ்தானக்களுக்கு 32 முஸ்லீம்களும் 32 இந்துக்களும் (இந்துக்கள் 20; சீக்கியர் 12) எடுக்கப்பட்டிருப்பின் இரு பிரிவினருள் போட்டி எவ்விதம் ஏற்படாமலிருக்கும். இச் சட்ட சபைகளிலுள்ள பிரதிநிதிகள் பெரும்பாலும் இந்தியர்களென்ற எண்ணத்தை அறவே மறந்து இந்து மகா சபை, முஸ்லீம் லீக் ஆகிய தங்கள் சமூக மகா நாடுகளின் தீர்மானங்களின்படியே அரசியல் விஷயத்திலும் வாதித்து வருவதால் இந்திய நாடு பெரும் தொல்லைகளுக்கும் துன்பங்களுக்கும் உள்ளாகி வருகின்றது. சட்ட சபைப் பிரதிநிதிகள் தமது சமூக விஷயங்களில் மட்டும் பெருங்கவலை செலுத்துவதில் முற்பட்டிருப்பதால், பொதுப்படக் கருதத்தகும் இந்தியாவின் பொருளாதார, சுகாதார, ஜனதார விஷயங்களில் கவலையற்று விடவே, இந்திய நாடு தனது இக போக சுகங்களையுமிழந்து, அடிமைத்தனத்திலும் அட்டதரித்திரத்திலும் கிடந்துழல வேண்டியதாய் விட்டது.

சட்ட சபைப் பிரதிநிதிகள் இவ்விதம் இந்தியாவின் ஒன்றிய பெருமையைச் சீர்குலைத்துவிட்டுத் தமது மதக் கொள்கைகளுக்காகவும், ஜாதீய மேம்பாட்டிற்காகவும் உழைக்க முன் வருவது மக்களின் குறுகிய நோக்கத்தையும் குறைந்த அறிவையுமே வளர்க்க ஏதுவாகும். சட்ட சபைகளில் இத்தகையோர்களின் பிரதிநிதித்துவமே இன்று இந்து முஸ்லீம் பிரிவினையை வேரூன்றச் செய்திருக்கிறது. 1905-ம் வருடம் ராஜப்பிரதிநிதியாகியிருந்த லார்டு மின்ரோ, என்பவரே இந்தியாச் சட்ட சபைகளில் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை உள் நுழைத்து, ஒன்றுபட்டு வாழ்ந்த இந்திய மக்களுக்கு ஆசை காட்டி மோசம் செய்தார். அவரது மாய வலையில் சிக்கிய ஏழை இந்தியத் தலைவர்களும் மதியிழந்தனர். பிரிட்டிஷ் அதிகார வர்க்கமும் பலித்தது தங்கள் ஜெபம் எனப் புழகாங்கிதம் கொண்டு குதூகலம் கொண்டாடிற்று. இதனாலேயே வட இந்தியாவில் பெருங் கலவரங்கள் ஏற்படும் தருவாயிலும் இவ்வதிகார அரசாங்கம் ஒன்றும் அறியாதது போல், ஏவ வேண்டிய சமயங்களில் ஏவிவிட்டு அப்பால் தேசியத் தலைவர்களைக் குறை கூறுவதும், பின்னால் தங்களால் ஒன்றுஞ் செய்ய இயலாதென மௌனம் சாதிப்பதும் வழக்கமாகக் கொண்டிருக்கிறது. இதுவே அவர்களது ராஜ தந்திரத்தின் நிபுணத்துவமாகும். இதுவே பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திற்கு என்றும் பாதுகாவலாக விளங்குகிறது. இந்தியாவின் பெருமையை, இந்தியாவின் தேசீய ஒற்றுமையை "எல்லாரும் ஓர் குலம், எல்லாரும் ஓர் இனம், எல்லாரும் இந்தியா மக்கள்" என வான் புகழப் பாடிய "பாரதியா"ரின் வீர உணர்ச்சியை சர்வ நாசம் செய்து பாழ்படுத்துவது இவ் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே என அறிய வேண்டும். இது என்று ஒழியுமோ அன்றே இந்திய மக்கள் ஒன்றுபட்டு விளங்குவர்.



எழுநூறு ஆண்டுகளாக இந்துக்களும் முஸ்லீம்களும் இந்தியா நாடெங்கும் கை கோர்த்து உலவினர். பல்வேறு மத உணர்ச்சிகள் மக்களிடை வீர உருத்திரண்டு முரட்டுத் தனத்திற்கும் மூடத் தனத்திற்கும் இடங் கொடுத்து வந்த இடைக் காலத்தில், இந்துக்களுடன் முஸ்லீம்கள் இணங்கி வாழ்ந்தனர். அத்தகைய வகுப்பார்கள்—இக் காலத்தில் அறிவு வளர்ச்சியும் அஹிம்ஸா தர்மமும் உலகிடைப் பரவி வரும் இக் காலத்தில்—சமரசமே சன்மார்க்கம், சகோதரத்வமே சர்வ மத சித்தாந்தம், சாத்வீகமே ஆத்

# ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய்

ஸ்ரீமான். என். வேங்கடரமணன் அவர்கள்.

(உரிமை ஆசிரியருடையது)

முன் 291-ம் பக்கத் தொடர்ச்சி.

## லக்ஷ்மீபாயின் அரசாக்ஷி



மஹா ராணி லக்ஷ்மீ பாய் அவர்கள் ஜான்ஸி ராஜ்யத்தை அவ்வாறு பத்து மாதங்கள் வரையில் வெகு சிறப்பாக ஆண்டு வந்தார். அவரிடத்து அடங்கி யிருந்த நற் குணங்கள் அனைத்தும் வெளிப்பட்டுப் பிரகாசித்தன., நாட்டு மக்களின் க்ஷேமமே தம் க்ஷேமமெனக் கருதி அநேக தருமங்களை நிலை நாட்டினர். நீதி பரிபாலனம், ராஜ தந்திரம் முதலிய வற்றில் நடு நிலைமையும், திறமையுங் காட்டி அரசாட்சியை நடத்தினர். நாட்டில் ஆங்காங்கே காணப்பட்ட

மீக ஞானம் என்ற உண்மைக் கொள்கைகள் மக்களின் உள்ளத்தில் பதிந்து வரும் இவ் விருபதாம் நூற்றாண்டில்—இந்துக்களும் முஸ்லீம்களும் இந்தியாவில் முரண்பட்டு வாழ்வர் என்று சொல்லுவது விஷமத் தனமேயாகும். இடை நின்று தீ மூட்டும் இழி குணமுடைய ஓர் வகுப்பார் உண்மையாகவே இல்லையானல், இந்து முஸ்லீம் சகோதரர்கள் ஒரு போதும் இணை பிரிந்து வாழார்கள். இந்தியாவின் மாபெருந் தலைவராகிய மகாத்மா காந்தியை முழு மனதுடன் நேசிக்கும் முஸ்லீம்கள், ஆ! ஆ!! அன்பின் வடிவாய டாக்டர். அன்சாரியை ஏகோபித்து விசுவாசிக்கும் இந்துக்கள் துணை யிழந்து வாழார்கள்; வாழார்கள். வீரத் திறன் படைத்த முஸ்லீம்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் வீழுமேல், அறப் பெருஞ் செல்வர்களாகிய இந்துக்களுடன் இணை யொருமித்து வாழ்வர்; வாழ்ந்து இன்புறுவர். இந்து முஸ்லீம் இந்தியா என்றும் ஐக்கிய இந்தியாவாக இலகுறும்; இலகுறும்.



கலக முயற்சிகள் அனைத்தையும் அடக்கி எங்கும் சமாதானத்தை ஏற்படுத்தினர். குடிகள் யாவரும் மஹா ராணியின் நேர்மையான அரசாட்சியை வியந்து போற்றினர். ஜான்ஸி நாட்டின் பண்டைப் பெருமைக ளனைத்தும் மற்றொரு முறை ஒளி வீசலாயின. அரசாங்கக் காரியங்கள் அனைத்தையும் மஹா ராணியாரே நேரில் தவறுமல் கவனித்து வந்தார். ஏழைகளை நேரில் விசாரித்து வேண்டிய உதவிகள் புரிவார். நாட்டின் தொழில்களைப் புதுப்பித்தார். சேனை வீரர்களை அன்புடன் நடத்தினர். யுத்தத்தில் காயமடைந்த வீரர்களைத் தமது கரத்தால் தட்டிக் கொடுத்து உற்சாகப் படுத்திச் சிகிச்சைகள் புரிவித்தார். தன்னலத்தைச் சிறிதும் பாராட்டாமல், பிறர் நலத்தையே பெரிதெனக் கருதி, அன்பே உருவாக ஆட்சி புரிந்து வந்த லக்ஷ்மீ பாயைக் குடிகளும், அரசாங்க உத்தியோகஸ்தர்களும் அன்னை யென நேசித்து, அன்பு செலுத்தி வந்ததில் அதிசய மொன்றில்லை. ஆயினு மென்ன? நம் அன்னை 'பாரதி'யின் துரதிர்ஷ்டத்தாலும், 'ஜான்ஸி' நாட்டின் வினை வசத்தாலும் ஜான்ஸியில் ஏற்பட்ட அத்துணைச் சந்தோஷங்களும் நிலை பெரு தொழிந்தன. ஜான்ஸி மஹா ராணி செய்த அத்தகைய உதவிகளுக்கு—ஊழியத்திற்குப் பதிலாக அவரது அரசை அவருக்குக் கொடுக்காமற் போனதோடு, ஆங்கிலத் துரைத்தனத்தார் அவரைப் பகைவராகக் கருதி, அவர் மீது போரை நடத்தவும் முற்பட்டனர். லக்ஷ்மீ பாய் அவர்கள் எத்தனை நியாயங்களையும், உண்மைகளையும் பிரிட்டிஷாருக்கு எடுத்துக் கூற முயன்றும் பயன்படாது போயின. கவர்னர் ஜனரல் துரையவர்களுக்கு அவ் வம்மை எழுதிய விண்ணப்பங்கள் அனைத்துங் கவனிக்கப்படாமற் போயின. நெருங்கிய நட்பினர்களா யிருந்த பிரிட்டிஷ் அதிகாரிகள் சிலரும் அவருக்குப் பகைவராக மாறினர். அந் நிலையைக் கவனித்த மஹா ராணியார் தமது க்ஷத்திரிய தர்மத்தை நிலை நாட்ட வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாயினர். எனவே தம் மீது பகை கொண்டு எதிர்த்து வரும் ஆங்கிலேயர்களைத் தாமும் எதிர்க்க வேண்டிய நிலைமையி லிருந்தார்.

## ஜான்ஸி யுத்தம்

ஆங்கிலேய துரைத்தனத்தார் ஸர். ஹக்ரோஜ் என்ற தளகர்த்தரின் தலைமையின் கீழ் ஜான்ஸியின் மீது படை யெடுத்துச் செல்லு

மாறு பிரம்மாண்டமான சேனைகளை யனுப்பி வைத்தனர். கோடிக் கணக்கான வருவாயையுடைய பெரிய பிரிட்டிஷ் அரசாங்கத்தின் நவீன யுத்த சாதனங்களைக் கொண்ட திரண்ட சேனையை இருபது லக்ஷம் ரூபாய் மாத்திரமே வரும்படியுடைய அரசாங்கம்—அதிலும் ஒரு சிறு வயதுடைய பெண்பால் தக்க யுத்த சாதனங்க ளின்றிப் புதிதாகச் சேர்ந்த சிறு சேனையைக் கொண்டு எதிர்த்து நிற்கத் துணிவதென்பது எத்துணை வியப்பென்பதை எண்ணிப் பாருங்கள்! ஆங்கில சேனைத் தலைவர் ஸர். ஹக்ரோஜ் துரை ஏராளமான காலாட் படையும், பீரங்கிப் படையும், குதிரைப் படையும், அனுபவம் வாய்ந்த பல துணைச் சேனைத் தலைவர்களையும் உடன் கொண்டு 1858௵ ஜனவரி௴ 6௳ புறப்பட்டார். வழியில் எதிர்ப்பட்ட கலகக்காரர்களை யெல்லாம் அடக்கிப் பல கோட்டைகளைக் கைப்பற்றிக் கொண்டு முன்னேறி வந்தார். கலகக்காரர்களில் தலை சிறந்த பல சிற்றரசர்கள் அவரை எதிர்த்துப் போர் புரிந்து தோல்வியடைந்து மறைந்தனர். அவ்வாறு நர்மதை நதிக்கு வடகரையைச் சேர்ந்த இடங்களனைத்தையும் தம் வசப்படுத்திக் கொண்ட பின்னர் ஆங்கிலச் சேனாதிபதியார் புந்தேல்கண்டு ராஜ்யத்தில் முக்கிய இடமாகிய ஜான்ஸியை நோக்கி நடந்தார். வழியில் சாககடை, மதனபுரம், வானபுரம் முதலிய நாட்டரசர்களை எதிர்த்தும் போர் புரிந்து அவர்களை வென்று, மார்ச்சு௴ 19௳ ஜான்ஸிக்கு 14 மைல் தூரத்திலுள்ள சஞ்சனபுர மென்ற கிராமத்தை யடைந்தார். அச் சமயத்தில் ஜான்ஸி லக்ஷ்மீ பாய் அவர்களுக்கு, 'ஆங்கிலேயர்கள் தம்மையும், தம் சகாக்களையும் கைதி செய்து கொண்டு போய்த் தண்டிக்க எண்ணியுள்ளார்க ளென்ற' செய்தி எட்டியது. அதைச் செவியுற்ற லக்ஷ்மீ பாயின் உள்ளங் கொதிப்படைந்தது. மஹா ராணி அதுவரையில் ஆங்கிலேயர்கள் நியாயத்தை யுணர்ந்துத் தம்மை ஆதரிப்பார்க ளென்று கருதி எதிர் பார்த்துக்கொண் டிருந்தவராதலால், திடீரென்று பெரும் படையோடு ஆங்கிலேயர் சமீபத்திற்கு வந்துத் தம்மை எதிர்க்கத் தீர்மானித்ததை யுணரும் வரையில், வேண்டிய முன்னெச்சரிக்கையான யுத்த ஏற்பாடுகள் செய்யாமலிருந்தார். ஆங்கிலேயர்கள் நிச்சயமாகவே தம் மீது படை யெடுத்து வந்ததை யறிந்த பின்னர் "மானமிழந்து வாழாமை முன்னினிதே" என்பதைக் கருதி, அவர்களைத் தாமும் எதிர்க்கவே தீர்மானித்து, அதற்கு வேண்



டிய ஏற்பாடுகளை விரைந்து செய்யத் தொடங்கினார். உடனே கலகக்காரர்களுக்குத் தலைவராகக் கருதப்பட்ட தனது வாலிப நண்பர் ராவ் சாஹிபு பீஷ்வா அவர்களுக்குத் தமது நிலையைப் பற்றி விவரித்து ஒரு கடிதமெழுதித் தமக்கு உதவி செய்யுமாறு லக்ஷ்மீ பாய் வேண்டிக் கொண்டார்.

கோட்டைச் சுவர்களையும், கோபுரங்களையும் சீர்திருத்தி யமைத்ததோடு, ஜான்ஸி நகரத்தைச் சுற்றிலு மிருந்த சுவர்களையும் பலப்படுத்திக் கோட்டையையும், நகரத்தையுஞ் சுற்றி ஆங்காங்கே பீரங்கிகளை அமைத்தும், சேனை வீரர்களை நிறுத்தியுங் காவல் ஏற்படுத்தினார். ஸ்திரீ புருஷர்கள் அனைவரையும் யுத்த தளவாடங்களைச் செய்ய அமர்த்தினார். கூடியவரையில் புதிய சேனைகளைத் திரட்டி அவர்களுக்கு யுத்தப் பயிற்சியுங் கொடுத்து நிறுத்தினார். அவ்வாறு ஜான்ஸி நகரத்திலும், கோட்டையிலும் போருக்கு ஆயத்தம் செய்யப் படுகையில், வெளியில் தங்கி யிருந்த ஆங்கில தளகர்த்தர் தம் சேனைகளைக் கொண்டு ஜான்ஸி நகரையும், கோட்டையையும் முற்றுகை யிடுவதற்கான முயற்சிகள் செய்தார். நகரத்திற்குச் செல்லும் பாதைகள் அனைத்தையும் தம் வசப்படுத்திக்கொண்டு, வெளியிடங்களி லிருந்து யாதொரு உதவியும் ஜான்ஸி யரசிக்குக் கிடைக்காதவாறு தடை செய்தார். ஆங்காங்கே அரண்குழிகளை வெட்டியும், பீரங்கிகளை யமைத்தும், சேனைகளை நிறுத்தியும், செய்திப் போக்குவரவுக்கான தந்திக் கம்பிகளை யமைத்தும், பாதைகளைச் செப்பனிட்டும், மற்றும் பல நவீன சாதனங்களை ஏற்படுத்தியும் பலமான முயற்சிகள் செய்தார் மார்ச்சு௴ 23௳ ஜான்ஸி யுத்தம் ஆரம்பமாயிற்று ஆங்கிலேயரின் பீரங்கிகள் ஜான்ஸிக் கோட்டையின் மீதும், நகரத்தின் மீதும் குண்டுகளைப் பொழிய ஆரம்பித்தன. அதற்குப் பதிலாக ஜான்ஸிக் கோட்டையினின்றும், நகர எல்லைகளினின்றும் ஆங்கிலேயர்களின் மீது பீரங்கிக் குண்டுகள் பொழியப் பட்டன. போர் வெகு மும்முரமாக மூண்டது. இருதரப்பிலும் அநேக வீரர்கள் மடிந்தனர். ஒரு சமயத்தில் ஆங்கிலப் பீரங்கிகள் வாயடங்குவதும், மற்றொரு சமயம் ஜான்ஸியின் பீரங்கிகள் செயலற்று நிற்பதுமாக வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஊசலாடி நின்றன. அவ்வாறு 13 நாட்கள் அச் சண்டை

நடைபெற்றது. சில நாட்களில் கோட்டைச் சுவர்கள் ஆங்கிலப் பீரங்கிகளால் இடிக்கப்பட்டன. ஆயினும் அவ்விரவே ஜான்ஸி நாட்டு ஸ்திரீகளும், புருஷர்களுமாகச் சேர்ந்து அக் கட்டிடங்களை எப்பொழுதும் போல் கட்டி முடித்து வந்தனர். ஆங்கிலேயர்களுக்கு மென்மேலும் புதிய சேனைகள் வந்து சேர்ந்தன. அந்த நிலையில் ராவ் சாஹிப் பீஷ்வா அவர்கள் ஜான்ஸி மகா ராணிக்குத் துணைபுரியுமாறு தாந்தியா தோபே என்ற தமது சேனைத் தலைவரை ஜான்ஸிக்கு அனுப்பி வைத்தார். தாந்தியா தோபே மிகுந்த பராக்ரமம் வாந்தவர். 1857-ம் ஆண்டில் நடைபெற்ற இந்திய சிப்பாய்க் கலகமென்ற சுதந்திர யுத்தத்தில் அவர் ஆங்கிலேயரை எதிர்த்துப் புரிந்த வீரச் செயல்கள் பல. அநேக யுத்தங்களில் ஆங்கிலேயரைப் புற முதுகிட்டோடச் செய்திருக்கிறார். அப்படிப்பட்டவர் தகுந்த சேனையுடன் ஜான்ஸியை நோக்கி வருவதைக் கேள்வியுற்ற ஆங்கிலச் சேனைத் தலைவர், தம்முடைய சேனையை இரண்டு பாகமாக்கி ஒரு பாகத்தை ஜான்ஸியை முற்றுகையிட்டு நிற்கவும், மற்றொரு பாகத்தைத் தந்திரமாகச் சென்று எதிர்பாராத நிலையில் வழியில் தாந்தியாவை எதிர்க்கும் படியும் செய்தார்.

ஏப்ரல் மீ 1 தேதி தாந்தியா தோபேயுடன் ஆங்கிலேயர் சண்டையாரம்பித்தனர். எதிர்பாராத நிலையில் வழியில் சூழ்ச்சியாக ஆங்கிலேயர் நாற்புறமும் சூழ்ந்து தாந்தியாவின் சேனைகளைத் தாக்கியபடியால், அச் சேனைகள் நிலை கலங்கிப் புறமுதுகிட்டோடத் தலைப்பட்டன. அதனால் தாந்தியா ஜான்ஸிக்குச் செல்ல வழியின்றித் திரும்ப வேண்டியவரானார். தாந்தியாவினிடத்தில் அவ்வாறு ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்த வெற்றியானது ஆங்கிலச் சேனைகளுக்கு மிகுந்த உற்சாகத்தை ஊட்டியது. அதனால் முன்னிலும் பன்மடங்கு பலத்துடன் ஜான்ஸியை எதிர்த்தனர். அச்சமயத்தில் தேசத் துரோகிகளாகிய ஒரு சிலர் பணத்தாசை மேலீட்டால் ஜான்ஸியினின்றும் ஆங்கிலேயர்களிடத்துக்குச் சென்று, ஜான்ஸி நகரத்தினுடையவும் கோட்டையினுடையவும் உளவுகளை அவர்களுக்குத் தெரிவித்தனர். அதனால் ஆங்கிலேயப் பீரங்கிகள் அதிக ஜனச் சேதமுண்டாகக் கூடிய இடங்களை நோக்கி நகரத்தின் மீது அட ஆரம்-



பித்தன. நகரெங்கும் அல்லகல்லோலமாயிற்று. அந்த நிலையில் தாந்தியாவின் சேனைகள் முறியடிக்கப்பட்ட செய்தி ஜான்ஸியில் பரவி யாவர்க்கும் கவலை யுண்டாக்கிற்று. ஆயினும் மகாராணி சிறிதும் பின்னடையாமல் யுத்த களங்களுக்குத் தானே நேரிற் சென்று யுத்த வீரர்களுக்கும், சர்தார்களுக்கும் உற்சாக வார்த்தைகள் கூறி ஊக்கியதோடு, தனது பீரங்கிப் படைத் தலைவராகிய குலாம் கௌஸ் கரினை வரவழைத்துக் கோட்டைக் கோபுரத்தினின்றும் ஆங்கிலேயப் பீரங்கிப் படைமீது குண்டுகளைப் பொழியச் செய்து ஆங்கிலப் பீரங்கிகளின் வாயை யடக்கினார். நகரத்தில் எழுந்த கவலை சிறிது தணிவடைந்தது. அவ்வாறு 12 நாள் யுத்தம் பிரமாதமாக நடைபெற்றும் ஆங்கிலேயர்கள் கோட்டைக்குள் புக முடியாமலிருந்தனர். எனவே ஆங்கிலச் சேனைத் தலைவர் உளவாளிகளின் துணை கொண்டு தமது சேனையை மூன்று பிரிவாக்கி ஜான்ஸியை மூன்று பாகங்களில் தாக்கும்படி செய்ததோடு பலவீனமான இடத்தை யறிந்து அப் பக்கத்தில் நகரத்திற்குள் புகும்படி சேனைகளைத் தூண்டினார். அதனால் ஆங்கிலச் சேனைகள் தந்திரமாக ஜான்ஸி நகரத்தில் நுழைந்து பொது ஜனங்களைக் கொன்றும், வீடுகளுக்குத் தீவைத்தும் நாசம் விளைக்க ஆரம்பித்தனர். நகரத்தைக் காத்து நின்ற மகா ராணியின் சேனைகள் பின்னடைந்தன. அதைக் கண்ட மகாராணியார் தாமே முன்னின்று தமது ஆப்கன் குதிரைப் படை வீரர்களின் துணையோடு கோட்டையினின்றும் நகரத்தின் மீது பாய்ந்து சென்று, ஆங்கிலேயர்களைத் தாக்கிப் பெரும் போர் விளைத்தார். எதிர்ப்பட்ட ஆங்கில வீரர்களை மகா ராணியும் அவரது படை வீரர்களும் எண்ணற்ற கணக்கில் வெட்டி வீழ்த்தினர். ஆயினும் ஆங்கிலச் சேனைகள் புற்றீசல்களைப் போல் மேன்மேலும் வந்து விழுந்ததைக் கண்டு அஃது ஏற்ற சமயமல்ல வென்பதைக் கருதி மகா ராணியார் தமது துணைவர்களோடு மீண்டும் கோட்டையை வந்தடைந்தார். அது காலை கோட்டையில் ராணியாரின் அரண்மனைக் கடுத்தாற் போலிருந்த பெரிய மருந்துச் சாலையில் தீப் பிடித்துக் கொண்டு எரிய ஆரம்பித்தது. அதனால் மகா ராணிக்குப் பெருத்த நஷ்ட முண்டாயிற்று. அதுவே சமயமாகக்

கொண்டு ஆங்கிலேயர்கள் ஜான்ஸி நகரத்தில் அழிவு வேலையை ஆரம்பித்தனர். எதிர்ப்பட்ட மக்களைச் சிறியோர் பெரியோர் என்ற பேதமின்றி யாவரையும் வெட்டிக் குவித்தனர். வீடுகளுக்குத் தீ வைத்தனர். மகா ராணி வசித்து வந்த ராஜ மஹலைக் காத்து நின்ற வீரர்களை மாய்த்து, அம் மஹலைக் கைப்பற்றி அதைச் சிதைத்தும் இடித்தும் உருமாய்த்து அவ்விடத்தில் யூனியன் ஜாக்கைப் பறக்க விட்டனர். ஊர் மக்களிடையில் எழுந்த குய்யோ முறையோ வென்ற அழுகுரல் வானத்தைப் பிளந்தது. அவ்வாறு பழமையான ஜான்ஸி நகரம் அவ்விரவு பரிதபித்தக் காக்ஷியை மகா ராணியார் கோட்டைக் கோபுரத்தின் மீது நின்று நோக்கி மிக வருந்தினார். உடனே தமது ஆப்தர்களை ஒன்று கூட்டி இனிச் செய்வது யாது என யோசித்தார். "ஆங்கிலச் சேனைகள் நாற்புறமும் சூழ்ந்துகொண்டிருப்பதாலும், இன்று ஜான்ஸி நகரம் ஆங்கிலேயர் கையில் வீழ்ந்தபடியாலும், நாளைக் காலையில் அவர்கள் கோட்டையின் மீது வருவார்கள். நமது பீரங்கிப் படையும் வலி குன்றியது. சேனைகளிலும் பெரும் பாகம் சிதைந்து போயிற்று. பேர் பெற்ற சேனைத் தலைவர்கள் பலர் வீர சுவர்க்க மெய்தினர். ஆகவே இனி நாம் போர் புரிந்து வெற்றி பெறுவோமென்பதற்கிடமில்லை. எனவே ஆங்கிலேயர்கள் நம்மைக் கைதி செய்து கொண்டு போக யான் ஒருப்படேன். என் உடலில் உயிரிருக்கும் வரையில் ஒரு ஆங்கிலேயன் என்னுடலைத் தீண்டச் சகியேன். ஆகவே ராஜபுத்திர வீர மாதர்களின் வழக்கப்படி அரசியாகிய யான் தீயிற் குளித்து வீர சுவர்க்க மெய்துவேன். உங்களில் மரணத்திற்குத் துணிந்தவர்கள் இங்கே யிருக்கலாம். மற்றையோர் இவ்விரவே கோட்டையினின்றும் உங்கள் உயிர் தப்பி வெளிச் செல்லுவதற் கேற்ற வழி பார்ப்பீர்களாக" என்று அரசியார் கூறினார். எனினும் வயது முதிர்ந்த ஒரு சர்தாரின் யோசனைப்படி இனி ஒருக்கணமும் தாமதிக்காமல் அவ்விரவே போர் வீரர்கள் அனைவரோடு அரசியாரும் பிறரும் போர் வீரர் வேடம் பூண்டு கோட்டையை விட்டு நகரத்திற் புகுந்து ஆங்கிலச் சேனையைப் பிளந்து கொண்டு விரைவில் வெளியேறி கால்பீ என்ற நகரத்திலிருந்த பீஷ்வா அவர்களிடம் போய்ச் சேருவதென்று தீர்மானித்தனர்.



## மகா ராணி ஜான்ஸியை விட்டுச் செல்லுதல்.

அவ்வாறு தீர்மானித்த வுடனே பிரயாணத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தனர். மகா ராணி பேர் வீரனைப் போல் புருட வேடம் புனைந்து, உரைவாளை யிடையிற் சொருகித் தமது வெள்ளைப் பட்டத்துக் குதிரையின் மீதேறித் தமது சுவீகார பாலகனாகிய தாமோதர ராவைத் தமது முதுகில் கட்டிக்கொண்டு, தமது அன்புக்குரிய தோழிகள் சிலரும் போர் வீரர் உடைதரித்துத் தொடர்ந்துவர, தமது தந்தையாராகிய மோரோ பந்து தாம்பே அவர்களும், கோட்டையில் மிஞ்சிய சேனை வீரர்களனைவரும் குதிரைகளின் மீது தம்மைச் சூழ்ந்துவர, ரகசிய வழியில் கோட்டையினின்றும் வெளிப்பட்டு நகரத்திற் புகுந்து வடக்கு வாசலின் வழியாக விரைந்து வெளியே செல்ல முற்பட்டார். வாயில் காக்கும் ஆங்கிலேயரின் சேனை வீரர்கள் வழி மறிக்கவே "தாங்கள் ஆங்கிலச் சேனைத் தலைவருக்குத் துணைபுரிவதற்காகவே செல்வதாக"க் கூறி லக்ஷ்மீபாய் விரைவாகத் தமது குதிரையை நடத்திச் சென்றார். எனினும் சில ஆங்கில வீரர்கள் மகா ராணியை வழி மறிக்க முயன்றனர். அவர்களை மகா ராணியார் தமது கரத்தில் ஏந்திய வாளால் வீசி மாய்த்து விட்டு முன்னே சென்றார். அவ்வளவில் ஆங்கிலச் சேனைகள் சில வந்து அவர்களைத் தாக்க ஆரம்பித்தன. அப்பொழுது ஜான்ஸி ராணியோடு சுமார் பத்துப் பனிரெண்டு போர் வீரர்கள் துணையாகச் செல்ல, மற்றைய வீரர்கள் அனைவரும் ஆங்கிலச் சேனைகள் மகா ராணியை வழி மறிக்கா வண்ணம் அச் சேனைகளைத் தடுத்துப் போர்புரியத் தலைப்பட்டனர். அப் போராட்டத்தில் ஜான்ஸி வீரர்கள் பெரும்பாலர் வீர சுவர்க்க மெய்தினர். அப்பொழுதே மகா ராணி கோட்டையை விட்டு வெளிப்பட்டுப் போய் விட்டாரென ஆங்கிலேயர்களுக்குத் தெரியவந்தது. அச் செய்தியைச் செவியேற்ற ஆங்கில தளகர்த்தர் ஸர். ஹக்ரோஜ் துரையவர்கள் மகா ராணியைத் துரத்திப் பிடித்துக் கைதி செய்யுமாறு லெப்டினென்ட். பௌகர் என்ற துரையை யனுப்பினார். அவர் நைஜாம் அரசாங்கத்தின் வல்லமை வாய்ந்த குதிரைப் பட்டாளமொன்றை யழைத்துக் கொண்டு மஹா ராணியைப் பின் தொடரலாயினார். அக்காரிருளில் ஆங்கிலச் சேனைகள் வழியறிந்து செல்ல

இயலாமல் அலைந்து கொண்டிருக்கையில், மகா ராணியார் மரங்களடர்ந்த வனங்களினிடையே நெடு நாள் பழகிய அனுபவத்தால் வழி தெரிந்து விரைந்து சென்று கொண்டிருந்தார். அவ்வாறு சென்று பாண்டேோ என்ற கிராமத்தை யடைந்தார். மறுநாள் காலை எனவே ஏப்பிரல்மீ 5 தேதி மகா ராணியார் விடியற்காலையில் எழுந்து, காலைக் கடன்களை முடித்துக் கொண்டு, தங் குமாரன் தாமோதர ராவுக்கு வேண்டிய உணவுகளைக் கொடுத்துப் பின்னர் கால்பீ கோட்டையை நோக்கிச் செல்ல ஆயத்தப் பட்டுக்கொண் டிருந்தார். அவ்வளவில் லெப்டினெண்ட். பௌகர் துரை தன் சேனையுடன் அக் கிராமத்திற்கு அருகே வந்து விட்டார். அதையறிந்த மகா ராணி தங் குமாரனை முதுகில் கட்டிக் கொண்டு குதிரை மீதேறித் தம்முடன் வந்த சில துணைவர்களோடு கையில் வாளேந்தி விரைந்து புறப்பட்டார். அதைக் கண்ட பௌகர் துரையின் சேனைகள் மகா ராணியைப் பிடிக்க விரைந்து நெருங்கின. அருகே வந்தவர்களைத் தன் கை வாளுக்கு இரையாக்கி மகா ராணி செல்லுவதைக் கண்ட பௌகர் துரைத் தானே விரைந்து முன் வந்து மகா ராணியைத் தாக்கினார். அந்த நிமிடத்தில் மகா ராணியின் வாள் வீச்சுக்கு இலக்காகிப் பௌகர் துரை நிலத்தில் விழுந்தார். அவ்வளவில் ஆங்கில வீரர் பின்னடைந்தனர். அதுவே சமயமாகக் கொண்டு லக்ஷ்மீ பாய் அவர்கள் குதிரையை விரட்டிப் பறந்து சென்று விட்டார். பௌகர் துரைத் தமது தோல்விக்கு மனம் வருந்தித் திரும்பிச் சென்றார். மகா ராணி அன்று பகலெல்லாம் நில்லாமல் சவாரி செய்து இரவு 12 மணிக்குக் கால்பீ நகரத்தைப் போய்ச் சேர்ந்தார். அந்தப்புரத்தில் அரச போகங்களில் சுகத்தில் காலங் கடத்திய ஒரு பெண்பால் அதிலும் ஓர் இள நங்கை அவ்வாறு ஜான்ஸியி னின்றும் நூற்றிரண்டு மைல்கள் தூரத்தி லுள்ள கால்பீ நகரத்திற்கு ஒரு குதிரையின் மீது தன் குமாரனை முதுகிற்றாங்கிக் கொண்டு இடையில் நேர்ந்த போர்களையும் வென்று, இருபத்திநான்கு மணி நேரத்தில் விடாமலோடிப் போய்ச் சேர்ந்தாரென்றால் அம்மாதின் நெஞ்சத் துணிவும், வீரமுந்தானென்னே! என்னே!! அவ்வாறு அம் மகா ராணியைக் கால்பீ நகரதிற் கொண்டு சேர்த்த அக் குதிரை அதிகக் களைப்பால் ஜான்ஸி வீரர்கள் பலரோடு தானும் வீர சுவர்க்க மெய்தியது. அந்தோ! அக் குதிரை செய்த உதவியின் பெருமையை யாரால் அளவிட முடியும்?



## மோரோபந்துவின் முடிவும், ஜான்ஸி நகரின் அழிவும்.

லக்ஷ்மீ பாயின் தந்தை மோரோ பந்து தாம்பே அவர்கள் அன்று இரவு ஜான்ஸிக் கோட்டையை விட்டு வெளிப்படுகையில் தங்களுக்கு வேண்டிய பொருள்களைக் கூடிய மட்டும் ஒரு யானையின் மீதேற்றிக் கொண்டு புறப்பட்டார். எனினும் இடையில் ஆங்கிலச் சேனைக்கும், தங்கள் சேனைக்கும் போர் மூண்டமையின் அவர் எப்படியோ தனிப்பட்டுத் தப்பி ராணிக்குப் பின் சென்று ததியா என்ற ஊரை யடைந்தார். அவ் வூராசன் அவரிடமிருந்த பொருள் அனைத்தையும் கவர்ந்து கொண்டு அவரைப் பிடித்து ஆங்கிலேயரிடம் ஒப்படைத்தான். ஆங்கிலேயர்கள் அவரைக் கைதிசெய்து மீண்டும் ஜான்ஸிக்குக் கொண்டு வந்து பகல் 2 மணி சுமாருக்கு ஆங்கில தளகர்த்தர் ஸர். ஹுக்ரோஜ் துரையின் உத்திரவுப்படி ராஜமஹலுக்கு அருகாமையில் அவரைப் பகிரங்கமாகத் தூக்கிலிட்டுக் கொன்றனர். பாரதப் புதல்விகளில் முதன்மையான வீர ரத்தினமெனத் திகழ்ந்த மகா ராணி லக்ஷ்மீ பாயினைப் பெற்று வளர்த்த அப் பெரியாரின் முடிவு இருந்தவாறு என்னே!

மகா ராணி கோட்டையை விட்டுச் சென்ற மறுநாள் ஆங்கிலேயர்கள் யாதொரு எதிர்ப்புமின்றிக் கோட்டைக்குள் பிரவேசித்துக் கோட்டை மீது தங்கள் கொடியைப் பறக்க விட்டனர். உடனே ஆங்கில தளகர்த்தரின் அனுமதியின்படி ஆங்கில வீரர்கள் மூன்று நாட்கள் வரையில் தங்களுக் கிஷ்டமானபடி ஜான்ஸி நகரைக் கொள்ளையிட்டுச் சூறையாடினர். பிறகு சின்னாட்கள் ஆங்கிலேயர்களின் மதராஸ் இந்தியப் பட்டாளம் அந் நகரில் மீதியானவற்றைக் கொள்ளையிட்டனர். அதனிடையில் ஆங்கில வீரர்கள் நகரில் செய்த அட்டூழியங்கள் அழவிட முடியாவாம். நிரபராதிகளான மக்கள் பல நூற்றுவரைக் கொன்று குவித்தனர். வீடுகளைத் தீக்கிரை யாக்கினர். பல பெரிய மாளிகைகளைத் தரைமட்ட மாக்கினர். செல்வத்தைக் கவர்ந்தனர். செல்வாக்கை மாய்த்தனர். பலவாறு கூறுவானேன்? நகரத்தைப் பாழ் நகராக்கி முடித்தனர். அதன் பின் எனவே ஒரு வாரத்திற்குப் பிறகு ஜான்ஸியில் ஆங்கில அதிகாரிகள் அமைதியை

நிலை நாட்ட முற்பட்டனர். அவ்வாறு ஜான்ஸி யரசாங்கம் கடைசி முறையாக வீழ்ச்சி யடைந்துத் தன் ஒளியை யிழந்தது.

## கால்பீ யுத்தம்.

கால்பீ என்பது யமுனை நதிக் கரையி லிருந்த ஒரு பழைய பட்டணம். பழமையான ஒரு கோட்டையும் அங்குண்டு. அஃது ஆங்கிலேயருடைய வசத்தி லிருந்த தாயினும் 1857-ம் ஆண்டில் கலகம் ஆரம்பமான உடனே அந் நகரம் கலகக்காரர் வசமாயிற்று. நானா சாஹிபின் சகோதரராகிய ராவ் சாஹிப் அக் கோட்டையைத் தம் வசப் படுத்திக் கொண்டு, அங்கே சேனைகளைத் திரட்டி அதைப் பலப்படுத்தினர். யுத்த தளவாடங்களும் அங்கு சேகரித்து வைக்கப் பட்டன. அத்தகைய கால்பீ நகரத்தை ஜான்ஸி மஹா ராணி லக்ஷ்மீ பாய் போய்ச் சேர்ந்ததும் அவரை ராவ் சாஹிப் அவர்கள் ஆதரவோடு வரவேற்று உபசரித்தார். ஜான்ஸியில் நடந்த சம்பவங்களை செவியுற்ற பீஷ்வா மிகவும் வருந்தித் தகுந்த காலத்தில் லக்ஷ்மீபாயிக்குத் துணைபுரிய இயலாமற் போனமைக்குப் பரிதாபப்பட்டார். லக்ஷ்மீ பாய் தனிமையில் ஆங்கிலேயர்களோடு எதிர்த்து நின்றுப் போர் புரிந்த தீரத்தை வெகுவாகப் புகழ்ந்து, அவருக்கு வேண்டிய விடுதிகளை அமைத்துக் கொடுத்து ஆதரித்தார். பீஷ்வா ராவ் சாஹிப் அவர்களின் வேண்டு கோளின்படி லக்ஷ்மீ பாய் அவர்கள் முன்னின்று யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினர். அவ்வாறு லக்ஷ்மீ பாய் பீஷ்வாவின் சேனைகளைத் தயார் செய்து கொண்டிருந்ததைக் கேள்வியுற்ற பாந்தா நவாபு, வானபுர அரசன் முதலிய சில சிற்றரசர்களும் உற்சாகங் கொண்டு தத்தம் சேனைகளையும் பீஷ்வாவின் உதவிக்காக அனுப்பி வைத்தனர்.

மகா ராணி லக்ஷ்மீ பாய் கால்பீ நகரத்தை யடைந்தாரென்ற செய்தி ஜான்ஸிக்கு எட்டியவுடன் ஆங்கில தளகர்த்தர் ஹக்ரோஜ் துரை யவர்களின் நெஞ்சம் திடுக்கிட்டது. கால்பீயில் சேனைகள் திரட்டப்படுவதை யறிந்து அவர் ஜான்ஸியில் போதிய பாதுகாப்புகளை ஏற்படுத்திய பின்னர் கால்பீயை நோக்கிப் படை யெடுத்துச் செல்ல நிச்சயித்தார். அந்த நிலையில் தாந்தியாதோபே, வானபுர



அரசன், பாந்தா நவாபு முதலியோர் தங்கள் சேனைகளுடன் ஜான்ஸியை நோக்கி வந்து கொண்டிருக்கிறார்களென்றும், வழியில் அப்பொழுது கோஞ்சு என்ற கிராமத்திற்கு வந்து தங்கி யிருக்கிறார்களென்றும் ஹக்ரோஜ் துரை கேள்வியுற்று, உடனே தமது சேனைகளைச் சில பாகங்களாகப் பிரித்து மேஜர். கால் முதலிய சில சேனைத் தலைவர்களின் தலைமையில் கோஞ்சு கிராமத்திற்கு அனுப்பி வைத்தார். அவர்கள் கலகக்காரர்களை எதிர்த்தபோது கோடரா என்ற கிராமத்திற் கருகே (ஆங்கிலேயர்கள்) தோல்வியே யடைந்தனர். ஆயினும் ஹக்ரோஜ் துரை மேன்மேலும் புதிய சேனைகளோடு வந்து மேல் விழுந்ததோடு, தந்திரமாக எதிரிகளுக்குத் தெரியாதபடி நாற்புறமும் தமது சேனைகளைச் செலுத்தித் திடீரென்று தாக்கிய படியால் தாந்தியா முதலியோர் முன்னெச்சரிக்கையும், கட்டுப்பாடும், எதிரிகளின் சூழ்ச்சிகளை முன்னறியும் ஏற்பாடுகளும் இல்லாதவராய்த் தோல்வியுற்றுக் கோஞ்சு கிராமத்தை விடுத்துப் பின்னோக்கி யோடினர். அத் தோல்வியால் கலகக்காரர்களின் பீரங்கிகள், துப்பாக்கிகள், மருந்து குண்டு சாமான்கள் முதலியவை ஆங்கிலேயர்களுக்குக் கிடைத்தன. அதன் மீது ஆங்கிலச் சேனைகள் கால்பீயை நோக்கி முன்னேறிச் சென்றன. வழியில் ஒவ்வொரு அடியும் எதிரிகளோடு போர்புரிந்து பல கஷ்ட நஷ்டங்களுக் குட்பட்டே ஆங்கிலேயர்கள் முன் செல்லலானார்கள். அதனிடையில் ஆங்கிலேயர்களுக்குப் புதிய சேனைகள் துணைக்கு வந்து சேர்ந்தன.

தாந்தியா முதலியோர் வழியில் தோல்வியுற்றதைக் கேள்விப் பட்ட லக்ஷ்மீ பாய் பீஷ்வாவி னிடத்திற்குச் சென்று நம் சேனைகளுக்கும் சேனைத் தலைவர்களுக்கும் போதிய கட்டுப்பாடும் ஒழுங்கும் இல்லை. யாவர்க்கும் திறமை வாய்ந்த ஒருவர் தலைமை வகிக்க வேண்டும். கட்டுப்பாடும், ஒழுங்கும், பயிற்சியுமில்லாத சேனை எவ்வளவு பெரிதாயினும் வெற்றி பெற முடியாது. எனவே நீங்கள் போதிய முன்னேற்பாடுகளைத் திறமையுடன் செய்தல் வேண்டும். தலைவர் வார்த்தைக்கு யாவரும் கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும். சேனைகளுக் கெல்லாம் ஒழுங்கான பயிற்சி கொடுக்க வேண்டும். யுத்த தளவாடங்களைச் சரியான முறையில் உபயோகிக்க வேண்டும். எதி

ரிகளின் பலா பலங்களையும் அவர்களின் நடமாட்டங்களையும் அவ்வப்போது தெரிந்து கொள்ளுவதற் கேற்ற உபாயங்கள் தேட வேண்டும்" என்று பல யோசனைகளைக் கூறினார். அவ் வார்த்தைகளை உண்மை என்று பீஷ்வா ஒப்புக் கொண்டாராயினும், ஒரு பெண்பாலுக்கு எவ்வாறு சர்வ சேனாதிபத்தியம் வழங்குவதென்ற பொருமையினால் தானே யாவர்க்கும் தலைமைப் பூண்டு லக்ஷ்மீ பாயிக்கு இருநூற்றிருபது வீரர்களைக் கொண்ட ஒரு குதிரைப் பட்டாளத்தைக் கொடுத்து, யமுனா நதிக் கரையில் நின்று ஆங்கிலேயர்களை எதிர்க்குமாறு கூறினார். லக்ஷ்மீ பாய் தமது வீரர்களுக்கு வேண்டிய யுத்தப் பயிற்சிகளைக் கொடுத்துத் தயார் செய்து வைக்க முற்பட்டார்.

ஏப்ரல்மீ 15-ந்தேதி ஆங்கிலச் சேனைகள் கால்பீயைச் சமீபித்தன. உடனே குவாலியரினின்றும் வந்திருந்த கலகக்காரர்களின் சேனை ஆங்கிலேயர்களின் மீது விழுந்து அவர்களைச் சின்னபின்னப் படுத்தியது. அதனால் ஆங்கிலச் சேனைகளின் முன்னணியில் அதிக நஷ்டமேற்பட்டது. அத்துணைச் சிறிய வெற்றியைக் கண்ட பீஷ்வாவின் சேனைகள் மெய் மறந்து சந்தோஷத்தில் மூழ்கி குடியிலும், களியாட்டங்களிலும் கருத்தைச் செலுத்தின. 16உ மேஜர். ஆர் என்ற துரை தமது சேனையோடு முன் வந்து கால்பீயைத் தாக்கினார். அப்பொழுதும் ஆங்கிலேயர்களுக்கு நஷ்டமே விளைந்தது. அதற்குள் ஆங்கிலதளகர்த்தர் ஹாக்ரோஜ் துரையவர்களும் சேனைகளுடன் கால்பீக்கு அருகேயுள்ள பல கிராமங்களைக் கைப்பற்றிக்கொண்டு சமீபித்தார். பிரிகேடியர், ஸ்டீவர்ட், லெப்டினெண்ட். கல்நல் ரர்பர்ட்ஸன், லெப்டினெண்ட். கார்டன் முதலிய ஆங்கிலச் சேனைத் தலைவர்கள் ஒன்றுகூடி கால்பீயின் மீது சென்றனர். அதைக் கண்ட பீஷ்வாவின் சேனைகள் பயமின்றித் தமது பாதுகாப்பான இடங்களை விட்டு அலட்சியமாக வெளிப்பட்டு ஆங்கிலேயர்கள் மீது விழுந்தன. அதைக் கண்ட ஆங்கிலேயர்கள் பீரங்கிகளினின்றும் துப்பாக்கிகளினின்றும் குண்டுகளைப் பொழிந்து பீஷ்வாவின் சேனைகளைப் பெரு நஷ்டத்திற்குள்ளாக்கினர். அதனால் பீஷ்வாவின் சேனைகள் நிலை கலங்கி ஓடத் தலைப்பட்டன. அதைக் கண்ட பீஷ்வா முதலியோரும் ஓட முயன்ற



னர். அச் சமயத்தில், லக்ஷ்மீ பாய் முன் வந்து இச் சமயத்தில் புறங்காட்டி ஓடுவது அழகல்ல. எனது படை வலியைச் சற்று நின்று பாருங்கள் எனக்கூறித் தமது சிறு குதிரைப் படையோடு ஆங்கிலச் சேனைகளின் மீது விழுந்து கை கலந்து பெரும் போர் விளைத்துப் பீரங்கிப் படையின் முன்னணியை அடக்கினார். லக்ஷ்மீ பாய் தமது கரத்தால் ஆங்கில வீரர்கள் எண்ணற்றவரை வெட்டி வீழ்த்திய அக் காட்சியைக் கண்ட பீஷ்வாவும் சேனைகளுடன் ஆங்கிலேயரின் மீது விழுந்து போரிடத் தொடங்கினார். ஆங்கிலச் சேனைகள் லக்ஷ்மீ பாயின் சேனையோடு கை கலந்த சண்டையில் முன்னிற்க மாட்டாமல் கலைந்து ஓடத் தொடங்கின. அதைக் கண்ட பீஷ்வாவின் சேனைகள் ஆங்கிலேயர்களை அலக்ஷியமாகக் கருதித் தமது முழு பலத்தையுங் காட்டிப் போர் புரியாமல் வெற்றி யடைந்து விட்டதாக எண்ணினர். அந்த நிமிடத்தில் ஆங்கில தளகர்த்தரின் யோசனைப்படி ஆங்கில பீரங்கிகள் மற்றொரு புறமிருந்து பீஷ்வாவின் சேனைகளின் முன்னணியை நோக்கிக் குண்டுகளைப் பொழிந்தன. மேலும் ஆங்கில தளகர்த்தரே தமது சேனையுடன் முன் வந்து பீஷ்வாவின் சேனையைத் தாக்கினர். அதனால் திடீரென்று பீஷ்வாவின் சேனைகள் பின்னடைந்தன. லக்ஷ்மீ பாய் மட்டும் தம் சிறு படையோடு ஆங்கிலேயர்களை நெருங்கி நின்று தாக்கிக் கொண்டிருந்தார். லக்ஷ்மீபாய் பீஷ்வாவின் சேனைகள் தமக்குத் தூரமானதைக் கண்டு இனி தாம் தனிமையில் போர் புரிவதால் பயனில்லை யென்பதை யறிந்து உடனே மிஞ்சிய வீரர்களோடு தாமும் பின்னடைந்து சென்றார். அதுவே சமயமெனக் கொண்டு ஸர். ஹக்ரோஜ் துரை பீஷ்வாவின் சேனைகளின் மீது நாற்புறமும் சூழ்ந்து தாக்க முற்பட்டார். அந் நிலைமையைக் கவனித்த பீஷ்வா ராவ் சாஹிபு, பாந்தா நவாபு, லக்ஷ்மீ பாய் முதலியோர் எஞ்சிய சேனைகளோடு கோட்டையைவிட்டுப் போய் விட்டனர். கோட்டையைக் கைப்பற்றக் கருதிய ஆங்கில தளகர்த்தர் யாதொரு பிரயாசையும், எதிர்ப்புமின்றி கோட்டைக்குள் புகுந்து அதைத் தம் வசப்படுத்திக்கொண்டு தங்கள் கொடியைப் பறக்கவிட்

டனர். கோட்டையில் பீஷ்வா முதலியோர் ஒரு வருஷ காலமாகச் சேகரித்து வைத்திருந்த யுத்த தளவாடங்கள் பெரும் பாகம் ஆங்கிலேயர் வசமாயிற்று. அவ்வாறு ஹக்ரோஜ் துரையவர்கள் வெகு கஷ்டப்பட்டு பீஷ்வா முதலியோரைத் துரத்திக் கால்பீயைக் கைப்பற்றியதை முன்னிட்டுக் கவர்னர் ஜனரல்—கானிங் பிரபு கடிதமெழுதினர். அவ்வாறு இந்தியாவின் மத்திய பாகத்தில் வெகுவாகக் கலக முயற்சிகள் அடக்கப் பட்டதன் மேல் ஸர். ஹக்ரோஜ் துரையவர்கள் இளைப்பாறக் கருதி விடுமுறை பெற்றுப் பம்பாயிக்குச் சென்றார்.

## குவாலியர் சண்டையும் லக்ஷ்மீ பாயின் வீர மரணமும்.

கால்பீயை விட்டுச் சென்ற ராவ் சாஹிப் பீஷ்வா அவர்கள், பாந்தா நவாபு, லக்ஷ்மீ பாய் முதலியோரோடு குவாலியருக்கு நாற்பத்தாறு மைல்கள் தூரத்திலுள்ள கோபாலபுரமென்ற கிராமத்தைப் போய்ச் சேர்ந்தார். பீஷ்வாவின் சேனைத் தலைவர் தாந்தியாவும் எங்கோ சென்றிருந்தவர் அங்கு வந்து கூடினர். லக்ஷ்மீ பாயைத் தவிர மற்ற மூன்று தலைவர்களும் அதன் பின் என்ன செய்வதென்பதை யறிய மாட்டாதவர்களாகத் திகைத்துக் கொண்டிருந்தனர். 1857-ம் ஆண்டு ஜூன் மாதத்திலிருந்து வட இந்தியாவி லெங்கு பார்த்தாலும் சாகர், கால்பீ, ஜான்ஸி, ஆக்ரா, லக்னௌ, கான்பூர் முதலிய பல விடங்களிலும் சுதேசிகளின் கொடி பறந்து கொண்டிருந்தது. ஆயினும் இன்று எனவே 1858-ல் மீண்டும் மேற்கண்ட இடங்களெங்கும் ஆங்கிலேயரின் கொடியே பறக்கலாயிற்று. கலகக்காரர்களின் சேனைகள் பலவும் ஆங்கிலேயர்களால் அழிக்கப்பட்டன. மிஞ்சியவை சிதறிப் போயின. அவர்களின் கோட்டைகளும், பட்டணங்களும், பொருளும், மருந்து குண்டு சாமான்களும், மற்றும் பல சாதனங்களும் ஆங்கிலேயரின் வசமாயின. ஆங்கிலேயர்களை எதிர்த்துப் போர் புரிவதற்கேற்ற ஆயுத பலமோ, ஆள் பலமோ, இட பலமோ, பொருள் பலமோ ஒன்றும் அவர்களிடத்தி லில்லை. போரை யொழித்துச் சமாதானமாக ஓரிடத்தில் இருப்பதற்கும் இல்லை. ஏனெனில் ஆங்கிலேயர்கள் அவர்களைப் பிடிக்கப் பின் தொடர்ந்து வந்து கொண்டிருந்தனர். அந்



நிலையில் பீஷ்வா முதலியோர் தயங்கிக்கொண் டிருக்கையில் லக்ஷ்மீ பாய் முன் வந்து "இதுவரையில் நாம் ஜான்ஸி, கால்பீ முதலிய கோட்டைகளை இடமாகக் கொண்டு நின்று யுத்தம் செய்தபடியால் இத்தனை நாள் நாம் எதிரிகளை எதிர்த்து நின்றோம். இனி நாம் தனிமையில் நின்று போர் புரிவதால் ஒரு பயனும் விளையாது. ஆகவே உடனே சிந்தியா அரசனின் இருப்பிடமாகிய குவாலியர் கோட்டையை எதிர்த்து அதைக் கைப்பற்றி, அவ்வரசனையும் கூடுமானால் நம்முடன் சேர்த்துக் கொண்டு, அக் கோட்டையிலிருந்து பெரிய பாதுகாப்புகளுடன் ஆங்கிலேயர்களை எதிர்க்க வேண்டியது அவசியம்" எனக் கூறினர். அந்த யோசனையைப் பீஷ்வாவும் பிறரும் சந்தோஷத்தோடு அங்கீகரித்தனர். சிந்தியாவின் ராஜ்யத்தில் ஏற்கனவே கலக முயற்சிகள் தலை காட்டியதனால் சில சேனைகள் கலகமிழைத்து ஆங்கிலேயர்களை எதிர்க்க முற்பட்டன வாயினும், சிந்தியா அரசன் ஆங்கிலேயரிடத்தில் நட்புக் கொண்டு அக் கலகக்காரர்களை யடக்கி ஆங்கிலேயர்களுக்குத் துணை புரிந்து கொண்டிருந்தான் ஆயினும் குவாலியரிலிருந்த சேனைகளும் சர்தார்களும் ஆங்கிலேயர் மீது பகை கொண்டு கலகக்காரர்களின் பக்கத்தில் சேர்ந்து கொள்வதற்குச் சமயம் பார்த்துக் கொண்டிருந்தனர். அதனிடையில் தாந்தியா தோபேயும் இரண்டொரு முறை குவாலியருக்குச் சென்று உளவறிந்து வந்ததோடு, அங்கு புகைந்துக் கொண்டிருந்த கலக நெருப்பை மேன்மேலும் தூண்டி விட்டிருந்தார். எனவே குவாலியர் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு பீஷ்வா நிச்சயித்தார். ராவ் சாஹிப் பீஷ்வா, பாந்தா நவாபு, தாந்தியா, லக்ஷ்மீ பாய் முதலியோர் தமது சேனைகளைத் திரட்டிக் கொண்டு குவாலியரை நோக்கிச் சென்று, சிந்தியா அரசனைத் தம்முடன் நட்பு கொண்டு தங்களை, தெற்கு நோக்கிச் செல்ல வழிவிட வேண்டுமென்று சொல்லி யனுப்பினர். ஆயினும் அவ்வரசன் அங்கிருந்த ஆங்கிலேயப் பிரதிநிதியோடுகூடி இவர்களை எதிர்க்கவே முற்பட்டான். அதனால் சிந்தியா அரசன் முதலியோர் குவாலியர் கோட்டைக்கு ஆறு மைல்களுக்கு அப்பாலேயே பீஷ்வாவின் சேனைகளை எதிர்த்துப் போர் புரிய ஆரம்பித்தனர். அச் சண்டையிலும் லக்ஷ்மீ பாய் காட்டிய திறமையால் சிந்தியா அர

சன் தோல்வியடைந்து ஆக்ராவை நோக்கி ஓடிச்சென்று ஆங்கிலேயரைச் சரணமடைந்தான். ஆகவே யாதொரு தடையுமின்றி பீஷ்வா முதலியோர் குவாலியர் கோட்டையில் புகுந்தனர். ஆங்கிருந்த சிந்தியா அரசனின் சர்தார்களும் சேனைகளும் சந்தோஷமாக இவர்களை வரவேற்றனர். அதனால் பீஷ்வாவின் சுதேசக் கொடி குவாலியர் கோட்டையில் பறக்கவிடப் பட்டது. குவாலியர் கோட்டையிலிருந்த ஏராளமான யுத்த தளவாடங்களும், பொக்கிஷமும், பிறவும் பீஷ்வாவின் கைவசமாயின. அதிக கோலாகலத்துடன் ராவ் சாஹிப் பீஷ்வா அவர்கள் குவாலியர் கோட்டையில் தர்பார் நடத்திச் சிங்காதன மேறினார். சிந்தியாவின் அதிகாரம் நீக்கப்பட்டு பீஷ்வாவின் அதிகாரம் நிலை நிறுத்தப் பெற்றது. பீஷ்வாவும், அவரது சகாக்களும், அவரது சேனைகளும் வெற்றிக் களிப்பில் மூழ்கி எதிர் காலத்தைப் பற்றிச் சிறிதும் யோசிக்காமலேயே விருந்துகளிலும், வேடிக்கைகளிலும், களியாட்டங்களிலும் காலத்தைக் கழிக்கலாயினர் குவாலியரைக் கைப்பற்றிய வுடனே நவல்பா என்ற ஒரு தோட்டத்திலேயே லக்ஷ்மீ பாய் விடுதியமைத்துக் கொண்டு தங்கினார். மேற் கண்ட கோலாகலங்களைக் கவனித்த லக்ஷ்மீ பாய் மிகவும் மனம் வருந்திப் பீஷ்வாவினிடத்திற்குச் சென்று "இவ்வாறு களியாட்டங்களில் காலங் கடத்திக் கொண்டிருப்பது நன்றன்று; ஆங்கிலேயர்கள் மிகவும் பலசாலிகள்; அவர்கள் நம்மைப் பின் தொடர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே நமக்குக் கிடைத்த இச்சாவகாசத்தில் புதிய சேனைகளைத் திரட்டவும், யுத்தப் பயிற்சிகள் கொடுக்கவும், கோட்டைக் கொத்தளங்களைப் பலப்படுத்தவும், யுத்த தளவாடங்களை ஆயத்தப்படுத்தி வைக்கவும் நாம் வேலை செய்ய வேண்டு" மென்று பலவாறு எச்சரிக்கை செய்தார். ஆயினும் "கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே" என்பதற்கிணங்க அவர் கூறிய வார்த்தைகள் அனைத்தும் பீஷ்வாவின் செவியேற்காதவையாயின. பீஷ்வாவும் அவரது சேனைத் தலைவராகிய தாந்தியாவும் தங்கள் வெற்றியின் பெருமையிலும், இந்தியாவின் பெரிய அரசாங்கம் தங்கள் கைகளில் வீழ்ந்த கர்வத்திலும் மூழ்கி இனி ஆங்கிலேயர்கள் தம்மை எதிர்க்கமாட்டார்களென்ற வீண் கனவுகளைக் கண்டுகொண்டு வாளாயிருந்தனர்.



குவாலியரைக் கலகக்காரர்கள் கைப்பற்றி விட்டார்களென்ற செய்தியைக் கேள்விப்பட்ட வுடனே ஆங்கில தளகர்த்தர் ஸர். ஹுக்ரோஜ் துரையவர்கள் திடுக்கிட்டு, ஆச்சர்ய முற்றவராய் மீண்டும் பம்பாயிலிருந்தும் வந்து, சர்வ சேனாதிபத்தியத்தை ஏற்றுக் கொண்டு, ஏராளமான ஆங்கிலச் சேனைகளையும் சுதேசப் பட்டாளங்களையும், திறமையாளர்களாகிய சேனைத் தலைவர் பலரையும், நவீன யுத்த தளவாடங்களையும் உடன் கொண்டு குவாலியரை நோக்கி வந்தார். அவர் மிகவும் அருகாமையில் வரும் வரையில் பீஷ்வாவுக்கு அச்செய்தி தெரியாமலேயே இருந்தது. ஆகவே ஆங்கிலேயர்கள் சமீபத்தில் நெருங்கிய பின்னரே பீஷ்வா அவர்கள் யுத்தத்திற்கு வேண்டிய ஆயத்தங்கள் செய்தார். இனி அவைகளைப்பற்றி விபரமாகக் கூறுவானேன்? ஆங்கிலச் சேனைகள் குவாலியரை முற்றுகையிட முற்பட்டன. குவாலியர் பட்டணத்தின் கிழக்குப் பாகத்தைக் காத்து நின்ற லக்ஷ்மீ பாய் தமது சேனையைக் கொண்டு ஆங்கிலேயர்களை எதிர்த்துப் பெரும் போர் செய்தார். ஆங்கிலச் சேனைகளுக்கு அபாரமான நஷ்டம் விளைத்தார். என்ன செய்து மென்ன? ஏராளமாக மென்மேலும் வந்து விழும் ஆங்கிலச் சேனைகளின் முன்னர் லக்ஷ்மீ பாயின் சிறு சேனைகள் என்ன செய்ய முடியும்? ஆங்கில தளகர்த்தர் பல சூழ்ச்சிகளைக் கொண்டு குவாலியரை நாற்புறமும் தாக்கி எதிரிகளைப் பயமுறுத்தினார். அவ்வாறு இடைவிடாமல் ஐந்தாறு நாட்கள் போலும் கடும் போர் நடை பெற்றது. கடைசி நாள் நகரத்திற்கும் கோட்டைக்கும் பெரு நஷ்டத்தை விளைத்த ஆங்கிலேயப் பீரங்கிப் படையின்மீது லக்ஷ்மீபாய் தமது குதிரைப் பட்டாளத்தோடு சென்று வீழ்ந்து அதைச் சின்னா பின்னப் படுத்தினார். அவ்வாறு போரில் முன்னணியில் நின்று லக்ஷ்மீ பாய் போரிடுவதை யறிந்த ஆங்கில தளகர்த்தர் மற்றும் பல ஆங்கிலச் சேனைகளை லக்ஷ்மீ பாயின் மீது ஏவியனுப்பினார். அவ்விதம் கைகலந்து செய்த சண்டைக் காலத்தில் சுமார் இருபது வீரர்களோடு லக்ஷ்மீ பாய் பீஷ்வாவின் சேனைகளை விட்டுப் பிரிந்து ஆங்கிலேயரின் இடையில் சிக்கிக் கொண்டார். ஆங்கிலேயர் செய்த சூழ்ச்சியால் பீஷ்வாவின் சேனைகள் லக்ஷ்மீ பாயைத் தனிமையில் விடுத்துப் பின்னடைந்தன. அதுவே சமயமெனக் கருதி ஆங்கிலேயர்கள் லக்ஷ்மீ பாயின் சிறு கூட்டத்தை நாற்புறமும் சூழ்ந்து கொண்ட

னர். ஆயினும் லக்ஷ்மீ பாய் புருடவேடம் பூண்டு போர் செய்த படியாலும், யுத்த களத்தில் எழும்பிய தூளியாலும் ஆங்கிலேயர்கள் லக்ஷ்மீ பாயை இன்னாரெனக் காண முடியாதவராயினர். எவ்வாறாயினும் ஆங்கிலச் சேனையைப் பிளந்து கொண்டு பேஷ்வாவின் சேனையோடு போய்ச் சேரவேண்டுமென்று லக்ஷ்மீ பாய் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின. அந்த நிலையில் பின்புறத்திலிருந்து வந்த துப்பாக்கிக் குண்டு ஒன்று லக்ஷ்மீ பாயின் மேல் தாக்கித் துன்பம் விளைத்தது. அச் சமயம் லக்ஷ்மீ பாய் புருடவேடம் பூண்டு தம்முடன் நிற்கும் சுந்தரி, காசி என்ற இரு தோழிகளையும், ராமசந்திர ராவ், ரகுநாத சிங் முதலிய மெய்க்காவலர்களையும் நோக்கி "யுத்த களத்தில் நான் வீழ்ந்து பட்டால் என்னுடம்பை மிலேச்சர்களாகிய ஆங்கிலேயர்கள் தீண்டாதவாறு நீங்கள் காக்க வேண்டும். அதுவே நீங்கள் எனக்குச் செய்ய வேண்டிய பேருதவியாகும்" என்று கூறினார். அதைச் செவியுற்ற அவர்கள் தங்கள் தங்கள் குதிரைகளை லக்ஷ்மீ பாயிக்கு அருகே செலுத்திக் கடைசி வரையில் அவரைக் காத்து நின்றனர். அச் சமயத்திற் சிறுவனாகிய தாமோதர ராவ் ராமசந்திர ராவ் தேசமுக்கின் குதிரைமீது இருந்தார்.

அவ்வாறு லக்ஷ்மீ பாய் ஆங்கிலச் சேனையினிடையிற் புகுந்து அதைப் பிளந்து சென்று கொண்டிருந்தார். எதிர்ப்பட்ட ஆங்கில வீரர்களை வெட்டி வீழ்த்திக் கொண்டு முன் சென்றார். கடைசியில் ஒரு சிறு ஓடை குறுக்கிட்டது. அதைத் தாண்டுவதற்கின்றி எதிர் வரும் குண்டுகளுக்குப் பயந்து லக்ஷ்மீ பாய் ஏறிவந்த குதிரை திடீரென்று நின்று விட்டது. லக்ஷ்மீ பாயின் பழகிய சொந்தக் குதிரை வியாதிக்குள்ளாயிருந்தபடியால் சிந்தியாவுக்குச் சொந்தமான ஒரு புதிய குதிரைமீதேறி அன்று போர் புரிந்தார். ஆகவே அக் குதிரையை முன்னால் நடத்த எவ்வளவு முயற்சிகள் செய்தும் அது பயன்படாமற் போயின. அப்பொழுது அவருடனிருந்த குதிரை வீரர்கள் ஒவ்வொருவராக எதிரிகளின் குண்டுகளால் கீழே வீழ்ந்து கொண்டிருந்தனர். அந்த நிலையில் ஆங்கிலேயக் குதிரை வீரர்கள் மற்றும் பலர் அவர் மீது வந்து விழுந்தனர். பலபேர் தம்மைச் சூழ்ந்து கொண்டதைக் கண்ட லக்ஷ்மீ பாய் கத்தியைச் சுழற்றித் தம்மைக் காத்துக் கொண்டு, எதிர்ப்பட்டவர்களை வீழ்த்திக் கொண்டிருந்தார். அச் சமயத்தில் ஆங்கில வீரனொருவன் பின் புறமாக நெருங்கி கத்தியால் லக்ஷ்மீ பாயை ஒரு சாதாரண போர் வீரனாகக் கருதி வெட்டினான். அவ்வெட்டு லக்ஷ்மீ பாயின் வலது தோளைச் சிதைத்தது. மேலும் அவரது கண்ணும் கீழே தெறித்து வீழ்ந்தது. அந்த சமயத்தில் மற்றொரு ஆங்கில வீரன் தன் கத்தியால் லக்ஷ்மீ பாயைக் குத்தினான். அத்தனை ஆபத்துக்களையும் ஏற்றுக் கொண்ட லக்ஷ்மீ பாய் கடைசி முறையாகப் பாய்ந்து தம்மைக் காயப்படுத்திய இரண்டு வீரர்களையும் தமது கத்தியால் வெட்டி வீழ்த்தித் தாமும் குதிரை மீது சாய்ந்தார். அவரை லக்ஷ்மீ பாய் என்றறியாத ஆங்கில வீரர்கள் எதிரிகளைத் தேடிக்கொண்டு யுத்த களத்திற் பாய்ந்து சென்றனர். அந்த நிமிஷத்தில் லக்ஷ்மீ பாயின் மெய்க் காவலர் ராமசந்திர ராவ் தேசமுக் அவர்கள் லக்ஷ்மீ பாயின் கருத்தை யறிந்து அவரை ஜாக்கிரதையாகத் தாங்கிச் சென்று, அங்கு சமீபத்திலிருந்த கங்காதாஸ் பாபா என்பவரின் கூரைக் குடிசையில் கொண்டு போய்ப் படுக்கவைத்துத் தாகவிடாய் தீர ஜலம் பருகச் செய்தார். லக்ஷ்மீ பாயின் தேகமெங்கும் இரத்த மயமாயிருந்தது. காயங்களின் வலி அதிகப்பட்டுக் கொண்டிருந்தது.

அச் சமயத்தில் லக்ஷ்மீ பாய் தமது அருமைப் பாலகன் தாமோதர ராவை அருகிலமரச் செய்து, அவரது முகத்தை உற்று நோக்கிய வண்ணம் இறைவனை இறைஞ்சித் தமது இருபத்தி மூன்றாவது வயதில் இன்னுயிர் நீத்து வீர சுவர்க்க மெய்தினார். உடனே ராமசந்திர ராவ் அவர்கள் லக்ஷ்மீ பாய் கட்டளையிட்டிருந்தபடி அவரது உடலை அக் குடிசைக்கு அருகில் காஷ்டத்திலிட்டுத் தீமூட்டித் தகனம் செய்து தமது கடமையை நிறைவேற்றினார்.

அவ்வாறு ஜான்ஸி மகா ராணி லக்ஷ்மீ பாய் அவர்களின் சரித்திரம் முடிவடைந்தது. அதன் பின்னர் குவாலியர் கோட்டையை ஆங்கிலேயர் ஜெயித்ததும் பிறவும் சரித்திரம் கூறு நிற்கும். ஜான்ஸி ராணி நாமம் வாழ்க! அவரது தியாகம் வாழ்க!! அவரது வீரம் வாழ்க!!! வந்தே மாதரம்.

---

# ஆசிரியர் குறிப்புகள்.

## எமது வேலை

எமது பேனாவிற்கு சுமார் ஒரு மாதகாலம் ஓய்வு கொடுத்து விட்டு, எமது தாலுகா—பெரியகுளம் தாலுகா தொண்டர் திருக் கூட்டத்தாருடன் சேர்ந்து கொண்டிருக்கிறோம். நாம் தற்சமயத்தில் நோயுற்றிருக்கினும் கால் நடையாகவே தொண்டர்களுடன் நடந்து கிராமங் கிராமமாய்ச் சென்று பிரச்சாரம் செய்து வருகிறோம். கிராம ஜனங்களுக்குத் தேசீய விஷயங்களைப் போதிப்பது அவ ஸியமா யிருக்கிறது. எமது தாய் நாட்டினிடத்திலே நாம் கொண்ட பேரன்பே—எம்மில் தகதக வென்று எரிந்து கொண்டிருக்கும் தேசாபிமானமே எம்மை இவ்வாறு தொண்டு செய்யும்படி ஏவுகின் றது. தேசீய வேலையில் நாம் சந்தோஷத்தை அடைகிறோம், சாந்தி யைப் பெறுகிறோம். காலச்சக்கரத்தின் வேகத்தால் பொது ஜனங் கள் தேசீயத்திற்கு அதிகமாக ஆதரவு கொடுத்துக் கொண்டிருக்கி றார்கள் என்று மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றோம்.

பெரிய குளம் தாலுகா வளங்கள் பெருகியதாகும். பெரியகுளம் தாலுகாவில் தொண்டர் திருக்கூட்டத்தார் சுமார் ஒருமாத காலம் பிரச் சாரம் செய்ததின் பயனாக இத் தாலுகாவிலுள்ள அநேக கிராமங்கள் விழித்துக்கொண் டிருக்கின்றன. விரைவில் இத் தாலுகா தேசீய இயக்கத்தில் ஓங்கி உச்சம் பெறுமென்று எதிர்பார்க்கின்றோம்.

தேசீய விஷயத்தில் எம்முடன் ஒற்றுமைக்கும் நண்பர்கள் எமக்கு அதிகமாக ஊக்கம் கொடுத்திருந்தால், இன்னும் அதிகமாக வேலை செய்திருக்கலாம்; ஆயினும் சந்தர்ப்பமில்லாமற் போகவில்லை. காலத்தில் செய்யும் பணி ஞாலத்தில் உயர்ந்ததாகு மென்பதை யறிந்து நடக்குமாறு வேண்டுகின்றோம்.





ஸ்ரீமதி. சரோஜினி தேவி.





திண்டுக்கல் ஜில்லாக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியென்ற முறையில் இந்த ஜில்லாவில் மேலும் பிரச்சாரம் செய்யவேண்டியிருக்கிறது.

## "பாரதி"யின் தாமதம்

கிராமங்களில் அலைந்து திரிந்து கொண்டிருந்ததால் எமது குறிப்புகளை எழுத முடியவில்லை. பேறு வேலையுடன் ஓயாத பிரச்சார வேலையும் செய்யவேண்டிய காலம் வந்திருக்கிறது. தாமதத்தைத் தயவு செய்து மன்னிக்குமாறு வேண்டுகிறோம்.

## புதிய யுகம்

பெரும் பெரும் குழப்பங்களும், சண்டை சச்சரவுகளும், மாறுதல்களும் ஏற்பட்ட பிறகே நவீன யுகம் உதிக்கிறது. "எக் காலத்தில் அரசாங்கம் தவறிச் சரியற்ற வழியில் செல்லுகின்றதோ அக்காலத்தில் பொது ஜனங்கள் கிளர்ச்சி செய்வார்கள்" என்று அரசில்வாதி பர்க் (Burk) என்பவர் கூறியதுபோல, இந் நாடெங்கும் தீவிரமான கிளர்ச்சி உண்டாகிக் கொண்டிருக்கிறது. இந்தியாவில் இதற்கு முன் என்றும் கண்டிராத சுதந்திர தாகம் இந்திய மக்களுக்கு ஏற்பட்டிருக்கிறது.

இந்தியாவில் இன்று நாம் என்ன காண்கிறோம்? பல புதிய சட்டங்கள்—அடக்கு முறைச் சட்டங்கள்—அவசரச் சட்டங்கள் தாண்டவமாடிக் கொண்டிருக்கின்றன. இப் பாழும் சட்டங்கள் பல தேசபக்த சிரோன்மணிகளையும் சில சிறந்த வனிதா ரத்னங்களையும் விழுங்கிக் கொண்டிருக்கின்றன. தேச விடுதலைக்காக உழைக்கும் இத் தேசாபிமானிகளான சிந்தாமணிகள் கணக்கற்றுச் சிறை சென்று கொண்டிருப்பது பைத்தியத்தனமான காரியமல்ல. 'இந் நாடெங்கும் முன்னேற்றம் பெற வேண்டுமென்று ஏற்பட்டிருக்கும் அபிலாஷையை நான் நன்கு அறிவேன்' என்று க. த. இராஜப்பிரதி இர்வின் பிரபு கூறிய போதிலும், மறைந்து மறந்துபோன அடக்குமுறைச் சட்டங்களையும் அச்சுக்கூட வாய்ப் பூட்டுச் சட்டங்களையும் உண்டாக்கி உயிர் கொடுத்து அவைகளைத் தேசத் தொண்டர்களின் மீது பிரயோகிப்பதின் கருத்தென்ன! நாடெங்கும் அன்னிய அரசாட்சியின் பாரத்தை உணர்ந்து கொண்டிருக்கிறார்கள். நமது ஒப்பற்ற தலைவர் மகாத்மா காந்தி யடிகளையும் மற்ற சிறந்த தலைவர்களையும் சிறையில் அடைத்துவிட்டு வட்டமேஜை மகாநாட்டை நடத்துவதற்கு முயற்சிக்கிறார்கள். இது நகைப்பிற்கிடமான செய்கையேயாகும். இந்த வட்டமேஜை மகாநாட்டினாலும், சைமன் கமிஷன் அறிக்கையாலும் இந்தியாவில் சமாதானம் ஏற்படவா போகிறது? ஒருக்காலுமில்லை.

பாரதமக்கள் ஏன் எதற்காகக் கிளர்ச்சிகள் செய்துகொண்டிருக்கிறார்கள்? அவர்கள் என்ன வேண்டுகிறார்கள்? என்பதை அறிந்து அதற்குச் சரியான பரிகாரம் உடனே தேடவேண்டியதுதான் இப்பொழுது இந்திய அரசாங்கத்தின் முதல்வேலை யென்று நாம் எச்சரிக்கிறோம். நோய்க்குத் தகுந்தபடி மருந்து கொடுப்பதை முற்றிலும் விட்டுவிட்டு, வியாதியின் குறிகளையே நோய்களென்று தவறாக நினைத்து, அவைகளைத் தீர்க்க ஔஷதம் கொடுப்பதில் ஒருவிதப் பயனும் உண்டாகாது என்று கூறுகிறோம். இந்தியர்கள் இன்று சுதந்திரத்தை விரும்பி அதை அடைய அஹிம்ஸா முறையில் போராடிக்கொண்டிருக்கிறார்களென்று இந்தியச் சர்க்காரும் பிரிட்டிஷ் பார்லிமெண்டும் அறிந்து இந்தியர்களுக்குச் சுதந்திரம் கொடுக்க முன் வரவேண்டும். இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சாத்விகப் போராட்டம் சுதந்திரம் கிடைக்கப் பெற்றாலன்றித் தணியாது. இதனை—இச் சுதந்திர தாகத்தை அடக்க, அடக்குமுறையோ சிறைக் கூடங்களோ மிருக பலங்கொண்ட செய்கையோ சிறிதும் சாத்தியமானதல்ல. சிறந்த ஔடதம் சுதந்திரமே யென்பதை உணர வேண்டுகிறோம்

மாதங்களல்ல; வருடங்களுமல்ல; ஓர் நூற்றாண்டுக்கு மேலாகவே அரசாங்கத்தின் மாயப் பேச்சில் நம்பிக்கை கொண்டு, தனது அருமை மக்களின் உடல் பொருள் ஆவி அனைத்தையும் தகுந்த சமயத்தில் கொடுத்தும்—கொடுத்துக்கொண்டிருந்தும் உணராதவர்களாய், தனது நலமே பெரிதெனக் கருதியிருக்கும்போது, இந்தியா என்னதான் செய்யும்? இந்தியாவானது தற்போது பிரிட்டிஷாருக்கு ஓர் ரப்பர் பந்தைப்போல் அடக்கி ஆள ஆள கீழ்ப் படுத்தப்படுத்த உயரவே செல்லுவதாயிருக்கின்றது. இன்றைய நிலைமை—இந்தியாவின் சுதந்திர வேட்கை—உரிமைத் தாகம் மிக வீறுகொண்டெழுந்து வானத்தையும் முட்டும் தன்மைக்குச் சென்று இந்தியாவின் புத்திரர் அனைவர் கண்களையும் நன்கு திறந்து பூரண விழிப்பைக் கொடுத்திருக்கிறது. இதிலிருந்தே பாரத நன்னாட்டின் புதிய சகாப்தத்திற்கு ஆரம்பம்.

சர்வதேச ஒற்றுமையில் பெரிதும் ஆசைகொண்டு அதற்காக உழைத்துவரும் அறிஞர் தாகூர் அவர்களும் மிதவாதியான கனம் சாஸ்திரியாரும் பிரிட்டிஷாருக்கு எச்சரித்திருக்கிறார்கள். ஆயினும் என்? அவர்கள், தங்கள் வியாபாரப் போக்கையும் அதிகார தோரணையையும் இந் நெருக்கடியான சமயத்திலுங்கூட விடுகிறதாகத் தெரியவில்லை. இந்தியா நேச பான்மையிலேயே இன்னும் நடக்க விரும்புவதால், இச் சமயம் பிரிட்டிஷார் புத்திசாலித்தனமாக நடந்துகொண்டு இரு தேசங்களும் நன்மை யடைந்து மென்மேலும் அன்பு வளர்வதற்கு வழி திறக்கவேண்டியது அவஸ்யமாகும். அதுவே சிறந்த முறையா



கும். உலகம் இதனையே விரும்பும். பிரிட்டிஷாருக்கும் உலகில் இந்தியா விஷயத்திற் காட்டிய தயாள சிந்தைக்காக மேலும் தனி உயர் கௌரவமும் கிடைக்கும்.

## மகாத்மா காந்தி அவர்கள்.

மகாத்மா காந்தியடிகள் சபர்மதியிலிருந்து 72 தொண்டர்களுடன் தாண்டியில் உப்புச் சட்டமறுப்புச் செய்வதற்குச் சென்றார். சர்க்கார் அவருடைய வேலைகளை மிகவும் கூர்மையாகக் கவனித்துக் கொண்டிருந்தது. அப்பொழுது தலைவர்களை யெல்லாம் பிடித்துச் சிறையில் போட்டுத் தொண்டர்களை மட்டும் சும்மா விட்டுவிட்டது. உப்புச் சட்டமறுப்பு விஷயமான உணர்ச்சி தேச மெங்கும் அதி சீக்கிரத்தில் பரவி நாடு முழுவதும் தொண்டர்கள் தயாராகிக் கொண்டிருந்தார்கள்; இருக்கிறார்கள். அநேக இடங்களில் இதைப்பற்றியே பொதுக் கூட்டங்கள் கூட்டப்பட்டன. பத்திரிகைகளில் இதைப்பற்றியே வாதங்கள், அறிக்கைகள், சமாச்சாரங்கள். நாடெங்கும் பலமான கிளர்ச்சி தீவிரமாகப் பரவிக் கொண்டிருப்பதைச் சர்க்கார் தெரிந்து என்ன செய்வதென்று தெரியாது திகைத்து மகாத்மாவைப் பிடித்துச் சிறையில் வைத்தால் தேசியக் கிளர்ச்சி அடங்கிவிடுமென்று தவறாக ஆலோசித்து அடக்கு முறையை அடிகள் மீது பிரயோகிக்க ஆரம்பித்தார்கள். ஜில்லா மாஜிஸ்டிரேட்டும், ஜில்லா போலீஸ் சூப்பிரண்டும், டிப்டி போலீஸ் சூப்பிரண்டும் சேர்ந்து ஆயுதங்கள் தாங்கிய 20 போலீஸ்காரருடன் மேமீ 4உயன்று நடு ராத்திரி 12¾ மணிக்கு ஜலால்பூரிலிருந்து காராடிக்கு வந்து காந்தி மகாத்மா ஆழ்ந்து தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது அவரிடம் அணுகி மின்சாரக் கை விளக்கால் வெளிச்சத்தை அவர் முகத்தில் அடித்து அவரை எழுப்பி 1827-ம் வருத்திய 25-வது பிரிவுப்படி அவரை கைதி செய்து அவருக்குக் காலைக் கடன்களை முடிப்பதற்கு மட்டும் சிறிது ஓய்வுகொடுத்துச் சரியாக ஒரு மணிக்குப் பேர்போன ஏர்வாடா அரண்மனைக்கு இட்டுக்கொண்டு போய்ப் பாதுகாப்பில் வைத்திருக்கிறார்கள்.

பிடிக்கமுடியாத, அகப்படாத பெரிய திருடர்களை இரகசியமாய்ப் பிடிப்பதுபோன்று 33 கோடி மக்களை ஆளும் பெரிய ஏகாதிபத்யம்-வல்லரசுகளில் ஒன்றாகிய பிரிட்டிஷ் அரசாங்கம் நடுராத்திரியில் உலகத்துப் பெரியாராகிய மகாத்மா காந்தி அடிகளை அடக்குமுறைக்கு ஆளாக்குவது கேவலம்! மகா கேவலம்!! காந்தி மகாத்மா யார்? பொறுமையின் குன்றம்—சாந்த சொரூபம்—சத்திய அவதாரம்-அன்பின் வடிவம்-தருமத்தின் உறைவிடம்-சர்வ மதங்களுக்கும் இருப்பிடம்-ஏசுநாதருடைய இருதயமும் கிருஷ்ண பரமாத்மாவினது மூளை

யும் புத்த பகவானது ஜீவகாருண்யமும் முகம்மது நபி நாயகத்தினது வைராக்யமும் குரு நானக்கினது ஹிந்து முஸ்லீம் சமாசமும் லெனினது சமத்துவமும் கொண்ட உலகப்பெரியார். இவரது ஆத்மாவைப் பிரிட்டிஷ் சர்க்கார் ஒருக்காலும் அடக்கி வைத்திருக்க முடியாது; ஆனால் ஊன், எலும்பு, நரம்பு, தோல் முதலியவைகளால் ஆகிய அவரது உடம்பைச் சிறையுள் வைத்திருக்கிறார்கள். இவரை இவ்வாறு சிறையில் பாதுகாப்பில் வைத்திருந்தால் இந்தியாவில் தேசீயம் அணைந்துவிடாது. ஆனால் அவருடைய ஆத்மீக சக்தியானது பதினாயிரம் மடங்கு அதிகமாய் மின்சாரவேகத்தில் ஒவ்வொரு இந்தியனுடைய உள்ளத்திலும் இப்பொழுது பாய்ந்துகொண்டிருக்கிறது. மகாத்மா காந்தி ஒவ்வொரு இந்தியரையும் காந்தீயத்தில் ஈடுபடும்படி செய்து காந்தியாக்கிவிட்டார். காந்தி எங்கும் காந்தி வீசட்டும்!

## கனம் படேலின் ராஜிநாமா

இந்திய சட்டசபைத் தலைவர் கனம் படேல், சட்டசபையைச் சரியாக நிர்வாகம் செய்வதில் சமர்த்தர். எல்லாக் கட்சிக்காரர்களும் விரும்பும்படி நடப்பவர். இவர் இந்த ஸ்தானத்திலிருந்ததால் இந்தியாவுக்கு மிகுந்த நன்மைகள் உண்டு. இவர் இந்திய சட்டசபையில் தலைமை வகிக்கும் பொழுது சில அநியாய அடக்குமுறைச் சட்டங்களை ஆதரிக்காது சர்க்காரின் அட்டூழியங்களைக் கண்டித்திருக்கிறார். தற்சமயத்தில் சர்க்காரின் போக்கில் வெறுப்புற்று க. த. இராஜப்பிரதிக்கு இந்திய சர்க்காரின் எதேச்சாதிகாரங்களை விளக்கிக் காட்டி, ஒரு நீண்ட கடிதம் அஞ்சா நெஞ்சத்துடன் எழுதித் தனது பதவியை ராஜிநாமா செய்துவிட்டார். இப்பொழுது தேசீயத்தில் மிகுந்த வேலை செய்துகொண்டிருக்கிறார். இவர் லார்டு இர்வின் அவர்களுக்கு எழுதிய இரண்டு கடிதங்களும் தேசீய தஸ்தாவேஜ் ஆகும். தலைவர் பதவியை நிஷ்பட்சபாதகமாகவும் தேசநன்மையை முன்னிட்டு எதையும் விட்டுக் கொடுக்காமல் தனது கடமையை நிறைவேற்றியதைப் பற்றியும் தனது முதற் கடிதத்தில் குறிப்பிட்டிருக்கிறார். இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்க வழிதேட வேண்டும்; இல்லாவிடில் வைசிராய் தனது பதவியை ராஜிநாமா செய்து விடவேண்டுமென்று யோசனை 2-வது கடிதத்தில் கூறுகிறார். கனம் படேல் அவர்களின் வீரத்தையும் தீரத்தையும் போற்றுகிறோம்.

## மகாத்மாவிற்குப் பிறகு ஜனாப் அப்பாஸ் தயாப்ஜி

பெருந் தேசபக்தர் பத்ருடீன் தியாப்ஜி வழிவழி தோன்றியவரும் சென்னை ஹைகோர்ட்டில் சொற்பகாலம் ஜட்ஜ் வேலை பார்த்தவரும் பரோடா ஹைக்கோர்ட்டில் தலைமை நீதிபதியாகவிருந்து உபகா



ரச் சம்பளம் பெற்றுவருபவருமாகிய ஜனாப் அப்பாஸ் தயாப்ஜி என்ற பெரியார் சத்தியாக்கிரகத்தால் கவரப்பட்டு, தனது குடும்பத்தாருடன் சபர்மதி ஆசிரமத்திற்கு ஓடிவந்து உப்புவரிச் சட்டமறுப்புக்கு டாண்டி என்ற இடத்திற்கு மகாத்மா சென்றபொழுது, அவரைப் பின்பற்றியே சென்றார். தம்மை கைதி செய்தபின் தமது பதவியை ஏற்று வேலை செய்யுமாறு ஜனாப் தயாப்ஜியை மகாத்மா கேட்டுக்கொண்டார். மகாத்மா காந்தி கைதியான மறுநாளே கனம் தயாப்ஜி தலைமைப் பதவியேற்று மகாத்மா காந்தி அடிகள் ஆரம்பித்த வேலையைப் பூர்த்தி செய்ய எண்ணி தர்சனா உப்பளத்தைத் தாக்குமாறு புறப்பட்டார். காராடிக்கருகில் குஜராத் பெருங் கிழவரும் பெரிய அறிஞருமான ஜனாப் அப்பாஸ் தயாப்ஜி அவர்களும் அவருடன் கூடவிருந்த 59 தொண்டர்களும் கைதி செய்யப்பட்டு 6மீ தண்டிக்கப்பட்டார்கள். கோர்ட்டில் கொடுத்த பெரியார் தயாப்ஜியின் வாக்குமூலம் போற்றத் தக்கது. பெரும் கிழவனார் தயாப்ஜி அவர்களின் பெரிய தியாகம் வாலிபர்களின் ஊக்கத்தைப் பெருக்குமென்று நம்புகிறோம்.

## ஸ்ரீமதி. சரோஜினி தேவியார்

தனது 13-வது வயதிலேயே கவிதா ஊற்று பொங்கிப் புரண்டு ஓடிய உள்ளமுடையவரும் கவிகள் பாடுவதில் "இந்தியக் கோகிலம்" என்று உலக முழுவதும் பெயர்பெற்ற ஸ்ரீமதி. சரோஜினி அம்மையார் மகாத்மா காந்தியடிகளைப் பின்பற்றி ஜனாப். தயாப்ஜி அவர்கள் சிறைக்குச் சென்ற பிறகு அவருடைய பதவியை ஏற்று உப்புப் போரைத் திறமையுடன் நடத்திக் கொண்டிருக்கும்பொழுது கைதி செய்து 9 மாதம் வெறுங் காவலாகத் தண்டிக்கப்பட்டிருக்கிறார்.

நவீன பாரதத்தின் கவி அரசி— உலகம் அறிந்த உத்தமப் பெண் மணி— பம்பாய் "தாஜ் மஹால் ஓட்டலி"ல் அநேக வசதிகளுடன் இராணி போல் வாழ்ந்து வந்த தேசபக்த சிந்தாமணி- கான்பூரில் கூடிய இந்திய மாபெரும் சபையின் அரியாசனமென்னும் பொன்னாசனத்தில் அமர்ந்து அக்ராசனம் வகித்த சூடாமணி- பேரறிஞர்கள் போற்றும் பாக்கள் பாடிய பாரதக் குயிலாகிய சரோஜினி தேவியார் இன்று சிறைக் கூண்டில் அடைபட்டு தேச விடுதலைக்காகத் தவம் செய்துகொண்டிருக்கிறார்.

அவர் தர்சனாப் போர்க்களத்தில் எவ்வளவோ கஷ்டமடைந்தார். மாடமாளிகைகளில் வசிக்கும் பழக்கமுடைய தேவியார் ஒரு நாள் முழுவதும் யாதொன்றும் அருந்தாமல் ஹட விரதம் பூண்டு தகிக்கும் வெயிலில் நின்றுகொண்டிருந்தார். பெண் என்று தன்னைப் பரிகாசம் செய்த போலீஸாரைப் பார்த்து, "நான் ஒரு பெண்ணாக இங்கு வந்து

நிற்கவில்லை; ஒரு சேனாதிபதியாகவே வந்திருக்கிறேன்'' என்று கூறி அதிகாரிகளை அடக்கினாராம். மகாத்மா, ஜனாப் தயாப்ஜி, ஸ்ரீமதி. சரோஜினி தேவி, பண்டித ஜாவேரிலால் நேரு, ஸ்ரீமான். சென்குப்தா முதலிய அரிய பெரிய தேசபக்தர்களெல்லாம் குற்றவாளிகளாக அரசாங்கத்தின் கண்ணுக்குப் புலப்படுகிறார்கள். "காமாலைக் கண்ணனுக்குக் கண்டதெல்லாம் மஞ்சள் நிறம்'' என்ற பழமொழிபோல் சர்க்காருக்கு உண்மை மனிதர் எவரைக் கண்டாலும் பிடிக்கிறதில்லை. அம்மையார் வேலை செய்து அனுத்துவிட்டார். அரசாங்க அரண்மனையே ஓய்வு பெறத் தகுதியான இடம்.

தேவியாரின் தியாகம் எத்தனையோ யுவர்களுக்கும் பெண்மணிகளுக்கும் நூதன ஆவேசத்தை உண்டாக்கி தேசிய வெறியைக் கிளப்பப் போகிறது!

## அவசர அச்சுச் சட்டம்

மே. த. வைசிராய் அச்சுச் சட்டத்தைத் திடீரெனத் தோற்றுவித்துப் பத்திரிகைகளை அடக்கி வருவது முறையாகாது. பத்திரிகைகளை அடக்கும் அவசரச் சட்டத்தைக் கொண்டு இந்தியர்வின் உண்மை அறிவிப்பை அடக்குவதால் மட்டும் இந்தியாவில் தேசிய இயக்கம் அடங்கிவிடாது. எந் நாட்டில் பத்திரிகைகள் இல்லையோ அந் நாடு பேச்சற்ற ஊமை நாடென்றே சொல்ல வேண்டும்; எந் நாட்டில் பத்திரிகைகளை அடக்குகிறார்களோ அந் நாட்டில் வாக்குச் சுதந்திரத்தை அடக்கியதாகவே கருத வேண்டும்

> "நேராகவோ, மறை பொருளாகவோ, சமிக்கையாகவோ, குறிப்பாகவோ, உருவக மொழியாகவோ, உட் கருத்தாலோ, வேறு எந்த விதத்தாலோ சில செயல்களை எழுப்பக்கூடிய எதையும் பிரசுரிக்கலாகாது''

என்று அவசர அச்சுச் சட்டத்தின் 4-வது பிரிவில் கூறப்பட்டிருக்கிறது.

இச் சட்டத்தின்படி பத்திரிகைகள் நடத்த முடியவே முடியாது. சர்க்காருக்குத் துதி பாடும் பத்திரிகைகளுக்கு இப் புதிய சட்டத்தால் கொண்டாட்டந்தான்.

''ஹிந்து''ப் பத்திரிகாசிரியர் ஸ்ரீமான். ரங்கசாமி அய்யங்காரின் அக்ராசனாதி பத்தியத்தின்கீழ் பம்பாயில், பத்திரிகாசிரியர்கள் மகாநாடு ஒன்று சமீபத்தில் நடந்தது. அதில் தலைவர் கூறி யிருப்பது நேர்த்தியா யிருப்பினும், சர்க்கார் கேட்கும் தொகையை முதலாவது கட்டிவிட்டுப் பத்திரிகை நடத்தலாமென்றும் முதல் ஜாமீனைப் பறிமுதல் செய்துவிட்டு இரண்டாவது தடவை ஜாமீன் கேட்டால் ஜாமீனைக் கொடுக்க மறுக்க வேண்டுமென்றும் கூறி யிருப்பதை நாம் ஒப்புக்கொள்ள முடியாது. ஒரு சிறிய பத்திரிகைக்கு 1000 ரூபாய் ஜாமீன் கேட்டால் என்ன செய்வது? அதை அச்சிடும் அச்சுக்கூடத்திற்கு 1000 ரூபாய் ஜாமீன் வேண்டுமென்றால் யார் அப் பத்திரிகையை அச்சிடப் போகின்றார்கள்? ஜாமீன் கட்டினால் ஏதோ ஒரு அற்ப காரணங் காட்டி ஜாமீனை அரசாங்கத்தார் பறிமுதல் செய்து அரசாங்கத்தின் பொக்கிஷத்தைப் நிறப்பி விடுவார்கள். ஜாமீன் கேட்டவுடனே பத்திரிகையை நிறுத்திவிடுவதுதான் சாத்தியமானதும் முறையானதும் புத்திசாலித்தனமாக நடந்து கொண்டதுமாகும். அன்றி இம் மகாநாட்டின் தீர்மானத்தைப் பின்பற்றி நடந்தால் உண்மைப் பத்திரிகைகளுக்குச் சங்கடங்கள் உண்டாகும். இப் பத்திரிகாசிரியர்கள் மகாநாட்டில் நல்ல முடிவைச் செய்யத் தவறிவிட்டதால் உண்மைப் பத்திரிகைகளுக்குத் துன்பங்கள் உண்டாக ஆரம்பித் திருக்கிறதென்று நாம் வருந்தாதிருக்க முடியவில்லை. தலைவர் சிறிய பத்திரிகைகளையும் மாஸிகைகளையும் கவனித்து யாவரும் ஒப்புக்கொள்ளும் தீர்மானத்தைச் செய்திருப்பின் மிகு விரைவில் இச் சட்டம் ஒழியும் என்பதே நமது கருத்து.



## வேதாரண்யப் போர்க் களம்

சின்ன காந்தி யென்று இந்திய நாடெங்கும் பெயர் பெற்ற தமிழ் நாட்டுத் தலைவர் ஸ்ரீமான் ச. இராஜகோபாலாச்சாரியார் வேதாரண்யம் சென்று உப்புச் சட்டத்தை மீறியதால் 9 மாதம் தண்டிக்கப்பட்டு தேச சுதந்திரத்திற்காகச் சிறையில் பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார். அதற்கு அடுத்தபடியாக வேதாரண்யத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான். சந்தானம் அவர்களுக்கும் தண்டனை. இவருக்குப் பின் அந்த ஸ்தானம் வகித்த மட்டப்பாறை ஸ்ரீமான். வெங்கிட்டராமய்யர் அவர்களுக்கும் $7\frac{1}{2}$ மாதம் சிறைவாசத் தண்டனை. அவருக்குப் பின் வந்த ஸ்ரீமான். சுப்ரமண்யம் அவர்களுக்கும் தண்டனை ஸ்ரீமான். N. S. வரதாச்சாரி அவர்களுக்கும், மதுரை தேச பக்தர் ஸ்ரீமான். வைத்தியநாத அய்யரவர்களுக்கும், இ. பு. 144 உத்திரவை மீறியதாக தனித்தனி $7\frac{1}{2}$ மாதம் வெறுங் காவல் தண்டனை. சென்னை ஸ்ரீமதி. ருக்மணியம்மாள் அவர்களுக்கும் 1 வருஷம் வெறுங் காவல் தண்டனை. இன்னும் எத்தனையோ பேருக்குத் தண்டனை! வேதாரண்யத்தில் போலீஸ் ராஜ்யமாயிருக்கிறது. போலீஸ்காரரின் நடத்தை ஜீவகாருண்யமற்றதா யிருக்கின்றது. இங்கு தமிழரின் அதுவும் பாண்டி நாட்டினர் வீரம் பொங்கித் ததும்பிக் கொண்டிருக்கிறது. தொண்டர்களின் உறுதியைப் பெரிதும் போற்றுகிறோம். வேதாரண்யம் தமிழ் நாட்டாரின் கவனத்தைக் கவர்ந்துவிட்டதென்றே சொல்ல வேண்டும்.

## பண்டித மதன் மோகன மாளவியா

சென்ற 25 வருடங்களாக இந்திய சட்ட சபையில் ஸ்தானம் வகித்து இந்தியாவுக்கு மிதவாதக் கொள்கையினால் சமாதானமாக சாதகம் பெற்றுவிட நினைத்து, அரசாங்கத்தையும் காங்கிரஸ்காரர்களையும் ஒரு நிலைப்படுத்திவிட முயற்சித்துவந்த பண்டித மதன் மோகன மாளவியா அவர்கள் அரசாங்கத்தின் தற்போதைய போக்கைக் கண்டு நம்பிக்கை யிழந்து வெறுப்புற்று தனது ஸ்தானத்தை ராஜீனாமா செய்த அக் கடிதத்தில், தான் 25 வருடங்களாகச் சமாதானமுறையில் அரசாங்கத்தினிடம் நடந்து வந்ததையும் இந்தியாவின் நிலைமையையும் விருப்பத்தையும் நன்குவிளக்கிக் காட்டியிருக்கிறார். அவர் பிரிவு அரசாங்கத்திற்குத் தற்போதைய நிலையில் பெரும் ஆபத்தென்றே சொல்ல வேண்டும். இவர் ராஜிநாமாச் செய்யவே இவர்தம் கட்சியார்களும் கட்சிகளொன்றுமில்லாதவர்களுங்கூட ராஜிநாமா செய்துவிட்டார்கள். ராஜிநாமா தொகை சட்டசபைமுதல் மற்ற சாதாரண யூனியன் போர்டு வரையும் பரவி நாளுக்கு நாள் பெருகிக் கொண்டு வருகின்றது. இதுவன்றி பிரபல மிதவாதிகளாகிய ஸர். தேஜ்பகதூர் சாப்ரூ, ஸர். சேதல்வாட், ஜனாப். முகமதலி ஜின்னா போன்றவர்கள்கூட அரசாங்கத்தினிடம் தற்போது கசப்புற்று தங்கள் அபிப்பிராயங்களைத் தனித்தனியே அவ்வப்போது தெரிவித்து வருகிறார்கள். அரசாங்கம் இவ்வித அறிவாளிகளின் புத்திமதிகளைத் தள்ளிவிட்டு எவ்விதம் நேர்மையாய் நடைபெற முடியும்? பிரபல தலைவர்களின்றி வட்டமேஜை மகாநாடு கூடுவதானால் விளையும் பயன் என்ன? இவைகள் ஒன்றையுமே கவனிக்காது காங்கிரஸ் தலைவர்களில் பெரும்பாலோரைச் சிறையிட்டு விட்டு வட்டமேஜை மகாநாட்டைக் கூட்ட முயலுவது அரசாங்கத்திற்கு மேலும் பெரும் தோல்வியே சம்பவிக்கும் என அறிவிக்கின்றோம்.

நாட்டில் ஓர் கட்சியை எதிர்த்து அரசை நடத்திவிடலாம். ஆனால், எல்லா கட்சிகளையும் தனிப்பட்ட அறிஞர்களையுங்கூட அரசாங்கம் எதிர்ப்பதாயிருந்தால் அது எவ்வளவு பெரிய அபாயம்! தேசத்திற்காகவே அரசாங்கம்-அரசாங்கத்திற்காகவே தலைவர்கள்; அரசாங்கமும் தலைவர்களும் ஜனங்களுக்காகத்தான். இக் கொள்கையை அரசாங்கம் மட்டும் மறந்து அவர்கள் அறிவிப்பை, விருப்பத்தை உல்லங்கனம் செய்து தனியாகச் செல்லுவதென்றால், இவ்விருபதாம் நூற்றாண்டில்-நாகரீகமுடைய இக் காலத்தில்—ஒவ்வொருவரும் சுதந்திரத்துடனிருக்க விரும்பு மிக்காலையில்-அதுவும் ஏகாதிபத்தியமாகிய பிரிட்டிஷ் அரசாங்கம் தன் கீழ் விசுவாசத்துடன் நடந்துகொள்ளும் ஓர் நாட்டை இவ்விதம் நடத்திச் செல்லுவதானால் அபாயத்தின் மேல் அபாயமல்லவோ வந்து முடியும்? எதையும் ஆர அமர ஆய்ந்து ஆலோசித்து முடிவுக்கு வருவதே சிலாக்கியம். சர்க்கார் இதனை அனுசரிக்குமா?

[illegible] கா. நமச்சிவாய முதலியார் பதிப்பித்த

## தொல்காப்பியம்

| | |
|---|---|
| பொருளதிகாரம், இளம்பூரணம்— அகத்திணையியல்; புறத்திணையியல் ... | 3 0 0 |
| சொல்லதிகாரம், இளம்பூரணம் ... ... | 3 0 0 |
| எழுத்து, சொல், பொருள் (மூலம்) ... ... | 2 0 0 |
| சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம் ... ... | (அச்சில்) |
| திருவாசகம் திருக்கோவையார் ... ... | 1 12 0 |
| தணிகை புராணம் ... ... ... | 5 0 0 |
| திருஞான சம்பந்தர் (வசனம்) ... ... | 0 10 0 |
| திருநாவுக்கரசர் (வசனம்) ... ... ... | (அச்சில்) |

கா. நமச்சிவாய முதலியார் எழுதிய

## இயற்கைப் பொருட் கதைகள்—

| | |
|---|---|
| (இதில் குளவி, சிலந்தி, வண்டு, பட்டாம் பூச்சி, வெட்டுக்கிளி, எறும்பு, ஊங்காரப் பறவை, தும்பி, தேனீ, [illegible], ஆந்தை முதலியவைகளின் விஷயங்கள் விவரிக்கப்பட்டிருக்கின்றன) | 0 8 0 |

## குமார வாசக புத்தகங்கள்—

| | |
|---|---|
| முதற் புத்தகம் முதற் பகுதி ... ... | 0 2 0 |
| முதற் புத்தகம் இரண்டாம் பகுதி ... ... | 0 2 0 |
| இரண்டாம் புத்தகம் ... ... ... | 0 3 0 |
| மூன்றாம் புத்தகம் ... ... ... | 0 4 0 |
| நான்காம் புத்தகம் ... ... ... | 0 5 0 |
| ஐந்தாம் புத்தகம் ... ... ... | 0 6 0 |

## தேவை

## 'பாரதி'க்கு

சந்தா—விளம்பரம் சேர்ப்பதற்கு

ஏஜெண்டுகள் தேவை.

மானேஜர், "பாரதி."

## "லோகோபகாரி"

பழமையும் புதுமையும் வாய்ந்த வாரப் பத்திரிகையை நீங்கள் விரும்பினால் லோகோபகாரிக்குச் சந்தாதாரராய்ச் சேருங்கள். உலகத்துச் செய்திகளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளி வருகிறது. முப்பத்தைந்தாவதாண்டு நடக்கிறது.

பத்திராதிபர்:பரலி— சு. நெல்லையப்ப பிள்ளை,
லோகோபகாரி பத்திரிகாலயம்,
சிந்தாதிரிப் பேட்டை, சென்னை.

வருஷ சந்தா ரூபாய் நான்கு.



## "கலா நிலயம்"

இது ஓர் இலக்கிய வாரப் பத்திரிகை.


கலையுணர்வும், கலா ஞானமும் பெறுவதற்கு இது ஒரு நல்ல கருவியென்றால் மிகையாகாது. இதில் இலக்கிய வளர்ச்சிக்குரிய கட்டுரைகளே மலிந்து வருகின்றன. கம்ப ராமாயணம், தமிழ்ப் பீடம், அகப்பொருள் வரலாறு, செந்தமிழ் நாவல், ஆங்கிலப் புலவர்களாகிய கார்லைல், ரஸ்கின், எமர்ஸன் முதலியோரின் கட்டுரை மொழி பெயர்ப்புகள், மற்றும பல விஷயங்கள் அவ்வப்போது வெளிவரும்.

சந்தா விபரம்.

சந்தா உள்நாட்டிற்கு ரூ. 7-8-0. வெளிநாட்டிற்கு ரூ. 9-0-0. தனிப்பிரதி அணா 3. ஸ்டாம்பு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

விலாசம்:—மானேஜர்,
11, வெள்ளாளர்தெரு, புரசைபாக்கம், சென்னை.

விலை சரசம்! ரங்கூன் புது வயிரம் சரக்கு நயம்!!



நிறம் ஜொலிப்பு கெட்டி உழைப்பு பார்வை மேன்மை எல்லாவற்றிலும் சிறந்தது. ...ரத்திற்குத் தேயா... உண்மை வயிரத்திற்கு ஒப்பானது பெருத்த விற்பனை யாவது. காரட் 1-க்கு 4 ரூ. முதல் 6 ரூ. வரையுள்ள தினுசுகளிருக்கிறது. மற்றும் இமிடேஷன் புஷ்பராகங்களும் ஏராளமாய்க் கிடைக்கும்.

விலாசம்:— அ. பொன்னுச்சாமி செட்டியார், சராப்புக்கடை,
பெரியகடை வீதி, திருச்சி.

## NEW BOOKS OF RESEARCH

By. Prof. PURNALINGAM PILLAI, B. A., L. T.

A FEW COPIES ON HAND.

**ENGLISH**

**Ravana the Great**
Sewed As. 12. Cloth R. 1.
**Critical Studies in Kural.**
Sewed R. 1-4. cloth R. 1-8
**Studies and Critiques**
in Modern English
Literature Re. 1.
**Stories from Goldsmith.**
Sewed As. 12 Limp Re. 1.

**Collectanea:**
Prose and Verse. As. 12.
(In print)

**TAMIL**

**Tappili, or The Faultless.**
(Essays) As. 10
**Marutthuvan Makal or**
**The Doctor's Daughter.**
(Novelotte) As. 6.
**Katturai Kalanjiam** (55 topics) As. 12.

Terms—11 copies for 10 purchased at a time. Liberal discount for large orders. No books on commission sale.

Apply to:—THE MANAGER, The BIBLIOTHECA,
Munnirpallam, Tinnevelly Dt., South India.

## உங்கள் விலாசம்

உயர்ந்த கடிதத்தில் "பாரதி"யின்
அளவில் 100 பிரதிகள் அடங்கிய
பேட் 1-க்கு ரிஜிஸ்டர் தபாற்
செலவுட்பட ரூ. 1—8—0 தான்;
பேட் 2-க்கானுல் ரூ. 2—8—0.

உங்கள் ஆர்டரில் விலாசத்தைத்
தெளிவாக
தமிழா ஆங்கிலமா வென்பதையும்
எவ்விதக்
கலர் பேப்பரிலென்பதையும்
பணத்துடன் குறித்தனுப்புக.

மற்றத்தேவைகளுக்கும்கீழ்க்கண்ட
விலாசத்திற் கெழுதுக.

மானேஜர்,
ஆனந்தா பிரஸ்,
உத்தமபாளையம், S. I.



## வியாபார
## விருத்திக்கு
## விளம்பரம்
## செய்தல்
அவசியமாகும்.

இலாபமடைந்து க்ஷேமம்பெற
விரும்புவோர்
விளம்பரஞ் செய்க.

## விளம்பரமின்றேல் : :
## : : வியாபாரமில்லை.

**Wake up!** **Insure you must!!**

ஜெனரல் அஷ்யூரன்ஸ் சோஸைட்டி லிமிடெட், ஆஜ்மீர்.

*இது மிக்க பழமையானதும், நம்பிக்கையுள்ளதும், அதிக லாபம் தரக்கூடியதும், ஏராளமான பாலிசிகளையுடைய ஸ்தாபனமும் ஆகும். வருஷத்திற்கு ரூ. 1000 மதிப்புள்ள பாலிசிக்கு லாபம் ரூ. 22—8—0 கொடுத்திருக்கும் முதன்மையான கம்பெனி இதுவே. இன்றே இன்ஷியூர் செய்யுங்கள்.*

**கம்பெனியின் விசேடங்கள்:—**

*ஐவேஜ் பூராவும் கவர்ன்மெண்டு உத்திரவாதம் பெற்றது. செலவோ குறைவு. லாபமோ அதிகம்.*

*சந்தாதார்களின் நன்மையைக் கருதி நடத்திவரும் கம்பெனி. இதில் ஒரு பாலிசி எடுத்தால் அது அழிவில்லாப் பொக்கிஷமாகும்.*

*கம்பெனியின் சட்ட திட்டங்கள் மிகவும் இலகுவானவை. அவைகளைப் பற்றித் தெரியவேண்டுமானால் அடியிற்கண்ட விலாசங்களுக்கு எழுதுங்கள்.*

*சீப் ஏஜண்டு:-*

**S** வேங்கட்டராம அய்யர், B.A., L.T., புதுத் தெரு, மதுரை.

*லோகல் ஏஜண்டுகள்:—*

**M.** பரிமணம் பிள்ளை, *உத்தமபாளையம்,* P. O.

**R.** வேங்கட்டராமய்யர், *காளீஸ்வர ரைஸ் மில்,* *உத்தமபாளையம்.*

# "பாரதி"

## ஓர் தேசிய மாஸிகை.

சந்தா விபரம்.

உள் நாடு ரூ. 2—0—0

வெளி நாடு ... 2—8—0

*அல்லது 4 ஷிலிங்*

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. எம் மாதத்திலிருந்து சந்தாதாரரானாலும் வருட ஆரம்பமாகிய ஜனவரி மாதத்தி லிருந்தே பத்திரிகை அனுப்பப்படும்.

*விலாசம்:—*

மானேஜர், "பாரதி,"

உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

**Edited and Published by R. NARAYANASWAMI.**

**Printed at ANANDA PRESS, Uthamapalayam, Madura Dt**